28வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com







நதி: 28 பாலம்: 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2018




# இந்தியப் பயணத்தில் ஒரு பில்லியனுக்கு வர்த்தக ஒப்பந்தங்கள்

கனேடியப்பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் இந்தியாவிற்கான முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தின்போது 66 புதிய ஒப்பந்தங்களும் ஒரு பில்லியன் டொலருக்கான வர்த்தக உடன்படிக்கைகளும் செய்யப்பட்டன. இதனால் 5,800 பேருக்கான வேலை வாய்ப்புகள் கனடாவில் உருவாக்கப்படும்.



ஒரு வாரகால இந்தியப் பயணத்தை கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ, அவரின் மனைவி சோபி கிரஹரி அவர்களின் பிள்ளைகள் சேவியர் (Xavier) பத்து வயது, எலா கிறேஸ் (Ella-Grace) ஒன்பது வயது மற்றும் ஹட்ரியன் (Hadrien) மூன்று வயது ஆகியோரும் அமைச்சர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் 2018 பெப்ரவரி 17இல் மேற்கொண்டனர்.

இப்பயணத்தில் கனேடியப் பிரதமருடன் உள்கட்டமைப்பு அமைச்சர் Amarjeet Sohi, சிறு வணிக மற்றும் சுற்றுலா அமைச்சர் Bardish Chagger, புதிய கண்டுபிடிப்புகளுக்கான அமைச்சர் Navdeep Bains, விஞ்ஞானத்திற்கான அமைச்சர் Kristy Duncan பயணம் செய்தனர். இவர்களைவிட பாதுகாப்பு அமைச்சர் Harjit Sajjan மற்றும் வெளியுறவு அமைச்சர் Chrystia Freeland இன்னும் பத்துக்கு மேற்பட்ட கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவில் கனேடியப் பிரதமரின் ஏழுநாள் பயணங்களின்போது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கலந்து கொண்டனர்.

கனடாவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்யும் பருப்பு வகைகளுக்கு இந்தியா கடந்த இரண்டு மாதங்களில் அதிக வரி விதித்ததால் கனேடியப் பிரதமரின் இப் பயணம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக கனேடிய விவசாயிகளால் எதிர்பார்க்கப்பட்டது. ஜஸ்ரின் ரூடோ கனடாவின் பருப்பு வகைகள் ஏற்றுமதிக்கு ஒரு நிரந்தர நிலையான வியாபாரச்சந்தை உருவாக்குவது பற்றி இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்ப்பதாகப் பழமை வாதக்கட்சியின் சர்வதேச வியாபாரம் சம்பந் தமாகக் கருத்துத் தெரிவிக்கும் Dean Allison ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

கனடாவில் உற்பத்தியாகும் பருப்புவகைகளை அதிகஅளவில் இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா இருந்து வருகிறது. அது அண்மையில் Chickpeasஇற்கு 40%மும். Peasஇற்கும் ஏனைய சில பருப்புவகைளுக்கும் 50%ஆகவும் இறக்குமதி வரியை அதிகரித்தது. இது கனேடிய ஏற்றுமதியில் பாரதூரமான விளைவை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறிருக்கையில் கனேடியப் பிரதமர் தன்னுடன் விவசாய அமைச்சர் Lawrence MacAulayஐ இதைப்பற்றிப் பேச ஏன் அழைத்துச் செல்லவில்லை எனப் பழமை வாதக்கட்சி விமர்சித்து இருந்தது.

கனேடியப் பிரதமர் இந்தியப் பயணத்தின் போது தனது குடும்பத்தினருடன் தாஜ்மகால், மகாத்மா காந்தி வாழ்ந்த மற்றும் தனது உப்புச் சந்தியாக்கிரகத்தை ஆரம்பித்த சபர்மதி ஆச்சிரமம், இந்தியாவில் உள்ள இந்துக்களின் பெரிய கோயில்களில் ஒன்றான சுவாமி நாராயணன் ஆலயம், சீக்கியரின் புனிதத் தலமான பொற்கோயில், இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பள்ளிவாசலான Jama Masjid Mosque மற்றும் டெல்கியில் உள்ள மிகப்பெரிய கத்தோலிக்கத் தேவாலயமான Sacred Heart Cathedral என்பன வற்றிற்கும் சென்றிருந்தார்.

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)




























Sold in 2 Weeks
Neilson/Finch, Huge Unit - 2nd Flr Must See, BR:3+1, WR: 2 Full, All Utilities Inc. In Maint. Fee ($778)
$839,900
Detached 2-Storey, Pickering Brand New, Never Lived BR:3, WR:4, 2876 SF
$349,000
Under Construction, Yonge & 16 th Ave. Move in 6 months BR: 1 WR: 1 Parking/Locker
$995,000
Brand New, Custom Built in Scarborough, BR:4 WR:4 MUST SELL
$398,800
Donmills/Eglinton Condo Townhouse BR:4 WR: 2 Fully Renovated, Maint. Fee Inc Utilities
$678,800
Financing Available
118 Silverwood Crcl. Ajax Monarch Built Detached 2-storey BR:3 WR:4 Finished Basement
$479,900
Victoria Park/Finch Condo Townhouse BR:4 WR:2 Maint. Fee: $497+Hydro
$129,900
Residential Vacant Land in Town of Lindsay, Almost .65 Acres, Municipal Water/Sewer, Build Your Dream Home
$299,000
Donmills/Eglinton BR:2 WR:1 Maint fee :$585 All Utilities included
$549,890
Detached 2-Storey, Scarborough BR:3+1 WR:2, Finished Basement Recent upgrades
$10,000+ Savings on Your Home Purchase
GUARANTEED
15 Years of Business Experience
FREE Quick OVER THE PHONE Home Evaluation
I have 320+ Buyers in my Database
RE/MAX
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.remaxace.com


குளிர் காலம் ஆரம்பமாகிவிட்டது...
Unique HVAC Inc.
Heating & Cooling
50% கழிவு விலையில் உங்களது Heating உபகரணங்களின் தரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்!!!
ONLY!!!
$39.99
WATER TANK
Six Months
Free Rental
RENTAL
Starting From:
$ 17.99 per month
WHAT WE DO:
Δ BBQ Gas Line.
Δ Fire Place.
Δ Humidifier.
Δ Air Cleaners.
Δ Air Conditioners.
Δ Furnaces.
Δ Natural Gas Dryer.
Δ Electrical Services.
Δ Water Heaters - Tank/ Tankless.
Purchase an Air Conditioner and Furnace together SAVE BIG!!!
உங்களது உபகரணங்கள் ஒன்ராரியோ மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் சரிபார்க்கப்பட்டதா?
COMBO SPECIAL Starting at: $3100
FURNACE BY ITSELF Starting at: $2199
தொடர்புகளுக்கு:
Vino 647.989.4217
Kapilan 647.981.5224
Thano 416.543.5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# சட்டம் ஒழுங்கு அமைச்சு பிரதமர் ரணிலிடம்

## குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்குமா?

**- விகிர்தன் -**

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் பின்னர் இலங்கை அரசியலில் ஏற்பட்டிருந்த குழப்பமான நிலை இப்போது தணிவடைந்து விட்டது. இத்தேர்தலில் அதிகளவு வாக்குகளைப் பெற்ற மஹிந்த ராஜபக்ஸவின் பொதுஜன பெரமுன கட்சியினர் அரசாங்கத்தை கலைத்து புதிய ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என கோசமிட்டு வந்தனர். பிரதமர் பதவி விலக வேண்டும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை பதவி விலக்க வேண்டும், மஹிந்தவை பிரதமராக்க வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இடையில் ஜனாதிபதி மைத்திரிக்கும், பிரதமர் ரணிலுக்குமிடையில் சந்திப்புகளும் நடைபெற்றன. இந்த சந்திப்புக்களில் பேசப்பட்ட விடயம், மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து எவ்விதமான உத்தியோகபூர்வ தகவல்களும் வெளியிடப்படவில்லை. மைத்திரி ரணிலை பதவி விலக்குவதாக உறுதியளித்தார் என்றும், ஒரு சந்திப்பின்போது, தான் அவரை பதவி விலக்குவதை விட அவர் தானாக அந்த முடிவை அறிவிக்க வேண்டும் என ஜனாதிபதி அவரிடம் நேரடியாகவே கூறினார் என்றும் செய்திகள் வெளியாகின. ஆனால், இப்போது மைத்திரி - ரணில் இணைந்த தேசிய அரசாங்கமே தொடர்ந்தும் இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மஹிந்த அணியினரின், அரசாங்கத்தை கலைக்க வேண்டும் என்ற கோசமும் இப்போது தணிந்துள்ளது. மஹிந்த ராஜபக்ஸவை எதிர்க்கட்சித் தலைவராக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையே தற்போது மஹிந்த அணியினரது கோரிக்கையாக தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் 2020ஆம் ஆண்டுவரை தற்போதைய தேசிய அரசாங்கம் தொடரும் என்றே நம்பலாம்.



கட்சிகளுக்குள்ளேயே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு காரணமாகும். ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலிருந்தும் விலக வேண்டும் என கட்சிக்குள்ளிருந்து அழுத்தங்கள் வந்தன. மைத்திரிபால சிறிசேனவிற்கும் சுதந்திரக் கட்சிக்குள்ளிருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அவையும் இப்போது குறைந்து விட்டன. இந்தக் குழப்பங்கள் தணிவடைய அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்தப் படாவிட்டாலும் அதனை யாரும் மறுக்க முடியாது.

ரணில், மைத்திரி தரப்பினர் மத்தியில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கிடையில் முதற்கட்டமாக ரணில் விக்கிரமசிங்கவையும், மைத்திரிபால சிறிசேனவையும் தனித்தனியாக அமெரிக்க, இந்தியத் தூதுவர்கள் சந்தித்து உரையாடினர். வேறு இராஜதந்திரிகளும் தொடர்புகளை ஏற்படுத்தி ஆலாசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினர். நாட்டில் ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படுமானால் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்படும் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. இவையெல்லாம் நாட்டில் சில நாட்களாக நிலவிய அரசியல் குழப்பங்களை ஒரு வழிக்கு கொண்டுவந்துள்ளன. இனி வரப் போகும், இந்த அரசாங்கத்தின் இரண்டு வருட ஆயுள்காலத்தில் மிக வேகமாக பல காரியங்களை செய்து முடிப்பதற்கான தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. அதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக ஊழல் மோசடி தொடர்பிலான விசாரணை-களை துரிதப்படுத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது - மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வினை ஏற்படுத்தல். இவையிரண்டு விடயங்களையும் சமகாலத்தில் முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

'நல்லாட்சி' அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் நாட்டில் பல போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளன. மருத்துவர்கள் தொடக்கம் மாணவர்கள் வரை வீதியில் இறங்கி போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் அடிக்கடி பணிப்புறக்கணிப்பு போராட்டங்களை மேற்கொண்டன. போராட்டக்காரர்களுடன் அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி வரைக்கும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சில வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதும், அவை சரிவர நிறைவேற்றப்படாமல் மீண்டும் அந்தப் போராட்டங்கள் தொடர்கின்ற நிலையே காணப்பட்டது. கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் கடந்த மூன்று வருடங்களாக நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் இனிவரும் நாட்களில் மக்கள் எதிர்பார்த்தவற்றை நிறைவேற்றிக் காட்ட வேண்டிய அவசியம் இந்த 'நல்லாட்சி' அரசாங்கத்திற்கு உள்ளது. வரப்போகும் இரண்டாண்டுகளில் இது சாத்தியப்படுமா என்பதும் கேள்விக்குரியதே. எனினும், ஐ.தே.கவின் அமைச்சர்கள் "கடுமையாக உழைத்து அதனை நிறைவேற்றுவோம்" என்று தற்போது தெரிவித்து

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)



# நாமும் நமது இல்லமும் - 506



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969

அதிகமான மக்கள் குடியேறுவதால் அடுக்குமாடி மனைகளின் வளர்ச்சியினால் தவிர்க்க முடியாதது ஆகின்றது. கடந்த சிலவருடங்களில் வீடுகளில் ஏற்பட்ட அதீத விலை அதிகரிப்பு, சாதாரண கனேடிய குடிமகனை தனிவீடு, இருசேர்ந்த, பல சேர்ந்த வீடுகள் வாங்குவதனை தவிர்த்து அடுக்குமாடி மனையை நோக்கி தள்ளி வருகின்றது. இதுவே இன்றைய நிலைமை.

இந்நிலைப்பாட்டால், அடுக்குமாடி மனையை நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் அதிகளவு மனைகளைக் கட்டுவதற்கான முடிவை எடுத்தன. இதனால் 2007ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இந்நிறுவனங்கள் அதிக மனைகள் நிர்மாணம் செய்வதற்கான தமது நோக்கங்களை அரசுக்கு வெளிப்படுத்தின. இந்த எண்ணிக்கை 2007இலிருந்து 2017 வரை வருடா வருடம் அதிகரித்தே வந்துள்ளது. ரொறன்ரோ பெரும்பாகத்தில் 2012 இல் 253,758 அடுக்குமாடி மனைகளை நிர்மாணிப்பதற்காக இந்நிறுவனங்கள் நகர-சபை / பிரதேசசபைகளில் தமது மனை கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்திருந்தன. இந்த எண்ணிக்கை 2017இல் 380,152 ஆக அதிகரித்தது.

கடந்த மூன்று ஆண்டுகளிலே இந்த அதிகரிப்பு மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. ஏற்கனவே வீடுகள் மட்டுமே நிர்மாணம் செய்துகொண்டு இருந்த பல நிறுவனங்கள், வீடுகள் கட்டுவதற்கான நிலத்தின் நெருக்கடியால் அடுக்குமாடி மனைகள் கட்டுவதற்கான முயற்சிகளில் இறங்கிவிட்டன. இதுவும் இவ்வாறான அதிகரிப்புக்குக் காரணமாகலாம்.

கடந்த சில வருடங்களில் விற்கப்பட்ட புதிய அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை அதிகரித்தே வந்தது. ரொறன்ரோ பெரும்பாகத்தில் 2016இல் 29,132 மனைகள் விற்கப்பட்டன. மேலும் 2017இல் இந்த எண்ணிக்கை 36,429 ஆக அதிகரித்தது. மனை நிர்மாணிப்பதற்கான அனுமதி பெற அதிகளவான விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகளவான மனைகள் விற்கப்பட்டிருந்தபோதிலும் மக்கள் குடியேறுவதற்காக, முற்றாக கட்டப்பட்டு மக்களிடம் ஒப்படைக்கும் மனைகளின் எண்ணிக்கை கடந்த சில வருடங்களாகக் குறைந்தே வருகின்றது. இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. போதியளவு தகுதியான வீடு/ மனை கட்டும் திறமை படைத்தவர்களின் தட்டுப்பாடு. முன்பு கட்டிட நிர்மாணத்தில் இத்தாலியர், போர்த்துகீய மக்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இவர்களின் இரண்டாவது தலைமுறை வேறு தொழில்களை நோக்கிச் சென்றதாலும் அனுபவ ஆற்றல் மிக்கவர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளது.



கனேடிய சரித்திரத்தில் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் 2014இல் அதிகூடிய மனைகள் மக்களின் கைகளுக்கு வழங்கப்பட்டன. 2014இல் 21,133 மனைகள் மக்களுக்கு கையளிக்கப்பட்டது. 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் எண்ணிக்கை குறைந்து இந் நிலைமை 2017இல் 13,513 ஆக மேலும் குறைந்தது. ஒப்பீட்டளவில் இது மிகவும் குறைவு.

பொதுவாக இன்றைய (2018) காலகட்டத்தில் மனை விற்கப்பட்ட காலத்திலிருந்து ஏறக்குறைய 4/5 வருடங்களின் பின்பே கட்டப்பட்ட மனைகள் ஒப்படைக்கப்படுகின்றது. இதனால் மனையில் குடியேறுவதற்கு நீண்ட காலம் மக்கள் எதிர்பார்த்து காத்து இருக்க வேண்டியிருக்கின்றது. 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் ஏறக்குறைய 20,000 இற்கு அதிகமான மனைகள் வாங்கியவர்களில் கையில் கொடுக்கலாம் என நிர்மாண நிறுவனங்கள் கூறுகின்றன. அத்துடன் விற்பனை செய்யும் மனையின் சதுர அடியின் விலையும் அதிகரித்தே செல்கின்றது. மெற்றோ ரொறன்ரோவில் ஒரு சதுர அடியின் சராசரி விலை $795 ஆகக் காணப்படுகின்றது. ஆனால் ரொறன்ரோவின் மத்திய பகுதியில் சதுரஅடியின் சராசரி விலை $972 ஆகக்காணப்படுகின்றது. இந்த வருடக் கடைசியில் இந்தப் பெறுமதி $1079 ஆக இருக்கலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. வருடாவருடம் 100,000இற்கு மேற்பட்ட புதியவர்கள் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் குடியேறுகின்றனர். ஒரு குடும்பத்தில் நால்வர் எனக்கொண்டால் குறைந்தது 25,000 வீடு/ மனைகள் ஒவ்வொரு வருடமும் தேவைப்படும் (Demand). ஆனால் 20,000இற்கு குறைவான வீடு/மனைகள் மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகின்றது. (Supply)

இந்நிலைமை சில காலங்களாகத் தொடர்கின்றது. மேலும் சிலகாலம் நிச்சயமாக இந் நிலைமை தொடரலாம். அரசின் புதியவர்களின் கொள்கையில் மாற்றம் இல்லாமல் இருந்தால் இந்நிலைமை தொடரும். எனவே ஆதன விலை மற்றும் வியாபாரம் எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

இடைக்காலங்களில் ஆதன வியாபாரத்திலும் விலையிலும் ஏற்ற இறக்கம் ஏற்பட்டாலும் ஆதன வியாபாரம் நீண்டகால முதலீடு.



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E. Suite 200, Toronto, ON, M2J 5B4    Toll Free : 1-877-366-3487    Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3    Office Phone : 416-391-3232




- ஆதித்தன் -

# சர்வதேச அழுத்தங்களே தீர்வுக்கு வழி!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை யின் 37ஆவது கூட்டத்தொடர், கடந்த 26 ஆம் திகதி திங்கள்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், இம்முறை இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலான கருத்துக்கள் இக்கூட்டத்தில் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

மார்ச் மாதம் 23ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ள இந்த கூட்டத்தின் முதலா வது அமர்வில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செய்யத் அல் ஹூசைன், ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ கூட்ரஸ் ஆகியோர் முக்கிய உரைகளை ஆற்றவுள்ளனர். இதில், ஆணையாளரின் உரையே இலங்கைக்கு அழுத்தம் தருவ தாக அமையப் போகின்றது.

நடந்து முடிந்தஉள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸவின் அணிக்கு சிங்கள மக்கள் அதிகளவு ஆதரவைத் தெரிவித்திருப்பதன் மூலம் தென்னிலங்கையில் மீண்டும் இனவாதம் தலைதூக்கியுள்ளதை கணிப்பிட முடிகின் றது. ஏனெனில், மஹிந்த தரப்பினர் கடும் இனவாத கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பியதன் மூலமாகவே இந்தளவு வெற்றியை அடைந்துள்ளனர். இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத் தில் உரையாற்றுகையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

"தென்னிலங்கை சிங்கள மக்கள் அப்பாவி கள். அவர்களிடம் பொய்யான பிராசாரங் களை மேற்கொண்டு, மொட்டு அணியினர் வாக்குகளைப் பெற்று வெற்றியடைந் துள்ளனர்" என அவர் தெரிவித்துள்ளார். அதாவது, தமிழீழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியே மஹிந்த அணியினர் வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என அவர் நாடாளுமன்ற உரையில் கூறியுள்ளார்.

"புதிய அரசமைப்பைக் கொண்டுவந்தால் தமிழர்களின் தமிழீழக் கனவு நனவாகி விடும் என மஹிந்த சிங்கள மக்களிடம் கூறினார். அவர்களது மனதில் தவறான தோற்றப்பாட்டை ஏற்படுத்தி அவர் அதன் மூலம் அந்த மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

நாட்டைப் பிளவுப்படுத்தும் வகையிலான கருத்துகளை நாம் ஒருபோதும் தெரிவித்த தில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்திலும், எமது பிரசாரங்களிலும் பிரிவுபடாத நாட்டை முன்னிறுத்தியே, நாம் கருத்து வெளியிட்டோம். தென்னிலங்கை மக்கள் அப்பாவிகள். அவர்கள் மஹிந்த தரப்பின ரின் தவறான கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்" எனவும் சம்பந்தன் தெரிவித் திருந்தார்.



'நல்லாட்சி' அரசாங்கம் ஆட்சிக்கு வந்து கடந்த மூன்று வருட காலமாக கூறிக் கொண்டு வந்த இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பது வெறும் வார்த்தைப் பிரயோகமாகவே இருந்துள்ளது. அதற் கானதோர் வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இன்று தெற்கில் நல்லிணக்கம் தோற்றுப்போய் இனவாதமே மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது என்பதை நடந்து முடிவுற்ற தேர்தல் வெளிப் படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலில் பெற்ற வெற்றி-யோடு அடுத்து வரவுள்ள மாகாணசபை தேர்தலுக்கான வேலைத்திட்டத்தை மஹிந்த ஆரம்பித்து விட்டார். அண்மையில் கண்டி யில் வைத்து கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஸ, சம்பந்தன் எதிர்க்கட்சித் தலை வராக இருந்து ஈழம் கோரியதைத் தவிர வேறெதனையும் செய்யவில்லை என்று கூறியுள்ளார். எனவே, அடுத்து வரும் தேர்தல்களிலும் தமிழீழம் என்ற கருப் பொருளை முன்வைத்தே சிங்கள மக்கள் மத்தியில் வாக்கு வேட்டையில் மஹிந்த அணியினர் இறங்குவர் என்பது தெளிவாகின்றது.

மஹிந்தவை கடந்த 2015ஆம் ஆண்டு தோற்கடித்து ஆட்சிமாற்றத்தை ஏற்படுத் தியமையில் சர்வதேசநாடுகளின் பங்களிப்பு முக்கியமானது. ஆனால், புதிய அரசாங் கமும் வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றுவதில் பின்னடைவையே கண்டுள் ளது. இது சர்வதேசத்திற்கு தெரியும். நடை பெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை யின் மாநாட்டில் அது வெளிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் தொடர் பில் ஐ.நா நேரடியாக தலையிட வேண்டும் என்றும், ஐ.நா பாதுகாப்புச் சபை அதனைப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் தெரிவித்து கையெழுத்துப் போராட்டங்கள் தமிழ் பிரதேசங்களில் ஆரம்பமாகியுள்ளன.

நெருக்குதல் இல்லாவிட்டால் ஒருபோதும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்க அரசாங்கம் முன்வராது என்று வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு இலங்கையை ஐ.நா பாது காப்புச்சபை ஆற்றுப்படுத்த வேண்டும் அல்லது குறித்த ஒரு பணிக்காக நியமிக் கப்படும் தீர்ப்புமன்றம் ஒன்று இலங்கை யில் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல் பற்றி ஆராய நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் செயலாளர் நாயகத்தின் கருத்தின் அடிப்படையிலேயே அவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. ஜெனீவா கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கலந்துரை யாடலில் சம்பந்தனால் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

"இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பிலான விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்று சிலர் வலியுறுத்தி வருகின்றனர். அவ்வாறு கொண்டுசெல்ல வேண்டுமானால் அதற்கு ஒரு நாடு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எந்தநாடும் இந்த முயற்சிக்கு இணங்கப் போவதில்லை. அவ்வாறு கொண்டு செல்லப்பட்டாலும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த விடயம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு விடும். எனவே, இந்த முயற்சி சாத்தியப்படாது. ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் அழுத்தங் களைக் கொடுத்தே நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது" என்று அவர் தெரி வித்துள்ளார். இங்கு ஒன்றை நாம் கவனிக் கலாம். தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்று கருதும் தமிழ் தலைவர்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து ஒருமித்த முடிவை எடுக்க முடியாதுள்ள நிலையில் அவர்கள் பிளவுபட்டு நிற்கின்றனர்.

ஒரு நீதியரசராக இருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுகின்ற நடைமுறை சரி யானதா? பழுத்த அரசியல்வாதியான, அதேவேளையில் சட்டமும் தெரிந்த சம்பந்தன் கூறுவது சரியானதா? குறித்த விடயத்தில் எந்த வழிமுறை ஏற்றது? என்ப தில் தமிழ் மக்கள் குழப்பமடைகின்றனர்.

காணாமலாக்கப்பட்டோர், சிறையில் வாடும் அரசியல் கைதிகள் ஆகியோரின் பிரச் சினைகளுக்கும் எவ்வழியில் தீர்வொன்றை காண்பது என்பது குறித்தும் தமிழ் தலை மைகள் மத்தியில் ஒருமித்த கருத்துக்கள் இல்லை.

இன்று தென்னிலங்கையில் மீண்டும் இன வாத சக்திகள் மீளெழுச்சி பெற்று வரு கின்றமையானது, தமிழ் மக்களின் பிரச் சினைகளுக்கு எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மூலமாக தீர்வுகள் வராது என்பதை சர்வதேச நாடுகளிடம் அழுத்த மாக பதிவு செய்கின்ற சந்தர்ப்பத்தை ஏற் படுத்தி தந்துள்ளது. இதனை ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே பார்க்கலாம். இதற்கு தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு, ஒரே கருத்தாக விடயங்களை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினை என்று வரும்போது தனிப்பட்ட முரண்பாடு களை கைவிட்டு ஒரே குரலில் சர்வதேசத் திடம் பேச வேண்டும். இந்த நிலை உரு

(தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 20



குரு அரவிந்தன்

**கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.**

வட அமெரிக்காவில் வாழும் முதற்குடி மக்களின் கடந்தகால வாழ்க்கையை எடுத்துப் பார்ப்போமேயானால் அவர்கள் அனேகமாகக் கூட்டுக் குடும்ப வாழ்க்கையே வாழ்ந்திருக்கிறார்கள். அந்தக் கூட்டுக் குடும்பங்களும் பல வீடுகள் சேர்ந்த கிராமமாக (Native band), அவர்களுக்கு எல்லாம் ஒரு தலைவரைக் கொண்டதாக அமைந்திருந்தது. அவரிடமே முடிவெடுக்கும் பொறுப்பும் அதிகாரமும் இருந்தது. பொதுவாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளைத் தற்போது 'றிசேவ்' என்று அழைப்பார்கள். அவர்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தாலும் தனிமனித சுதந்திரம், அவர்களுக்கான கடமைகள், உரிமைகள் எல்லாம் வரையறுக்கப் பட்டிருந்தன. அவர்கள் வாழ்ந்த கடந்தகால வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தங்களுடைய பொருளாதார வசதிகளுக்கும், தாங்கள் வாழ்ந்த பகுதிகளின் எல்லைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். பழங்குடி மக்கள் யார் என்பது பற்றிய விளக்கம் தேவைப்பட்டதால், அதுபற்றி விரிவான சட்ட மூலம் 1982ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அவர்களை முதற்குடி மக்கள் (First Nation), இனுவிட் (Inuit), மெயிற்ரீஸ் (Métis) என்று வகைப்படுத்தினாலும் அவர்களுக்குள் பல உப பிரிவுகளும் உண்டு. கனடாவின் பழங்குடி மக்களை இந்தியர்கள், செவ்விந்தியர்கள், எஸ்கிமோக்கள் என்றெல்லாம் அழைப்பதை அவர்கள் விரும்புவதில்லை. 'முதற்குடிகள்' என்று அழைப்பதையே அவர்கள் விரும்புகிறார்கள். அதுவே சரியானதாகவும் இருக்கின்றது. எனவேதான் அவர்களை இப்போது எல்லோரும் 'முதற்குடிகள்' என்று அழைக்கின்றனர். வடஅமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு குழுவினரின் வாழ்க்கை முறையும் சற்று வேறுபட்டதாகவே இருக்கின்றது. காலத்திற்குக் காலம் சூழ்நிலைக்கு ஏற்ப இவை எல்லாம் மாற்றங்களுக்கு உள்ளாகியிருந்தன.

முதற்குடி மக்களின் குடும்ப வாழ்க்கை பற்றி, அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குச் சென்றபோது சிறிதளவு அறிந்து கொள்ள முடிந்தது. வன்கூவருக்கு அருகே உள்ள நிக்கோமென் (Nicomen Indian reserve) என்ற முதற்குடி மக்கள் வாழும் இடத்தில் இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இருவர் தங்கள் பாரம்பரிய வழக்கப்படி சமீபத்தில் திருமணம் செய்து கொண்டனர். திருமண பந்தம் என்று வரும்போது மணமக்கள் இருவரும் மணவாழ்க்கைக்குத் தகுதியானவர்களாக இருக்க வேண்டும். மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் மணமக்கள் இருக்கிறார்களா என்பது கவனத்தில் கொள்ளப்படும். இதைவிட சன்மானம் கொடுப்பது பற்றியும் திருமணம் பேசும் போது பெற்றோர்களால் ஆராயப் படும். குடும்ப வாரிசு முக்கியமாகக் கருதப்பட்டதால் முதற் குழந்தையின் பிறப்பு முக்கியமானதொன்றாக இருந்தது. திருமணத்தின் போது அணியும் ஆடை பாரம்பரிய ஆடையாக இருந்தது. சிகப்பு, வெள்ளை நிறங்களில் அனேகமான ஆடைகள் இருந்தன. தலையில் இறகுகளால் ஆன முடியை சூடிக்கொள்வார்கள். மணமகனுக்குக் கொடுப்பதற்காக மணப்பெண் மிருகத் தோலினால் ஆன ஆடைகளை தைத்துப் பரிசாகக் கொடுப்பார். அவரவரது தகுதிக்கேற்ப வேலைப்பாடுகளில் மாற்றங்கள் இருக்கும். மணமக்கள் இருவரின் கைகளையும் ஒன்றோடு ஒன்றைச் சேர்த்து இருவரையும் கம்பளத்தால் போர்த்தி திருமணத்தை நடத்தி வைப்பவர் ஆசீர்வாதம் செய்வார். இருவரும் ஒருவரை ஒருவர் கணவன் மனைவியாக ஏற்றுக் கொள்வதாகவும், அதை மதித்து நடப்பதாகவும் வாக்குறுதி கொடுக்க வேண்டும். அதன் பின் பைப் என்று சொல்லப்படும் குழாய் மூலம் இருவரும் புகைப்பிடிக்க வேண்டும். திருமணத்திற்காக இவர்கள் அணியும் பாரம்பரிய ஆடைகளை றிகாலியா (Regalia) என்று சொல்வார்கள்.

திருமணமானவர்கள் கூட்டுக் குடும்பத்தில் ஒருவராக அங்கம் வகிப்பர். அனேகமாக மணமுறிவுகள் நடப்பதில்லை, அதை அனுமதிப்பதும் இல்லை. திருமண நிகழ்வின் போது தங்கள் பாரம்பரிய பான்ட் வாத்தியம் இசைத்துப் பாடுவார்கள். இப்படியான நிகழ்வுகளுக்கு இசைக்கும் தோல் வாத்தியத்தை பவ்வவ்றம்ப் (powwow drums) என்று சொல்வார்கள். மான் தோலிலும், வெள்ளை சிடார் மரம் அல்லது செறிவூட்டில் இருந்து இதன் அமைப்பு செய்யப்படுகின்றது. பாரம்பரிய இசை நிகழ்சிகளின்போது பாரம்பரிய நடனமும் இடம் பெறும். அதன்பின் பின் குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து பல்வேறு வகையான பாரம்பரிய வாழ்த்துக்கள் இடம் பெறும். அதிலிருந்து நானறிந்த சில வரிகளைத் தருகின்றேன்.

'இப்போது நீ மழையில் நனைவதை உணரமாட்டாய்
ஒருவருக்கு ஒருவர் குடையாய் இருக்கிறீர்கள்.
இப்போது நீ குளிரை உணரமாட்டாய்
ஒருவருக்கு ஒருவர் இதமாய் இருக்கிறீர்கள்.
இப்போது நீ தனிமையை உணரமாட்டாய்
ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்கிறீர்கள்
இப்போது நீங்கள் இருவராக இருந்தாலும் உங்களுக்கான வாழ்க்கை இனி ஒன்றேயாகும்.
உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள்
இணைபிரியாத வாழ்க்கையை ஆரம்பியுங்கள்;'



ஜேம்ஸ் ஸ்ருவாட் நடித்த 'புறோக்கின் அரோ' என்ற ஆங்கிலப்படத்தில் முதற்குடி மணமக்களின் திருமணத்தை செய்து வைத்தவரால் வாழ்த்தப்பட்ட சில வரிகளே இவையாகும். ஒவ்வொரு குழுக்களுக்கும் வாழ்த்துக்கள் வித்தியாசப்படும். திருமணம் முடிந்ததும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட வீடுகளுக்குச் செல்ல வேண்டும். ஏதாவது காரணத்தால் அவர்கள் தங்கள் இருப்பிடத்தை இழந்தால் அவர்களது பெற்றோர்கள், அவர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பர். திருமண வாக்குறுதியில் இதுவும் அவர்களது பெற்றோரின் வாக்குறுதிகளில் ஒன்றாக இருக்கிறது. ஆற்றையோ, கடலையோ அல்லது நீர்நிலைகளையோ நம்பி வாழும் குழுக்களின் திருமணம் அவற்றின் கரையோரத்தில் சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் இடம் பெறும். முதற்குடி மக்களின் ஒரு பகுதியினரான மோஹாக் (Mohawk) இனத்தவர்களில் மூன்று பிரிவினர் உண்டு. இவர்கள் ஆமை, ஓநாய், கரடி போன்ற சின்னங்களை கொண்ட குழுவாக இருக்கின்றனர். எம்மவர்களின் திருமணத்தின் போது பொதுவாக மணப்பெண் மணமகனின் வீட்டிற்குச் சென்று வாழ்வார். அதைத்தான் பெண்ணின் புகுந்தவீடு என்பார்கள். ஆனால் சில பெற்றோர்கள் மணப் பெண்ணுக்கு வீட்டை நன்கொடையாகக் கொடுத்து மாப்பிள்ளையின் புகுந்த வீட்டாக அதை மாற்றுவதுண்டு. அதைப் போலவே இங்கேயும் அவர்களின் பாரம்பரிய வழக்கத்தின்படி மணமகன் பெண் வீட்டிற்குச் சென்று வாழ வேண்டும்.

விருந்து உபசாரத்தின்போது காடுகளில் வேட்டையாடும் குழுக்களாக இருந்தால் மான், மூஸ் போன்ற மிருகங்களின் இறைச்சியைப் பதப்படுத்திக் கொடுப்பார்கள். நீர்நிலைகளை நம்பி இருப்பவர்கள் என்றால் நெருப்பில் வாட்டி எடுத்து வெய்யிலில் காயவைத்துப் பதப்படுத்தப்பட்ட மீன் வகைகளைப் பரிமாறுவர். இதைவிட தானியங்களை மாவாக்கிப் பாரம்பரிய முறைப்படி செய்யப்பட்ட (Bannocks) றொட்டியையும் பரிமாறுவார்கள். சொன்னால் புரியாது, குரக்கன் றொட்டி சாப்பிட்டவர்களுக்குத்தான் அதன் சுவை தெரியும். குரக்கன் றொட்டியோடு இறால் அல்லது சுறா வறையும் சேர்ந்தால் சொல்லத் தேவையில்லை. இந்த உணவு வகைகளுடன் பழங்களும் பரிமாறப்படும். பொதுவாக முதியோருக்கு முதலில் உணவளிக்கப்படும். விருந்தினரை நன்றாக உபசரிக்கும் பாரம்பரியம் தமிழர்களைப் போலவே முதற்குடி மக்களிடமும் விருந் தோம்பல் சிறப்பாக இருக்கின்றது. இப்படித் தான் ஹவாய் தீவுகளுக்குச் சென்றபோது அங்குள்ள பழங்குடி மக்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. பாரம்பரிய உணவான பொய் என்ற உணவை அவர்கள் மதிய உணவோடு பரிமாறினார்கள். பொய் (Poi) என்ற செடியின் கிழங்கில் இருந்து செய்யப்பட்ட அந்த உணவு எங்கள் இராசவள்ளிக் கிழங்கு போல இருந்தது. ஆனால் அது போன்ற சுவை இதில் கிடைக்கவில்லை.

சில இந்துக் கோள்களுக்குச் சென்றால் அங்கே வாசலில் உள்ள சிலைகளையோ அல்லது ஓவியங்களையோ அவதானித்து இருப்பீர்கள். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி இருக்கும் சில சிலைகளை அங்கேகாணமுடியம். கோபுரங்களிலும் இதுபோன்ற சிலைகளைக் காண முடியும். ஆதிகாலத்தில் ஓவியங்களும்,

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

Build Your Career in Mortgage Lending! Join My Office
MORTGAGE ALLIANCE
MORTGAGE FINANCING SOLUTIONS AVAILABLE FROM MULTIPLE LENDERS
1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530



# காவிரி இறுதி தீர்ப்பு

## தமிழ்நாட்டுக்கு அடிமேல் அடி!

கொந்தளிக்கும் காவிரி விவசாயிகள்

**சந்திப்பு: கண்ணன்**

இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களுக்கு இடையே, காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக நீண்ட காலமாக சிக்கல் நீடித்து வருகிறது. இந்நிலையில், இது தொடர்பான வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் சென்ற மாதம் வழங்கியுள்ள தீர்ப்பு தமிழ்நாட்டில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக காவிரி டெல்டா விவசாயிகள் கொந்தளித்துப் போயிருக்கிறார்கள். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பில் தமிழகத்திற்கு வழங்கப்பட்ட 192 டிஎம்சி நீரில் இருந்தும் 14.75 டிஎம்சி தண்ணீர் குறைந்து தற்போதைய தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ளது தான் காவிரி டெல்டா விவசாயிகளின் ஆதங்கத்துக்கு காரணம். "காவிரியில் கூடுதல் தண்ணீர் வேண்டும் என்னும் கோரிக்கையுடன் நீதி மன்ற படியேறினால், இருக்கும் தண்ணீரையும் பிடுங்கிவிட்டார்கள்" என்கிறார்கள் அவர்கள்.

இந்த தீர்ப்பு குறித்து சிலரிடம் கருத்து கேட்டோம்...

பெ. மணியரசன், காவிரி உரிமைமீட்புக் குழுவின் தலைவர்: "காவிரி வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு அநீதியானது, மனசாட்சி இல்லாதது. அத்துடன் கட்டப் பஞ்சாயத்து தன்மையும் வாய்ந்தது. இத்தீர்ப்பில் முதல் பெரும் பேரிழப்பு என்பது காவிரி ஆறு மாநிலங்களுக்கு சொந்தமில்லை அது தேசிய சொத்து என்பதுதான். அண்ணன், தம்பிகளுக்குள் பிரச்சினை என்று நாட்டாமையை பஞ்சாயத்துக்கு கொண்டுவந்தால் அவர் சொத்து உங்களுக்கே சொந்தம் இல்லை அது எனக்கே சொந்தம் என்று சொல்வதுபோல உள்ளது இது. அதாவது, காவிரியை தேசிய சொத்தாக சொல்லி மத்திய அரசின் அதிகாரத்திற்குள் கொண்டு செல்ல விரும்புகிறார்கள். மாநிலங்களின் உரிமையை பறிக்கப் பார்க்கிறார்கள்.

1934-இல் தமிழகத்தில் மேட்டூர் அணை கட்டப்பட்டது. அதன் ஐம்பதாம் ஆண்டு விழா 1984-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அப்போது வெளியிடப்பட்ட மலரில், அந்த ஐம்பது ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்துக்கு சராசரியாக 360 டிஎம்சி தண்ணீர் வந்ததாக சொல்லப்படுகிறது. 1991 ஜூன் 25-இல் காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இடைக்கால தீர்ப்பில் அது 205 டிஎம்சி ஆக மாறியது. பின்னர் 2007 பிப்ரவரி 5 இறுதி தீர்ப்பின்படி அது 192 டிஎம்சி என்று ஆகியது. இப்போது 177.25 ஆக மாறியுள்ளது.

உச்ச நீதிமன்றம், கர்நாடகத்தில் 28 மாவட்டத்தில் வறட்சி நிலவுவதால் கூடுதல் தண் ணீர் வேண்டும் என்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே கடும் வறட்சி நிலவுகிறது. அதனை கணக்கில் கொள்ளவில்லை. அது போல, பெங்களூரு நகரத்திற்கு 4.75 டிஎம்சி தண்ணீர் கேட்கிறார்கள். அப்படியானால் ஏன் சென்னையை கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை? சென்னைக்கு வீராணத்தில் இருந்துதானே தண்ணீர் செல்கிறது. எனவே தான், இது பாகுபாட்டுடன் வழங்கப்பட்ட தீர்ப்பு என்கிறோம்."

மன்னார்குடி ரங்கநாதன், காவிரி வழக்கு தாரர்களில் ஒருவர் விவசாயி: "நான் 45 ஆண்டுகளாக இந்த வழக்கை நடத்தி வருகிறேன். இப்போது வந்துள்ள தீர்ப்பு நல்ல தீர்ப்புதான் என்பதே என் அபிப்ராயம். நமது வழக்கறிஞர்கள் நல்ல வாதத்தையே வைத்தனர். காவிரி என்பது பற்றாக்குறை நதி. அதில் மொத்தம் 740 டிஎம்சி தண்ணீர் தான் கிடைக்கிறது. ஆனால் கர்நாடகம், தமிழகத்திற்கு 1200 டிஎம்சிக்கு மேல் தண்ணீர் தேவை. மற்ற நதிகளில் உபரியை பங்கிடத்தான் சண்டை. இங்கு பற்றாக்குறையை பங்கிடவே சண்டை நடக்கிறது.

2000 ஆண்டுகளாக தமிழர்கள்தான் அதிகம் காவிரி நீரை அனுபவித்துள்ளோம், கன்னடர்கள் அனுபவிக்கவில்லை. இப்போது தமிழ் நாட்டுக்கு கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைந்தாலும், காவிரி மேலாண்மை வாரியம் அமையும் வாய்ப்புள்ளது. அதனால், இனிமேல் முறையாக தமிழ்நாட்டுக்கு தண்ணீர் வரும். அந்த தண்ணீரை சேமித்து பயன்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

டி.கே.எஸ். இளங்கோவன், செய்தி தொடர்பாளர், திமுக: "இந்த வழக்கில் குடிநீருக்கான அளவுகோல் என்பது இதற்கு முன்னால் கிடையாது. இப்போது புதிதாக சேர்த்துள்ளனர். பெங்களூரு நகரத்தின் குடிநீர் தேவையை கணக்கில்கொண்ட நீதிமன்றத் திடம் சென்னையின் குடிநீர் தேவை பற்றி அழுத்தமான வாதங்களை தமிழ்நாடு அரசு வைத்திருக்க வேண்டும்.



இரண்டாவதாக காவிரிப் படுகையில் உள்ள நிலத்தடி நீரையும் கணக்கில் எடுத்திருக்கிறார்கள். காவிரியில் தண்ணீரே வராத போது எப்படி அங்கு நிலத்தடிநீர் ஊறும். காவிரியில் வரும் தண்ணீரில் இருந்துதான் நிலத்தடிநீர் உருவாகும். இதனடிப்படையில் 10 டிஎம்சி குறைத்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ்நாட்டுக்கு வரும் 177.25 டிஎம்சியில்தான் 10 டிஎம்சி நிலத்தடி நீராக மாறுகிறது. அதனை பறிக்கக்கூடாது என்று வாதிட்டிருக்க வேண்டும். இந்த பின்னடைவுக்கு காரணம் தற்போதுள்ள எடப்பாடி அரசுதான்."

அய்யாக்கண்ணு, தலைவர், தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்கம்: "காவிரி சிக்கல் தொடர்பான வழக்கில் 1892, 1924 என்று இரண்டு தீர்ப்புகள் வந்தன. அதனை பின்பற்றியே சாகுபடி செய்துவந்தோம். 1974-இல் அது புதுப்பித்தலுக்கு வந்தது. அப்போதைய இந்திய பிரதமர் இந்திராகாந்தி, அப்போதைய தமிழக திமுக, காங்கிரஸ் தலைவர்களை மிரட்டி, கர்நாடாகாவில் 1978-க்குள் நான்கு அணைகள் கட்டினார்கள். ஆனால், அதன்பிறகும் தமிழ்நாட்டுக்கு நீதி கிடைக்கவில்லை. அதன்பிறகுதான் நீதிமன்றத்தை நாடி போராடி வருகிறோம். ஆனால், இன்னும் நீதி கிடைத்தபாடில்லை. அப்போதும் தமிழக கட்சிகள் இப்பிரச்சினையில் அரசியல் செய்தன் இப்போதும் அரசியல்தான் செய்கின்றன.

சரி, இந்த அரசியல் கட்சிகளை நம்பி பயனில்லை. எங்களுக்கான தண்ணீர் அளவு குறைக்கப்பட்டிருந்தாலும், அந்தக் குறைந்த அளவு தண்ணீராவது இனி முறையாக வரவேண்டும் என்னும் நிலைக்கு இப்போது நாங்கள் வந்துவிட்டோம். அதற்கு, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும். ஆனால், கர்நாடக முதல்வர் சித்தராமையா, இப்போதே காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க விடமாட்டோம் என்கிறார். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவில்லை என்றால் உச்ச நீதிமன்ற தீர்ப்பை அவமதித்த இந்திய பிரதமர் மீதும், கர்நாடக முதல்வர் மீதும் நடவடிக்கை எடுக்கவும், கர்நாடகாவில் ஆட்சியை கலைக்கவும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர திட்டமிட்டுள்ளோம்."

விமல்நாதன், பொதுச் செயலாளர், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம்: இது காவிரி விவசாயிகளுக்கு ஏமாற்றம் தரும் தீர்ப்பே. தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் சரியான வாதத்தை முன்வைக்கவில்லை. 1974-ஆம் ஆண்டு அப்போதைய திமுக அரசு, அன்றைய மத்திய காங்கிரஸ் அரசுக்குப் பயந்து பின்வாங்கியதைப்போல, இப்போதுள்ள எடப்பாடி அரசு, பாஜகவின் மத்திய அரசின் அரசியலுக்கு பயந்து பின்வாங்கியுள்ளது. தமிழர்களுக்கு துரோகம் இழைத்துள்ளது.

இந்த தீர்ப்பால் தமிழ்நாட்டுக்குள் புதிதாக ஒரு பிரச்சினை உருவாகப் போகிறது. எங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் விவசாயம் பொய்க்கப் போகிறது. இனி ஒரு போக சாகுபடிதான். இது ஒருபக்கம் இருக்க, காவிரியை நம்பியுள்ள சென்னை உட்பட 15க்கும் மேற்பட்ட மாவட்டங்களின் குடிநீர் தட்டுப்பாட்டை எப்படி சரி செய்யப் போகிறார்கள் என்பதுதான் பேரச்சமாக உள்ளது. இதுவரை இரண்டு மாநிலங்களுக்கு இடையே நடந்த சண்டையை, இனி தமிழகத்திற்குள்ளேயே மாவட்டங்களுக்குள் நடத்தும் அஸ்திவாரம் இந்த தீர்ப்பின் மூலம் தோண்டப்பட்டுள்ளது.

தனபால், பொதுசெயலாளர், காவிரி விவசாயிகள் சங்கம்: "நீதிமன்றத்தின் செயலை விமர்சிக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால், நீதிமன்றம் ஓரவஞ்சனையுடன், எங்களுக்கு பாதகம் செய்யும் வகையில் தீர்ப்பு சொல்லியுள்ளது. எப்படி விமர்சிக்காமல் இருக்க முடியும்.



உச்ச நீதிமன்ற நீதிபதி அமிர்தவராய் ஓய்வு பெறுகிறார் என்ற காரணத்தினாலே அவசரம் அவசரமாக வழங்கப்பட்ட தீர்ப்பு போலவே இது உள்ளது. இதற்கு மேல் எந்த முறையீடும், நீதிமன்றமும் இல்லாத நிலையில் எவ்வளவு சரியாக, திருத்தமாக இத்தீர்ப்பை அளித்திருக்க வேண்டும். ஆனால், இதில் நிறைய ஓட்டைகள் உள்ளன. தமிழகத்திற்கு 14.75 டிஎம்சி குறைத்துள்ள அதே நேரத்தில் தண்ணீர் திறந்துவிடும் மாதந்திரப் பட்டியலில் மாற்றம் இல்லை என்று சொல்கின்றனர். அப்படியானால் எந்த மாதத்தில் இந்தத் தண்ணீர் அளவை குறைப்பார்கள்?


ஜெயலலிதா உறுதியுடன் இருந்து, சரியாக இந்த வழக்கை எதிர்கொண்டதைப்போல, இப்போதுள்ள எடப்பாடி பழனிசாமி - ஓ.பன்னீர்செல்வம் எதிர்கொள்ளாமல் கோட்டை விட்டுவிட்டனர். இங்கு இருந்த உண்மையான வறட்சி மற்றும் 300 பேரின் தற்கொலையை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாமல் மூடி மறைத்துவிட்டனர். தமிழ் நாடு அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் சரியாக வாதாடவில்லை. அதுதான் தமிழ் நாட்டுக்கு பின்னடைவு ஏற்பட காரணம்."

28ஆம் ஆண்டு
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ்<br>பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Sell your home
faster and more money
$559,900
3 Bedrooms, 3 W Room
Hardwood Floors, Granite Counter Tops, S/S Appliances, Large Soaker Tubs, And Much More!
$589,900
3 Bedrooms, 3 W Room
The Gleaming Hardwood Floors, Open Concept Main Floor
$599,000
3 Bedrooms, 3 W Room
Beautiful All Brick Home In Desirable Newcastle-Graceffields Community/Every Room Freshly
$599,900
3 Bedrooms, 3 W Room
All Brick Home With Hardwood & Ceramic Floors Throughout The
$599,900
4 Bedrooms, 3 W Room
Recently Finished Basement, Fully Fenced Back Yard With 10X10
$649,000
3+2 Bedrooms, 2 W Room
Wonderful, Renovated Bungalow In Excellent Location. Gorgeous Kitchen With Granite Counter
$649,000
3 Bedrooms, 3 W Room
Hardwood Floors, Eat-In Kitchen Center Island, Granite Counters, L Master With 4 Piece Ensuite Bath,
$649,900
4 Bedrooms, 3 W Room
This Beautiful 5 Year New All Brick Home Large Eat-In Kitchen With Centre Island & Tons Of Storage
$654,800
3 Bedrooms, 3 W Room
Upgraded Cabinets, Granite Counters, Centre Island And S/S Appliances. No Sidewalk.
$659,990
4 Bedrooms, 3 W Room
40 Ft Corner Lot For Privacy! Thousands $ Spent In Upgrades
$665,000
3 Bedrooms, 1 W Room
Separate Basement Entrance, Long Driveway With Parking For 6 Cars.
$699,000
4 Bedrooms, 4 W Room
4 Bedroom Home In Desirable North Bowmanville. Close To Shopping & Minutes From The Upcoming 407. Main Level Has Hdwd Flooring In Liv/Din Rooms
$719,900
4 Bedrooms, 3 W Room
The Exquisite 2601 Sq Foot Home Is The Kingstown Model Built By Lindvest. Only One Year New. Hardwood Runs Through The Main Floor. Upgraded Kitchen
$745,000
4 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Ensuite And Walk-in Closet Tons Of $$$ Spent On Upgraded
$749,900
4 Bedrooms, 4 W Room
9 Ft Ceilings, Tall Front Door, Hardwood Floor Throughout Main Floor, Quartz Countertop,
Platinum Club Award
ELAGUPPILLAI SAINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Your home advertised 24 hours a day until it is sold. Your home advertised in full color prints ads every week until it is sold. Our team of specialists for the same price as hiring a single agent
Ph:1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



EARLY CHILDCARE ASSISTANT (ECA)
Work as Childcare Assistant , Childcare Worker Etc.
40 Weeks Diploma
Immediate Job Opportunities

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Work as Support Worker , Care Giver , Personal Attendant , Etc.
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Many Jobs are available

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

Part Time Courses
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Sage 300 ERP 2012 (Accpac)
Workshops
Food Handler Certification
First Aid & CPR
Mask Fit Testing

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Student Friendly Environment ● Ample Free Parking
● Placement Assistance ● TTC Accessible

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# இந்தியப்...

01 ஆம் பக்கத்தொடர்ச்சி

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸில் உள்ள சீக்கியரின் புனிதத்தலமான பொற்கோயிலுக்குக் கனேடியப்பிரதமர் குடும்பத்துடன் சென்றிருந்தார். அங்கு உணவு தயாரிக்கும் இடத்திற்குச் சென்று சப்பாத்தி செய்யும் பணியிலும் அவர்களுக்கு உதவினர். பஞ்சாப் மாநிலத்தின் தலைநகர் சண்டிகாரிற்குச் சென்று அம்மாநில முதல்வர் அம்ரீந்தர் சிங் ஐ சந்தித்துப் பேசினார்.



கனேடியப்பிரதமர் கனடா-இந்திய வர்த்தகக் கருத்தரங்கு ஒன்றில் மும்பாயில் கலந்து கொண்டு பல இந்திய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்தவர்களையும் சந்தித்து உரையாடினார். அவற்றுள் Tech Mahirndra, Jubilaht Bhartia Group, Infosys மற்றும் TATA நிறுவனம் முக்கியம் வாய்ந்தவை.

கனேடியப் பிரதமர், தனது பயணத்தின் போது Bollywood நடிகர்களான சாருக் கான் மற்றும் அமீர்கான் ஆகியோரையும் தமிழ் நடிகர் மாதவனையும் சந்தித்தார். இந்த நிகழ்வின்போது கனேடிய மற்றும் இந்தியத் திரைப்படத்துறைகள் இணைந்து படங்கள் தயாரிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் பற்றியும் உரையாடினார். கனேடியப் பிரதமர் பல தருணங்களில் இந்திய பாரம்பரிய உடையுடன் நிகழ்வுகளுக்குச் சென்றார். அவர் ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் எனது பிள்ளைகளுக்கு நான் இந்தியாவின் அதியுன்னதமான பன்முகத் தன்மையை எடுத்துக் காட்டுவது இப் பயணத்தின் ஒரு நோக்கம் என்றார். இந்து ஆலயத்திற்குச் சென்று, சீக்கிய ஆலயத்திற்கு சென்று, அங்கிருந்து ஒரு பள்ளிவாசலுக்குச் செல்வது இந்தியாவின் பன்முகத்தைக் காட்டுவதாகும் என்றார். இப்பன்முகத்தன்மையில் சவால்கள் இருப்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

பயணத்தின் இறுதியில் இந்தியப் பிரதமரையும் இந்திய அரசியல் தலைவர்களையும் சந்தித்தார். இதன்பின்னர் இரண்டு பிரதமர்களும் ஊடகவியலாளர்களுடன் உரையாடினர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், பாதுகாப்பு, ஒத்துழைப்பு உட்பட பல சிக்கலான விடயங்களை நாங்கள் பேசினோம். பயங்கரவாதமும், தீவிரவாதமும் எங்கள் நாடுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கின்றன. அவற்றை நாங்கள் மற்றைய நாடுகளுடன் சேர்ந்து எதிர்த்துப் போராட வேண்டும் என்றார்.

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ உரையாற்றுகையில் கனடாவில் இந்திய வம்சாவழியினர் 1.4 மில்லியன் உள்ளனர். நாங்கள் ஜனநாயக மரபுகளை மதிக்கின்றோம். பன்முகத்தன்மையை ஆதரிக்கின்றோம் என்றார். பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கனேடியப் பிரதமர் கனடா எப்பொழுதும் ஓர் ஐக்கிய இந்திய நாட்டையே ஆதரிக்கும். தீவிரவாதத்திற்கோ பிரிவினைக்கோ கனடா ஆதரவளிக்காது. ஆனால் கனடாவில் அரசியல் மற்றும் பேச்சுச் சுதந்திரம் எல்லோருக்கும் உள்ளது என்றார்.

இந்தியாவில் உள்ள கனடா தூதரக அதிகாரிகள் ஏற்பாடு செய்த விழா ஒன்றில் கலந்து கொண்ட ஜஸ்ரின் ரூடோ பங்கார இசைக்கு நடனமாடினார். டெல்லியில் ஒரு பாடசாலைக்குச் சென்ற ஜஸ்ரின் ரூடோ அவர்களது மைதானத்தில் துடுப்பாட்டம் விளையாடினார். அவர் துடுப்பாட்ட மட்டையை சுழற்றிக் கொண்டே நடந்த காட்சி சுற்றியிருந்தவர்களை ஆச்சரியப்பட வைத்தது. அவருடன் வந்திருந்த அவரது குழந்தைகளுக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர்கள் கபில் தேவ், அசாருதீன் போன்றவர்கள் பயிற்சி வழங்கினர்.

கனேடியப் பிரதமரும் அவரது குழுவினரும் இவ் இந்தியப் பயணத்தின்போது 6 புரிந்துணர்வு ஒப்பந்தகளை இந்தியாவுடன் செய்தனர்.



- •. இந்திய அணுசக்தி நிறுவனத்திற்கும் கனடாவின் இயற்கை வள நிறுவனத்திற்கும் இடையே விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம்.
- •. இந்திய அரசிற்கும் கனேடிய அரசிற்கும் இடையே உயர்கல்வி ஒத்துழைப்புப்பற்றி செய்யப்பட்ட ஒப்பந்தம். 124,000 இந்திய மாணவர்கள் தற்போது கனடாவில் கல்வி பயில்கின்றனர்.
- •. இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிற்கும் கனேடிய பாரம்பரியத்துறை (Heritage) அமைச்சின் விளையாட்டுப் பிரிவினருக்கும் இடையே விளையாட்டுத்துறை தொடர்பாகச் செய்யப்பட்ட ஒப்பந்தம்.
- •. இந்தியாவின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சிற்கும் கனேடிய புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞானம் மற்றும் பொருளாதார அமைச்சுகளுக்கு இடையே மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக செய்யப்பட்ட ஒப்பந்தம்.
- • . இந்திய அரசிற்கும் கனேடிய அரசிற்கும் இடையே எரிசக்தி சம்பந்தமாக செய்யப்பட்ட ஒப்பந்தம்.
- •. இந்தியத் தொழில்துறை தொடர்பான அரச நிறுவனத்திற்கும் கனேடிய அறிவுசார் சொத்துக்கள் உரிமைகள் நிறுவனத்திற்கும் இடையே அறிவுசார் சொத்து உரிமைகள் தொடர்பாக செய்யப்பட்ட ஒப்பந்தம்.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

# காப்புறுதி கேள்வி பதில்கள்?




சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999


**இன்னொரு வாகனம் இன்று வாங்கியுள்ளேன். ஏற்கனவே உள்ள வாகனத்தின் காப்புறுதியோடு இப் புதிய வாகனத்தினை செலுத்தலாமா?**

ஒன்ராரியோ மாகாண வாகான காப்புறுதி சட்டத்தில் இவ் வினாவுக்குரிய விடை வழங்கப்பட்டுள்ளது. 'இன்சூரன்ஸ் ஹொற் லைன்' (Insurance hot line) என்ற இணைய தள தகவல் சஞ்சிகையில் (மே12, 2010) இவ் வினாவுக்குரிய பதில் தெளிவு பண்ணப்பட்டிருந்தது.

**முதல் 14 நாட்களுக்கு மட்டும் ஏற்கனவே உள்ள வாகன காப்புறுதியில் புதிய வாகனத்தினை செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.**

இன்று வாங்கிய வாகனம் மேலதிக ஒரு வாகனமாகவும் இருக்கலாம். ஏற்கனவே உள்ள வாகனத்தினை விற்க போகும் நோக்கில் பிரதியீடாகவும் இருக்கலாம். (Replacement Vehicle) ஆனால் சில நிபந்தனைகள்!

1, இரு வாகனத்திற்கும் தாங்களே உரிமையாளராக இருக்க வேண்டும்.
2. வாங்கி, விற்பனை செய்யும் வர்க்கமாக இருக்கக் கூடாது.
3. காப்புறுதி கம்பனிக்கு அறிவித்திருக்க வேண்டும்.

**கனடாவில் உள்ள எனது வாகனத்தில் அமெரிக்க எல்லை கடந்து மெக்ஸிக்கோ வரை சென்று அங்கு ஒரு விபத்தினை எதிர்கொண்டால் காப்புறுதி கை கொடுக்குமா?**

கனடாவில், நாம் வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனத்திற்கு பெற்றுக் கொள்ளும் வாகன காப்புறுதி எந்த இடம்வரை வாகனம் செலுத்த அனுமதிக்கும் என்பது திட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

- கனடாவில் உள்ள சகல மாகாணங்கள்!
- அமெரிக்காவில் உள்ள சகல மாநிலங்கள்!
- இவ்விரு நாடுகளுக்கும் இடையில் தரை மார்க்கமாக எல்லை கடப்பது தவிர கடல் மார்க்கமாக கப்பலில் வாகனத்தினை எடுத்துச் செல்லும் போதும், வாகனத்திற்கு ஏதாவது பாதிப்புகள் நடந்தால் நட்டஈடு கிடைக்கும்.

(உதாரணமாக அமெரிக்காவின் ஒரு மாநில மான ஹவாய் தீவுக்கு அல்லது கனடாவில் உள்ள நியூபவுண்லாந்து மாகாணத்திற்கு செல்லும் போது, காருடன் போக வேண்டுமானால் கடல் மார்க்கமாக கப்பல் மூலமே எடுத்துச் செல்ல வேண்டும்.)

இவ்விரு நாடுகளையும் கடந்து மெக்ஸிக்கோ சென்றால் அங்கு கனடாவில் பெற்ற காப்புறுதி பாதுகாப்பு தரமாட்டாது. அந்த நாடும் அனுமதிக்காது.

# கனடிய தகவல் தொடர் 285

**'காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்தி உடல் காயமடைந்தவர் கனடாவில் நட்டஈடு பெறலாம்'**
**அது எங்கே? எப்படி சாத்தியமாகும்.?**

மாகாண அரசின் கீழ் இயங்கும் 'நிதி சேவைகள் சபை' (Financial service commission of Ontario) இத்தகைய நிலையில் இருப்போருக்கு நட்டஈடு வழங்குவதற்காக ஒரு நிதியத்தினை நிர்வகிக்கின்றது.

அதன் விபரங்கள் பின்வருமாறு!
Motor Vehicle Accident Claims Fund
5160, Yonge St, P.O. Box 85
Toronto, ON M2N 6L9

Phone - 416-250-1422
1-800-268-7188

ஆனால் இங்கு நட்டஈடு பெறுவது என்பது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். விபத்தில் காயமடைந்தவர் எந்த இடத்திலும் நட்டஈடு பெற இயலாத நிலையில் இறுதியான புகலிடமாகவே இது இருக்க வேண்டும்.

இது ஒரு வட்டியில்லாத கடன் மாதிரி வழங்கப்படுவதால் பகுதி பகுதியாகவோ அல்லது முழுவதாகவோ திருப்பிச் செலுத்த வேண்டும்.

**'காப்புறுதியில்லாத வாகனம்' ஒன்றோடு மோதி விபத்து நடந்தால் நட்டஈடு வழங்கல் எப்படி முன் எடுக்கப்படுகின்றது?**

காப்புறுதியில்லாத வாகனத்துடன் விபத்தினை எதிர்கொண்ட நிலைமையினை இரு வகைக்குள் கருத்தில் கொள்ளலாம்.

1. காப்புறுதியில்லாத நமது வாகனம் விபத்துக்குள்ளான நிலைமை.

- இந்த நிலைமையினை எதிர் கொண்டவர்களுக்கு தமது வாகனத்தின் பாதிப்புக்கு, தப்பு என்பது எவையுமில்லாமல் இருந்தாலும் எதுவிதமான நட்டஈடும் பெற முடியாது.
- காப்புறுதியில்லாது வாகனம் செலுத்திய தற்குரிய சட்டரீதியான தண்டனைகளை எதிர்கொள்வதில் இருந்து தப்பவும் முடியாது.
- தப்புக்குரிய மற்ற சாரதி மீது பாரிய நட்டஈடு கோரி எதுவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது.
- ஆனால் விபத்தில் ஏற்பட்ட உடல் காயத்திற்கு மட்டும் மாகாண அரச நிதியம் (Motor Vehicle Accident Claim Fund) ஒன்றிலிருந்து சில நிபந்தனைகளுடன் ஒரு குறிப்பிட்ட தொகை வரை நட்டஈடு கோரலாம்.

அது வட்டியில்லாது பகுதி பகுதியாக திருப்பி கொடுக்கும் ஒரு கடன் மாதிரியே கருதப்படும்.

**2.காப்புறுதியில்லாத ஒரு வாகனத்துடன் நடந்த விபத்தின் நிலைமை!**

கண்டிப்பாக, சட்டரீதியாக வைத்திருக்க வேண்டிய அடிப்படை வாகன காப்புறுதி திட்டத்தில், காப்புறுதியில்லாத வாகனத்துடன் விபத்து நடந்தால், தங்கள் வாகனத்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.




உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வேதங்கள் தழைத்த காலத்தில், இந்தச் சமூகத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் பெரிய அளவில் வித்தியாசங்கள் இல்லை. இருவரும் எல்லாவற்றிலும் சமமாகப் பங்கு கொள்ளமுடிந்தது.

ஜனகரின் சபையில் யக்ஞவாக்கியர் என்று பெரும் பண்டிதருக்கும், மைத்ரேயி என்ற பெண்ணுக்கும் ஆன்மீகம் தொடர்பாக வாக்குவாதம் சில நாட்கள் தொடர்ந்து நடந்தது. யக்ஞவாக்கியரின் அத்தனை கேள்விகளுக்கும் மைத்ரேயியால் விடை சொல்ல முடிந்தது. ஆனால், மைத்ரேயியின் சில நுட்பமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் யக்ஞவாக்கியர் திணறும் நிலைமை வந்தது. அவமானத்துடன் அவள் பாதங்களில் வீழ்ந்து யக்ஞவாக்கியர் தன்னை அவளுடைய சீடராக ஏற்கும்படி கோரினார் என்று புராணம் சொல்கிறது. அந்த அளவுக்குப் பெண்களின் பெருமை ஓங்கியிருந்த காலம் உண்டு.

ஓர் ஆணால் உணர முடியாத சில நுட்பமான உணர்வுகளை ஒரு பெண்ணால் உணர முடியும். ஆண் தன்னுடைய புத்தியால் செலுத்தப்படுகிறான். பெண்ணோ தன்னுடைய உள்ளுணர்வால் செலுத்தப்படுகிறாள்.

புத்தி என்பது வெளியிலிருந்து சேகரித்தது. எந்தத் தரத்தில் கிடைத்ததோ, அந்தத் தரத்தில் தான் செயல்படும். உள்ளுணர்வு வெளி அழுக்குகளால் அசிங்கப்படாதது. தூய்மையானது புத்தியைவிட உயர்வானது. அதனால், பெண்கள் ஆண்களை விட உணர்வுகளில் மேம்பட்டிருக்கிறார்கள். அப்புறம் பெண்களுக்கு ஏன் மரியாதை மறுக்கப்படுகிறது?

எந்தக் காலகட்டத்திலும், உடல்ரீதியாக ஆண் என்பவன் பெண்ணைவிட பலம் மிகுந்தவனாக விளங்குகிறான். ஒரு தேசத்துக்குள் வெளியார் படையெடுத்து வர ஆரம்பித்ததும், முதலில் பெண்களைத்தான் குறிவைத்தார்கள். உடலளவில் பலம் குறைந்தவர்களாக இருந்த பெண்களை அந்நியரிடமிருந்து காப்பாற்றும் பொறுப்பு ஆண்களுக்கு வந்தது. பெண்களை வெளியே நடமாட விடாமல் வீட்டுக்குள் அடைத்துவைக்கும் வழக்கம் அப்போதுதான் ஆரம்பித்தது.

ஆணை முன்னிலைப்படுத்தி சமூக விதிகள் வகுக்கப்பட்டன. அதிகாரத்தை ருசிகண்ட பின் இன்றுவரை அதை மாற்ற ஆண் வர்க்கம் விரும்பவில்லை.

ஒரு பெண் பிறக்கும் முன்பே அவளுடைய சுதந்திரத்தைப் பறிக்கவல்ல சாஸ்திரங்களை ஆண் எழுதிவைத்தான். பாரத தேசத்தில் மட்டுமல்ல, உலகின் பலபாகங்களில் ஆண் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளச் செய்த இந்த தந்திரங்களுக்குப் பெண் பலியானாள். நூறு வருடங்களுக்கு முன்பு, சில ஆசிய நாடுகளில் ஆணைக் கொன்றால் மரண தண்டனை, பெண்ணைக் கொன்றால் பாவமில்லை என்ற அளவில்கூட சட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்தச் சட்டங்களை ஆண்கள் இயற்றியது ஏன்?

அடிப்படையில் பெண்ணை தன்னைவிடத் தாழ்ந்தவளாக அவன் நினைத்துவிட்ட தைரியத்தால் அல்ல, பெண் தன்னைவிட மேன்மையானவள் என்பதைப் புரிந்துகொண்ட ஆழமான அச்சத்தால்.

எதற்காகப் பெண்ணைப் பார்த்து ஆண் பயப்படுகிறான்?

மாபெரும் அறிவாளியாக இருந்த ஒருவனுக்கு பள்ளிக்கூடம் ஒன்றில் குழந்தைகளுக்கான வகுப்பை எடுக்கும் ஆசிரியர் வேலைதான் கிடைத்தது. வகுப்பில் ஒருநாள் 'இந்த பூமி உருண்டையின் பாரம் எவ்வளவு என்று யாருக்காவது தெரியுமா?' என்று கேட்டான். மாணவக் குழந்தைகள் பெற்றோர்களைப் போய்க் கேட்டுத் தொந்தரவு செய்தன. பாதிப் பெற்றோருக்குச் சரியான பதில் தெரியவில்லை. குத்துமதிப்பாக ஒரு பதிலைச் சொல்லி அனுப்பினார்கள்.

மறுநாள் வகுப்பில் குழந்தைகள் ஆளாளுக்கு ஒவ்வொரு பதில் சொன்னார்கள்.

'எல்லாமே தப்பு' என்றான் அறிவாளி. கரும்பலகையில் பல இலக்க எண் ஒன்றை எழுதி 'இதுதான் பூமியின் உண்மையான எடை' என்றான்.

'சார், எனக்கு ஒரு சந்தேகம்...' என்று ஒரு குழந்தை எழுந்தது. 'நீங்கள் சொன்ன எடை பூமியில் வாழும் மக்களோடு சேர்த்தா, மக்கள் இல்லாமலா?'

அறிவாளி பதில் இல்லாமல் திக்கினான். திணறினான். தலை குனிந்தான்.

எப்பேர்ப்பட்ட அறிவாளியாக இருந்தாலும் புரிந்துகொள்ள முடியாத சில விடயங்கள் பூமியில் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது பெண்!

உலகின் பல விடயங்களை விஞ்ஞான பூர்வமாக பகுத்துப் புரிந்துகொள்ள ஆணுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அவனுக்கு அருகிலேயே இருந்த பெண்ணின் நுட்பமான உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாமல் போனது. புரிந்துகொள்ள முடியாததின் மீது இயல்பாகவே அச்சம் வரும்!

அச்சத்தால் பெண்ணை ஏறிட்டுப் பார்க்க விடாமல், தன் முரட்டுத்தனத்தால் தாழ்த்தி வைத்தான். தன் உடல் வலுவைப் பிரயோகித்து, புத்தியின் தந்திரங்களைப் பயன்படுத்தி, அவளைத் தன் நிழலில் வைத்திருக்க... செய்ய வேண்டியதை எல்லாம் அவன் செய்து முடித்தான்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

பெண்களாவது துணிச்சலுடன் எழுந்து இந்த நிலைமையை வளரவிடாமல் தடுக்கப் பார்த்தார்களா? இல்லை!

தீவிரமான வாழ்க்கை வாழ்வதை நிறுத்திக்கொண்டு, ஆண்களின் நிழலில் வசதியாக வாழ்வதை அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். உண்மையில், ஆணுக்குப் பெண்ணோ, பெண்ணுக்கு ஆணோ தாழ்ந்தவர் இல்லை! ஆண், பெண் என்று இருவரையும் வித்தியாசப்படுத்திப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இரண்டு பேரும் இல்லாமல் குடும்பமோ, சமூகமோ, உலகமோ, எதுவுமே முழுமையடையாது.

### குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'மாமியார்-மருமகள் பிரச்சினைகளுக்குத் தீர்வே கிடையாதா?

'பெண்களுக்குத் தங்கள் மதிப்பு புரியாததால் தான் இந்தப் பிரச்சினை.

சமூகத்தில் இன்றைக்கு நீங்கள் எப்படிப்பட்ட அந்தஸ்தை அனுபவித்துக்கொண்டு இருந்தாலும், தெருவில் இறங்கி சச்சரவு செய்ய ஆரம்பித்ததால் உங்கள் மதிப்பு என்ன ஆகும்? உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளத்தான் முடியுமே தவிர, மேன்மை எப்படிக் கிடைக்கும்.?

பெண்கள் தங்களை நடத்திக்கொள்வதில்தான் அவர்களுக்கான மரியாதை கிடைக்கும். முக்கியமாக ஒரு பெண் அடுத்த பெண்ணை மதிப்புடன் நடத்தக் கற்றுகொள்ளவில்லை என்றால், தனக்கு மட்டும் மதிப்பு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

உங்கள் மகள்களையும், மருமகள்களையும் நீங்கள் இந்த அபத்தங்களிலிருந்து விடுவிக்கவில்லை என்றால், நாளைய தலைமுறையும் உயரப்போவதில்லை!'




## கூன்முதுகு...


### 13 ஆம்பக்கத்தொடர்ச்சி

இது உளது. இது முதுகுவளைவை நிமிர்த்த உதவுகிறது. முதலில் கஷ்டமாக இருந்தாலும் பின்பு பழகி விடும். தற்போதைய Brace நவீன மயமானது. இது பொதுவாக இளையவயதினர்க்கு உதவலாம்.

முதுகெலும்பில் இதனை செய்வதால் மிகுந்த கவனம் தேவை. மிகவும் கடுமையான கூன் உள்ளவர்களுக்கே இது உதவுகிறது. மிகுந்த வளைவு பெறும் கூன் உடையவர்கள், மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத முதுகுவலி உள்ளவர்கள், சுவாசித்தல் பிரச்சனை உள்ளவர்கள், நரம்பு பாதிப்புகள் உள்ளவர்கள், மேலும் மோசமடையக் கூடிய பாதிப்பு ஏற்படக் கூடியவர்களுக்கு சத்திர சிகிச்சை கூட சிலசந்தர்ப்பங்களில் உதவலாம்.


Spinal Fusion எனப்படும் சத்திரசிகிச்சை இதற்கு பாவிக்கப்படுகின்றது. முதுகுப்பகுதியில் உலோக தட்டுகள், பூட்டும் வழிகள், பொருந்தும் வழிகள் மூலம் கூன் நிமிர்த்தப்படுகின்றது. மற்றவர்களது தானமாகக் கிடைக்கும் முதுகெலும்பையும் பாவிக்கலாம்.

இதற்கு 8 மணிநேரம் எடுக்கும். 6 கிழமைகள் ஓய்வு பெறவேண்டும். இதுகூட இளம் வயதினர்க்கே உதவுகிறது. சத்திரசிகிச்சையின் பின்பு சிலருக்கு தொற்றுநோய்வரலாம். சிலருக்கு கூடிய இரத்தம் வெளியேறலாம். முதுகில் காயம் பட்டவர்களாயின் சிலரை அது முற்றாக பாரிசவாத நிலைக்கு கொண்டுசென்று விடலாம். அதாவது உடலின் பல உறுப்புகள் செயல்படமுடியாது.



மானிடராகப் பிறத்தல் அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது. என்ற பாடலில் கூட இந்தக் கூன் என்பதற்கு முக்கிய இடம் உள்ளது. பாரதி கூறிய நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வைக்கும் முதுகு கூன்படாமல் இருக்க வேண்டும். வாழ்க்கையை அனுபவிக்க கூன் ஏற்படுதல் பெரும் தடையாகும்.

# கூன்முதுகு



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்


## Kyphosis

கூன்முதுகுள்ள பலர் எந்த சமூகத்திலும் காணப்படலாம். குறிப்பாக வயதுபோன பலர் கூன் முதுகுடன் நடந்து செல்வதனையும், தலை நிமிர முடியாமல் நிலத்தை பார்த்தபடி செல்வதனையும் காணலாம். கூனற்கிழவன், கூனற்கிழவி என்று அவர்கள் அழைக்கப்பட்டதும் நினைவுக்கு வரலாம். ராமாயணத்தில் வரும் கூனி என்னும் பாத்திரமும் ஞாபகத்திற்கு வரலாம். எப்படிப் பார்த்தாலும் இளமையில் நேராக நின்றிருந்த முதுகெலும்பு (Spine) படிப்படியாக வெளிப்புறமாக வளைந்து, முதுகுப்புறம் வெளிப்பக்கமாக தள்ளி, அசாதாரண தோற்றத்துடன் ஏற்படுவதே கூன் விழுதலாகும். மருத்துவத்தில் இவ்வாறு கூன் விழுவதனை, 'Khphosis' என்பர். ஆங்கிலத்தில் அதனை 'Hunch Back' எனவும் கூறலாம். கிரேக்க சொல்லான Khphosis என்ற சொல்லில் இருந்தே இச் சொல் பிறந்ததாகும். பொதுவாக பெண்களுக்கே கூடுதலாக இக்கூன் விழுதல் ஏற்படுகிறது.

கூன் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் உள்ளன. பொதுவாக முதுகெலும்பு தட்டு தேய்வுறுவது (Disk Degeneration அல்லது ஆதரைட்டிஸ் (Arthritis) எனப்படும் மூட்டு வலிகளால் கூன் ஏற்படலாம். சிலருக்கு எலும்பு சிதைவு (Osteoporosis) ஏற்பட்டு அதனால் ஏற்படும் முறிவுகளால் ஏற்படலாம். சிலருக்கு காயம் ஏற்படுவதனால் ஏற்படலாம். சிலருக்கு தண்டு எலும்புகள் (Vertebra) நழுவி முன்னோக்கி தள்ளப்படுவதால் ஏற்படலாம். அத்துடன் 'Scoliosis' எனப்படும் முதுகுவளைவதால் ஏற்படலாம். அத்துடன் முதுகு கூன் விழக்கூடிய படுக்கைகளில் தொடர்ந்து படுப்பதாலும் அதன் வடிவம் (Postyre) மாறக்கூடும்.

வேறுசில காரணிகளும் கூன் ஏற்படுவதற்கு காரணங்களாகும். Endocrine என்னும் சில வகை நோய்கள் ஏற்படுதல், இணைப்பு திசுக்களின் ஒழுங்கீனம், கசரோகம் (Tuberculosis) எனப்படும் தொற்றுநோய், தசைகளின் ஒழுக்கீனம் (Muscular Dystrophy) Neurofibromatosis paget நோய், போலியோ (Polynucleotide, Spina bifida) கட்டிகள் (Tumor) என்பனவும் இக்கூன் விழுவதற்கு காரணங்களாகும்.

பலர் வயது போவதால் கூன் ஏற்படுகிறது என்று கூறி எதுவித சிகிச்சையும் எடுப்பதில்லை. இதனால் எந்த உபாதைகளும் இல்லை என கூறிவிடுவார்கள். ஆனால் அவர்களுக்கு கூடுதலான கூன்விழும் போது மூச்சுவிடுவதில் சிரமம், களைப்பு, சிறிதளவு முதுகுவலி, தோற்ற மாறுதல், முதுகெலும்பில் ஒருவகைப்பிடிப்பு, இழைநார் வலி ஏற்படலாம். பின்னாட்களில் இது மோசமாகி விடாதிருப்பதற்கு சிகிச்சை எடுக்க வேண்டியது அவசியமாகும்.




பொதுவாக இளையோருக்கு கூனல் ஏற்படுவதினை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவை Postural Kyphosis, Scheuermann's Kyphosis, Congenital Kyphosis என்பனவாகும். முதலாவது வகை இயல்பாகவே ஆண், பெண், இருபாலாரின் இளம் வயதிலேயே அவதானிக்கலாம். தசைப்பலவீனம், குருத்தெலும்புகளின் பலவீனம் என்பவற்றால் கூனல் தோற்றமளிக்கலாம். அவர்களது தண்டெலும்புகளும் அதற்கேற்ற மாதிரி தோற்றமளிக்கும். இவர்கள் இளம் வயதிலேயே முதுகு தசைகளுக்கு வலுவூட்டலாம். Chiropractic மூலம் சீர் செய்யலாம்.

இரண்டாவது வகையான Scheuermann's வகையும் இளம் வயதில் அவதானிக்கலாம். இதுவும் தண்டெலும்புகளின் ஒழுங்கீனத்தால் ஏற்படுவதாகும். நிழலுரு XRays மூலம் அவதானித்தால் 5 டிகிரி சரிவுள்ளதாக தண்டெலும்புகள் தெரியும். அதாவது இந்த தண்டெலும்புகள் இயல்பாகவே அவ்வாறு ஏற்படுகின்றன.

மூன்றாவதான Congenital வகை பிறப்பிலேயே பிள்ளையின் தண்டெலும்புகளில் ஏற்படுவதாகும். பிள்ளை வளர, வளர இதன் தன்மையும் மாறுபடலாம். பாரிசவாதம் ஏற்பட்ட சில பிள்ளைகளுக்கு இவ்வாறான நிலை உள்ளது. முதியோர்களுக்கு ஏற்படும் கூனல் தோற்றத்தினை பலவழிகளில் காணலாம். குறிப்பாக Osteoporosis எனப்படும் எலும்பு சிதைவினால் ஏற்படுவது ஒரு வகை. இதன்போது தண்டெலும்புகள் அமுக்கமடைந்து பல முறிவுகளை ஏற்படுத்தும். இரண்டாவது முறை ஆதரைட்டிஸ் மூலம் எலும்பு தட்டுகள் தேய்வடைவதால் ஏற்படலாம். நீண்டகால தேய்வுகளால் குருத்தெலும்புகளும் சிதைவடையும். ஒருதடவை கூன் விழுந்தால் அது கூடவே செய்யும். அத்துடன் ankylosing spondylitis, முதுகெலும்பு தொற்றுநோய்கள், கட்டிகள் என்பனவும் இதனை மேலும் கூட்டலாம். புற்றுநோய் ஏற்படுவதாலும் சிலருக்கு கூன் ஏற்படுகிறது. பொதுவாக பெண்கள் பாதிக்கப்படுவதற்கு அவர்களது உடல் அமைப்பு காரணமாகி விடுகிறது. குறிப்பாக அவர்களுக்கு Osteoporosis கூடுதலாக வருகிறது. அத்துடன் Corticosteroids எனப்படும் மருந்துப்பாவனையும் அவர்களைப் பாதிக்கிறது.

கூன் விழுவதால் ஒருவருடைய தோற்றமே மாறி விடுகிறது. தலையை மேலே நிமிர்த்த முடியாமல் நிலத்தைப்பார்த்தபடி சிலவேளைகளில் தடியையும் ஊன்றிக்கொண்டு ஔவையார் போல நடக்க நேரிடும். முதுகு ஒரு வட்டம்போல் வளைந்து விடுகிறது. இவ்வாறு நடப்பதால் முதுகுவலியும் ஏற்படுகிறது. இவ்வாறு வளைவு ஏற்படுவதால் சமிபாடு குறைகிறது. நிமிர்ந்து நடக்கவும் முடியாது ஒருபுறம் சரிந்தே படுக்க நேரிடும்.

சிறுவயதினருக்கு இவ்வாறான முதுகுவளைவு இருந்தால் குடும்பவைத்தியரிடம் ஆலோசிப்பது நலம். அவர் முதுகெலும்பு வைத்திய நிபுணரிடம் செல்ல சிபார்சு செய்வார். அவ்வாறு நிபுணரிடம் செல்ல முன்பதாக சில குறிப்புக்களை தயாரித்து செல்வது நலம்.

இவ்வாறான கூன்விழுதல் எப்போது முதல் அவதானிக்கப்பட்டது? ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதா? குடும்ப உறுப்பினர்களுக்கு இப்படியான பிரச்சினைகள் இருந்துள்ளதா? ஏதாவது மருந்துகள் பாவிக்கப்படுகின்றதா? இப்படியான தயாரிப்பு சிறுவயதினர்க்கும் முதியோர்க்கும் பொதுவானவை.

வைத்தியரும் சில வினாக்களை வினவலாம். முதுகுவலி இருந்தால் எந்த இடத்தில் கூடுதலாக வலிக்கிறது? காய்ச்சல், குளிர், அல்லது விபரிக்க முடியாத எடை இழப்பு ஏற்படுகிறதா?, உடல் பலவீனம், விறைப்பு, நடப்பதில் கஷ்டம், வயிற்றுக் கோளாறுகள் உள்ளதா? களைப்புடன் மூச்சு விடுவதில் கஷ்டம் உள்ளதா? என வினவலாம்.

வைத்திய நிபுணர் முதலில் உயரத்தை அளந்து பின்பு முதுகினை வளைக்க கேட்பார். அப்போது முதுகு வளைவு சரியாகத் தெரியும். நரம்பு சோதனை தசைகள் பரிசோதனை நிகழலாம். முதலில் நிழலுரு (X-Rays) படம் எடுக்கப்படும். இதில் முதுகு வளைவு எந்த அளவுக்கு உள்ளது என அறியலாம். இதன்மூலம் தண்டெலும்புகளின் நிலைப்பாட்டினை அறிந்து செயல்படலாம்.

அடுத்து Computerized Tomography (CT Scan) எனப்படும் கணினி மூலமான பரீட்சை செய்யப்படும். வேறுவேறு பக்கங்களில் எடுக்கப்படும் குறுக்குமுகமாக எவ்வாறு முதுகெலும்பு அமைப்பு உள்ளது என்பதனை கண்டு கொள்ளலாம். இத்துடன் Magnetic Resonance Imaging (MRI) எடுக்க வேண்டும். இதனால் கட்டிகள் அல்லது தொற்றுநோய்களை அறியலாம். MRI என்பது காந்த அலைகள் எலும்பில் உள்ள எல்லா விபரங்களையும் துல்லியமாக தருவதாகும். விறைப்பு அல்லது தசை பலவீனங்கள் இருந்தால் நரம்புகள் பற்றிய ஆய்வு செய்ய நேரிடும்.

இவ்வகையான பிரச்சினை நிலமைக்கும், காரணிகளுக்கும், அடையாளங்களுக்கும் ஏற்பவே சிகிச்சை செய்ய நேரிடும். முக்கியமாக நோவினை நீக்குவதற்கான சில மாத்திரைகளை உட்கொள்ள நேரிடும். ரைலனோல், அட்வில், நப்றோக்சன் (Naproxen) என்பன உள. சிலவேளை இன்னும் கூடிய வலிநீக்கி மருந்துகள் வழங்கப்படலாம். அத்துடன் எலும்பு சிதைவுக்குரிய சில மருந்துகள் வழங்கப்படலாம். இவை எலும்பை வலுவாக்கும் சக்தியுள்ளவை.

பொதுவாக மருந்தினைவிடவும் தொடர்ச்சியான உடற்பயிற்சிகளே முக்கியமானவை. இயன்முறை சிகிச்சை (Physiotherapy) யும் சேர்த்து செய்யப்படலாம். தலைகுப்புறபடுத்து தலையை மட்டும் மேல் தூக்குவது ஒரு பயிற்சி. கைகளை மேலே நீட்டி Y போன்ற நிலையில் வைத்திருக்க வேண்டும். மீளவும் கைகளைப் பழைய நிலைக்கு கொண்டு வந்து விடவேண்டும். இவ்வாறு மூன்று நான்கு தடவை செய்ய வேண்டும். இதனை Laydown Y போன்று பயிற்சித்தல் எனலாம்.

அடுத்த பயிற்சி 'Wall Sliding' எனப்படும். சுவரில் முதுகை வைத்துக்கொண்டு கைகளை W போன்று வைத்துக்கொண்டு மீண்டும் கைகளை மேலுயர்த்தி Y நிலைக்குக் கொண்டு வருவதாகும். இதனை 5 தடவை செய்ய வேண்டும். அடுத்த பயிற்சி T.Spine Rotation எனப்படும். இப்பயிற்சியில் கைகளை தோள்மட்டத்திற்கு விரித்து பழையபடி உள்ள நிலைக்கு கொண்டுவருவதாகும். இப்படி வலது இடது கைகளை முடிந்த அளவுக்கு நீட்டுவது இந்த முறை. அடுத்து முறை Crucifix எனப்படும்.

இதில் நிலத்தில் இருந்து முதுகை நேர்பட முயற்சிப்பதாகும். அத்துடன் முன்னே வளைந்து நிமிரலாம். இப்படியான பயிற்சிகள் Chiropractic சிகிச்சையில் உள. சில வேளைகளில் யோகாசனபயிற்சியும் உடலை வலுப்படுத்த உதவும். அத்துடன் Pilates என்ற ஒரு பயிற்சியும் உள்ளது. இதில் 500க்கு மேற்பட்ட வகைகள் உள. இதில் நடைப்பயிற்சி, சைக்கிள் ஓடுதல், நீந்துதல் போன்ற பயிற்சிகள் உள.

சிலருக்கு முதுகுப் புறத்தில் Brace எனப்படும் ஒரு தகடு முதுகில் பொருத்தப்படலாம். பற்கள் சமப்படுவதற்கு பயன்படும் Brace என்னும் ஒருவித தட்டு அமைப்புப் போல்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...)

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
GR 9- 12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

# சட்டம்...

03 ஆம் பக்கத்தொடர்ச்சி

வருகின்றனர். ஜனாதிபதியும் எதிர்வரும் நாட்களில் பல மாற்றங்களை ஏற்படுத்தி, வேகமான நகர்வுகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். பொருளாதார முகாமைத்துவ மாற்றங்களுடனான புதிய வேலைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பொருளாதார முகாமைத்துவத்தின் போது நாட்டுக்குத் தேவையான துரித மாற்றங்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் ஆழமாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டம் ஒழுங்கு அமைச்சு பிரதமர் ரணிலிடம்!

இப்போது முதற்கட்டமாக அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் சட்டம், ஒழுங்கு அமைச்சு மிக முக்கியமானது. இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுள்ளார்.

ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்களுக்கு - குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்தினர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை தண்டிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியை விரைவு படுத்த வேண்டுமானால் பொருத்தமான ஒருவரை அப்பதவிக்கு நியமிக்க வேண்டும் எனவும், அதற்கு சரத் பொன்சேகாவே பொருத்தமானவர் என்றும், அவருக்கே அந்த அமைச்சு வழங்கப்படலாம் என்றும் செய்திகள் வெளிவந்தன. இந்தப் பதவியை சரத் பொன்சேகாவும் விரும்புவதாகவே குறிப்பிட்டிருந்தார். “சட்டம் ஒழுங்கு அமைச்சை தன்னிடம் ஒப்படைத்தால் ஆறு மாதங்களுக்குள் தவறு செய்தவர்களுக்கு தண்டனை



வழங்குவேன்” என அவர் தெரிவித்திருந்தார். குற்றவாளிகளை தண்டிக்க அரசாங்கம் கடந்த காலத்தில் தவறியதனாலேயே மக்கள் தேர்தலில் இவ்வாறு பாடம் புகட்டியுள்ளனர் என்றும், தனக்கு சம்பந்தப்பட்ட அமைச்சை வழங்கினால் மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றமுடியும் எனவும் அவர் கூறியிருந்தார். ஆனால், கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை மறுசீரமைப்புக் கூட்டத்தில் இந்த அமைச்சுப் பதவியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுள்ளார்.

மஹிந்தவின் அரசாங்கத்தில் கடுமையாக பழிவாங்கப்பட்டவர் சரத் பொன்சேகா. அவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். எனவே, சரத் பொன்சேகாவிடம் குறித்த அமைச்சு கையளிக்கப்பட்டிருந்தால், மஹிந்த தரப்பினருக்கு சிக்கலாகவே இருந்திருக்கும். ஆனால் அந்த அமைச்சை இப்போது பிரதமர் ரணில் எடுத்துக்கொண்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஸவை இவ்வளவு காலமும் காப்பாற்றி வந்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற விமர்சனங்களும் உள்ளன. அரசியலில் ஒருவருக்கொருவர் முரண்படுகின்றவர்களாகக் காட்டிக்கொண்டாலும் ரணிலுக்கும் மஹிந்தவிற்குமிடையில் சில விடயங்களில் தனிப்பட்ட தொடர்புகள்-உறவுகள் இருப்பதாக விமர்சிக்கப்படுகின்றது. சில தினங்களுக்கு முன்னர், “பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவை பாதுகாக்கின்றார் என்ற குற்றச்சாட்டொன்று சமூகத்தில் உள்ளது. ஜனாதிபதியும் இதற்கு சார்பாக கருத்துத் தெரிவித்துள்ளார்” என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித “ஜனாதிபதி இதனைக் கூறுகின்றார் எனின், அவருக்கும் ஏதாவது தெரிந்திருக்கும். ராஜபக்ஸக்களுக்கும் அவருடன் உள்ளவர்களுக்கும் எதிராகவுள்ள கொலை மற்றும் பாரிய ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நாம் எதிர்பார்த்த விதத்தில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. இருப்பினும், எதிர்வரும் காலத்தில் இது சரியாக முன்னெடுக்கப்படும்” எனத் தெரிவித்திருந்தார்.

இப்போது சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் கடைப்பிடித்த கொள்கையிலிருந்து மாறி, மஹிந்த தரப்பினர் மீதான குற்றச்சாட்டுக்களை உரியமுறையிலும், துரிதமாகவும் விசாரிப்பதற்கான வினைத்திறன் மிக்க பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டும். இது அவரால் தவிர்க்கவியலாத பணியாக மாறிவிட்டுள்ளது.

நீண்ட காலமாக எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே ஆளும் கட்சியாக வர முடிந்தது. அதுவும் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்ததன் மூலம். எனவே, அடுத்த தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் இருப்பை தீர்மானிக்கப்போவது வரப்போகும் இரண்டு ஆண்டுகளில் பிரதமர் ரணில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளே ஆகும். அதனால் தன் முன்னே உள்ள பாரிய பொறுப்புக்களை அவர் இனிமேல் தட்டிக்கழிக்க முடியாது.

## மண்டியிட் டிரந்திடும் இழிசெயல் தகர்த்திடும் மகளிரின் ஆண்மையை வாழ்த்துவமே



பங்கய மென்கரம் பற்றி வளர்த்திடும்
பாலர்நாம் ஒன்றாகக்கூடி நின்றோம்
சங்கு முழங்கிடப் பொங்கும் அவர்புகழ்
பாடியே வாழ்த்துக்கள் கூறுகின்றோம்

பாசத்தோ டெங்களைப் பாரினில ஈன்றெடுத்
தாசையோ டன்பினைச் சொரிந்து வளர்த்தவர்
மாசறக் கல்வி யறிவினை யூட்டிடும்
மங்கையர் சேவையை வாழ்த்துவமே

ஆடியே பாடியே அபிநயம் காட்டியே
அறிவுடை கதைகள் உரைப்பார்கள்
வாடிய மலரென வதங்கிடு வோர்துயர்
களைந்திடும் கன்னியர் தாள்பணிவோம்

வேதங்கள் போதிக்கும் நல்நெறி கூறியே
ஆதங்கம் அகற்றிடும் அன்னையர்கள்
சாதி மதபேதம் களைந்து சமதர்மம்
காப்பவர் பணியினை வாழ்த்துவமே

இல்லத்திற் கொளியேற்றும் வல்லமை தாங்கியே
இதயங்கள் ஈர்த்திடும் அன்னையர்கள்
கல்மனம் நெகிழ்ந்திடக் கனிவுடன் தலைவனைக்
கவர்ந்திடும் பண்பினை வாழ்த்துவமே

நோயுற்று வாடியே கதியற்றுக் கலங்கிடும்
நொந்தவர்க் குறுதுணை யாகிடுவார்
தாயாகிக் கருணையோ டவர்பிணி களைந்திடும்
அருட்பணி போற்றியே வாழ்த்துவமே

எரிகின்று குண்டுகள் சுமந்துடல் கருக்கியே
இனமானம் காத்தவெம் நங்கையர்கள்
உரிமைக்கும் போராடி உயிரீந்த தியாகத்தைப்
போற்றியே யவர்நாமம் வாழ்த்துவமே

குண்டுகள் சன்னங்கள் அநாதைக ளாக்கிய
குஞ்சுகள் துயரினைத் துடைப்பவர்கள்
மண்டியிட் டிரந்திடும் இழிசெய லிகழ்ந்திடும்
மகளிரின் ஆண்மையை வாழ்த்துவமே!

- மாரீசன் -

# இந்தியப்...

10 ஆம் பக்கத்தொடர்ச்சி

கனேடியப் பருப்பு வகைகளின் உற்பத்தியாளர் நிறுவனம் ஒன்றின் தலைவர் Chris Chivilo ஊடகவியலாளர்களுக்கு விடுத்த அறிக்கையில் பருப்பு வகைகள் ஏற்றுமதி தொடர்பாக கனேடியப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் உணவுப் பாதுகாப்பு மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான அணுகுமுறைகளை உபயோகித்து ஒத்துழைப்பை மேற்கொள்வது என உறுதி எடுத்துள்ளனர் என்றார். இது கனேடிய பருப்பு வகைகளை ஏற்றுமதி செய்வோருக்கு ஒரு நற்செய்தி



என்றார்.

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்ட கனேடியப்பிரதமரை இந்தியமத்திய அரசு புறக்கணிப்பதாக சில ஊடகவியலளார்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். ஆனால் இந்தியப் பிரதமர் முன்னாள் கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் காப்பருக்கோ அல்லது இன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவிற்கோ விமான நிலையம் சென்று வரவேற்கவில்லை. இந்திய அரசு முறைப்படி ஒரு அமைச்சரே வெளிநாட்டு பிரதமர்களை விமானநிலையம் சென்று வரவேற்பது மரபு. இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இதற்கு விதிவிலக்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் ஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நட்டன்யாகு



போன்றோருக்கு விமானநிலையம் சென்று வரவேற்றுள்ளார். இவர்கள் இருவரும் அரசியலுக்கு அப்பால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பர்கள். இந்தியப் பிரதமர் கனேடியப் பிரதமரை 2018 பெப்ரவரி 23இல் சந்தித்தபோது அவருக்கு பாரம்பரிய முறைப்படி முப்படை அணிவகுப்புடன் மரியாதையும், வரவேற்பும் அளிக்கப்பட்டது.



இந்தியக்கலாசாரத்தில் விருந்தினர்கள் கடவுளுக்குச் சமன் (A guest is like a god) எனக் கூறும் CBC ஊடகம் கனேடியப் பிரதமருக்கு வீதியெங்கும் பதாதைகள் வைத்து வரவேற்பு நடைபெற்றது என்கிறது. மேலும் தெரிவிக்கையில் கனேடியப் பிரதமர் தனது பயணத்தின் போது மூன்று வயது மகனைக் கூட்டிக்கொண்டு இந்தியாவுக்குச் சென்றது நல்லெண்ண விடயத்தில் ஒரு இராணுவம் அளவு இராஜதந்திரிகளைத் தன்னுடன் அழைத்துச் சென்றதற்கும் மேலானது என்கிறது.

# உடல் எடை கூடுவதற்கான காரணங்கள்

நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

நவீன வாழ்க்கையில் எவ்வளவோ வசதிகள் நமக்கு வந்துவிட்டன. வசதிகள் பெருகப் பெருக உடல் உழைப்பு குறைகிறது. ஆனால் பசி மட்டும் குறைவதில்லை. உணவுக்கேற்ற உழைப்பு போதுமானதாக இல்லை. இது ஒருபுறம் இருக்க, நாகரிகமும், பொருளதார வசதிகளும் கூடும்போது ருசியான அதிக சத்துள்ள உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. அதிக இனிப்புப் பண்டங்கள், மற்றும் சுவை மிகுந்த குளிர் பானங்கள் போன்றவற்றை அதிகம் உண்பதாலும் உடலின் தசைகள் கூடிவிடுகிறது. சில குடும்பங்களின் பழக்க வழக்கம் காரணமாக குடும்பத்திலுள்ள அனைவரும் அதிகமாக உண்ணுவார்கள்.


## உடற்பயிற்சியும் உடல் எடையும்

உடற்பயிற்சி செய்வதால் அதிகமாக கலோரிகள் எரிக்கப்படுகின்றன. அதனை ஈடு செய்ய அதிகம் உண்பர். தொடர்ந்து பயிற்சி செய்து வந்தால் கலோரிகள் எரிக்கப்பட்டு சமன் செய்து விடும். வேறு சூழ்நிலை காரணமாக இதனை தொடர்ந்து செய்யாது விடும் காலத்திலும் முன்பு சாப்பிட்ட பழக்கத்திற்கு ஏற்றவாறு உணவின் அளவை குறைக்க முடியாது முன்பு போல் உண்பர். இதன் காரணமாகவும் உடல் எடை அதிகரிக்கும்.

பகல் உணவு உண்டதும் படுத்து உறங்குவதும் எடையை அதிகரிக்கச் செய்யும். மற்றும் உணவுடன் சேர்த்து இடையிடையே தண்ணீர் குடிப்பதும் வயிற்றின் தசைகளை இளகச் செய்து தொடையை பருமலாக்கச் செய்யும். பகலில் தூங்குவது ஒரு தீய பழக்கம். இதனால் நேரம் வீணாவதோடு பித்தம், அஜீரணம், சோம்பேறித்தனம் போன்ற வற்றையும் உண்டாக்கும். அத்துடன் வாழ் நாளும் குறைந்து செல்லும். பகல் தூக்கம் என்பது 'மரணத்தின் ஒத்திகை' என்று ஒரு மருத்துவப் பழமொழியும் உண்டு. காரணம் படுக்கும்போது தலைப்பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் வரும், வயிற்றுப் பகுதிக்கு இரத்த ஓட்டம் குறைவதால் செரிமானம் பாதிக்கப்படுகிறது. அதனால் அதிகமான சுரப்பு நீர் சுரக்க வேண்டியுள்ளது. அவை உணவைப் புளிக்கவைத்து இரத்தத்துடன் கலக்கின்றன. இதனால் உடலில் வாதநீர் அதிகமாகி உடல் எடை கூடுகின்றது.

## அதிகமான கோப்பி தேனீரும் உடல் எடையும்

சிலர் தினமும் கோப்பி தேனீர் போன்றவற்றை அடிக்கடி குடிக்கும் பழக்கம் உடையவராக இருக்கின்றனர். அவர்களுக்கு பசி உணர்வு குறையும். அவர்களுக்கு கோப்பி தேயிலை போன்றவற்றிலுள்ள விஷச் சத்துகள் இரத்தத்தில் உடல் எடையைக் கூட்டுவதோடு மயக்கத்தையும் ஏற்படுத்தும்.



## மலச்சிக்கலும் உடல் எடையும்

உடல் எடை அதிகரிக்கச் செய்வதில் பெரும்பங்கு வகிப்பது தொடர்ந்து வரும் மலச்சிக்கல் தான் என்பதை பலரும் உணர்வதில்லை. மலச்சிக்கலின் போது மலத்திலுள்ள நீரானது காய்ந்து இறுகி அதை வெளியேறாது தடுப்பதுடன் அந்தத் துன் நீரானது உடலினால் உறிஞ்சப்பட்டு ஊளைச்சதையாக வளர்ந்து வயிறு மற்றும் தொடைப் பகுதிகளைப் பருமலடையச் செய்யும்போது உடல் எடை அதிகரித்துச் செல்லும். அத்துடன் மலச்சிக்கலின் போது உருவாகும் அபானவாயுவானது கீழ்நோக்கிச் செல்லமுடியாது மேல்எழுந்து சென்று தலைப்பகுதியை அடைந்து அங்கு ஆவியாகி பின் அங்கு நீர்கோர்த்து தீராத தலைவலி, தலைச்சுற்றல், அம்மல் போன்றவை ஏற்படக் காரணமாகின்றது. அதுமட்டுமன்றி மலச்சிக்கலின் காரணமாக பசி உணர்வு குறைந்து அஜீரணக்கோளாறுகள் ஏற்படும்போது வயிறு பொருமல் உருவாகி உடல் எடை அதிகரிக்கிறது.

## மனஅழுத்தமும் உடல் எடையும்

கவலை, கோபம், தனிமை, பொறாமை, தாழ்வு மனப்பான்மை மற்றும் உடலிலுள்ள ஹோர்மோன்களின் குறைபாடு என்பன உடல் எடையை அதிகரிக்கச் செய்யலாம். எனவே மன அழுத்தத்திற்குரிய முறையான பயிற்சிகளை எடுத்து அதனை சீர் செய்யும் போது உடல் எடையானது கட்டுக்குள் வரும்.

## மதுப் பழக்கமும் உடல் எடையும்

மது வகைகளைக் குடிப்பதால் உடல் எடை கூடுவதில்லை. ஆனால் மது உண்டதும் அவர்கள் உண்ணும் உணவின் அளவு அதிகமாகும். அதிக கொழுப்பு, காரம் உள்ள உணவு வகைகள் எடையை அதிகப்படுத்தும். குடித்ததும் இரத்தத்தில் மதுசாரம் உடன் கலந்து சிறு மூளையைப் பாதிப்பதால் மூளை நரம்புகள் பலயீனப் படுத்துகின்றன. அதனால் பசி உணர்ச்சியின் அளவு தெரியாமல் அதிகமாக உண்பர். நாளடைவில் உடல் எடை கூடி தொந்தி உருவாகும்.

## தைராய்டு குறைபாடும் உடல் எடையும்

தைராய்டு சுரப்பி குறைவாகச் சுரப்பதால் உடல் எடை அதிகரித்துச் செல்வதை எந்த வகையிலும் தடுக்க முடியாது. இதனை சில குறிப்பிட்ட உணவு முறைகளை மாற்றுவதுடன் அந்த தைராய்டு ஹோர்மோனை செம்மைப்படுத்துக்கூடிய (Activate) பயிற்சிகளையும் மேற்கொள்வதுதான் சிறந்த வழிமுறையாகும்.


# TUTORING

Math / Science / English

Over 8 years of Experience (M.Sc., Mathematics)

Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.

FREE ONE HOUR MATH CLASS

*Call today to find out more!*

- Grade 1-8: Math/Science/English
- Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
- Principles of Mathematics.
- Calculus.
- Vectors.
- Functions.
- Advanced Functions.
- University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY

Param Jyothi Academy

7393 Markham Road . Door #90

647.426.6329

Param Jyothi Academy


## சர்வதேச...

06 ஆம் பக்கத்தொடர்ச்சி

வாகாமல் எதுவும் நடைபெறவாய்ப்பில்லை. எதிரான சக்திகள் பிளவுபட்டு நிற்கும்போது



பாதிக்கப்பட்ட தரப்பினர் ஒன்றுபட்டு நிற்பதானது அத்தரப்பிற்கு பலத்தைச் சேர்க்கும். இது ஒரு தந்திரோபாய நடவடிக்கையும் ஆகும். ஆனால், எம்மவரும் பிளவுபட்டே நிற்கின்றனர் என்பதுதான் துரதிஷ்டவசமானது.

அடுத்து வரும் மாகாண சபைகளுக்கான தேர்தலிலும் மஹிந்த அணியினர் சிங்கள மக்களின் அமோக ஆதரவைப் பெறுவார்களானால் 'நல்லாட்சி' அரசாங்கம் முழுவதுமாக நிலைகுலைந்து போய்விடும். ஐ.நா உள்ளிட்ட, சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் யாவும் காற்றில் பறந்துவிடும். புதிய அரசியல் யாப்பு, அதன் மூலமான அரசியல் தீர்வு என்பதெல்லாம் கனவாகிப்போன கதையாகி விடும்.

எனவே, எதிர்காலத்தில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் சர்வதேசத்தின் அழுத்தங்களை பயன்படுத்தியே பிரச்சினைகளை தீர்க்க முயல வேண்டும். அது தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு குரல் கொடுத்தால் மட்டுமே சாத்தியமாகும்.


# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)


- கனி -
416.261.1348
ptons@hotmail.ca




கடைசியாக 1.2 செக்கன் வயதுக்கு வந்த பேரண்டத்துள் நியூத்திரன்களைவிட அதிக அளவிலான புரோத்தோன்கள் வந்து விட்டன எனப் பார்த்தோம். அதனால் பேரண்டத்துள் என்னவென்னவெல்லாம் நடக்கத் தொடங்கின என இனிப்பார்ப்போம்.

7. துணிக்கைக் காலம் (தொடர்ச்சி)

இப்படியாக ஏற்பட்ட புரோத்தோன்களின் எண்ணிக்கை அதிகரிப்புத்தான் இன்று பேரண்டம் வந்திருக்கும் நிலைக்கு முக்கிய காரணமாகும். ஏனெனில் பேரண்டத்தின் உள்ளே இருக்கின்ற பொருட்கள் எல்லாம் அணுக்களால் ஆனவை என்பது எங்களுக் குத் தெரியும். இவ்வணுக்கள் புரோத்தோன் கள் நியூத்திரன்கள் இலத்திரன்கள் என்ப வற்றால் ஆனவை என்பதும் தெரியும். அணுக்களில் புரோத்தோன்களினதும் நியூத்திரன்களினதும் எண்ணிக்கை அதிகரி க்க அதிகரிக்கப் பாரமான அணுக்கள் கிடைக்கின்றன. தனியவே பல புரோத்தோன் கள் சேர்ந்து பாரமான அணுக்களைத் தோற்றுவிப்பதில்லை. ஆனால் பிக்பாங்கின் பின்னர் 1.2 செக்கனின் பின் பேரண்டத் துள் நியூத்திரன்களின் எண்ணிக்கை குறை வாக இருந்ததால் பாரமான மூலகங்களின் அணுக்கள் ஆரம்பத்தில் தோன்றுவது சாத்தியமா இருக்கவில்லை. அதனால் ஆரம்பத்தில் பேரண்டத்துள் பாரம் குறைந்த அணுக்கள்தான் தோன்றின. அதிலும் நியூத்திரன் இல்லாத, தனிப் புரோத்தோன் மட்டும் கொண்ட ஐதரசன் அணுக்கள்தான் அதிக அளவில் தோன்றின.

அப்படியாயின் இன்றுள்ள காபன், ஒட்சி சன், நைதரசன் போன்ற பாரமான அணுக் கள் பேரண்டத்துள் எப்படித் தோன்றின எனக் கேட்கின்றீர்களா அழகான பதில் உள்ளது. நாளாவட்டத்தில் இவ்வைதரசன் அணுக்களின் சேர்க்கையினால்தான் பார மான அணுக்கள் தோன்றின. அப்படி யாகத் தோன்றிய பேரண்டத்து அணுக்களி னால்தான் இன்று பேரண்டம் இவ்வாறு காட்சியளிக்கின்றது. எனவே, பேரண்டத் தின் 1.2 செக்கன் வயதிற் தொடங்கிய நியூத்திரன்களின் எண்ணிக்கைக் குறை வானது உண்மையில் ஒரு முக்கிய, நல்வாய்ப்பான மாற்றம்தான்.

அப்படியிருக்க ஏன் நியூத்திரன்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சியடைந்த மாற்றத் தினை முக்கியமானதாகக் கருதவில்லை என்ற கேள்வி எழலாம். அப்பொழுது பேரண்டத்துதின் உள்ளே இருந்த நியூற்றி- னோக்கள், இலத்திரன்கள், போட்டோன் துகள், அவற்றின் முரண் துகள்கள் என்ப வற்றுடன் ஒப்பிடுகையில் அணுத்துகள் களான நியூத்திரன்களினதும் புரோத்தோன் களினதும் எண்ணிக்கை மிகமிகக் குறை வாக இருந்ததினால், இம்முக்கிய விளை வானது அதிக முக்கியத்துவம் பெற முடியாமற் போனது.

ஓரளவுக்கு புரோத்தோன்களும், சிறிய அளவில் நியூத்திரன்களும், பெருமளவு இலத்திரன்களும் பேரண்டத்துள் இப்போது இருந்தாலும் அணுவோ அல்லது அணுக் கருவோ தோன்ற முடியவில்லை. ஏனெனில் அதற்குச் சாத்தியமானநிலை அங்கிருக் கவில்லை. எதிரேற்றம் கொண்ட குட்டித் துகள்களான இலத்திரன்கள் பெருமளவு சக்தியுடன் ஓடித் திரிந்து கொண்டு இருந் ததினால் அவற்றை நேரேற்றம் பெற்ற புரோத்தோன்களினால் தம்முடன் இழுத்து வைத்திருக்க முடியவில்லை. பேரண்டம் மின்காந்தவிசை செயற்படக் கூடிய வெப்பநிலையில் இருந்தாலும், இலத்திரன் களின் உயர்சக்தி அவற்றைச் சுதந்திரமாக ஓடித்திரியக் கூடியதாகச் செய்திருந்தது. அதாவது மின்காந்த விசையினால் இலத் திரன்களை புரோத்தோன்களுடன் கட்டி வைத்திருக்க முடியவில்லை. அதேவிதமா கத்தான் வலிந்தவிசையினாலும் நேரேற்றம் பெற்ற புரோத்தோன்களையோ அல்லது புரோத்தோன்களையும் நியூத்திரன்களையும் சேர்த்தோ ஒன்றாக இணைத்து அணுக் கருக்களை உண்டாக்க முடியவில்லை.

ஆக, பேரண்டத்துள் பாரமான துணிக்கை களான நேரேற்றம் பெற்ற புரோத்தோன் களும் எதிரேற்றம் பெற்ற இலத்திரன்களும் காணப்பட்டன. இப்படியாகத் துகள்கள் ஏற்றங்கள் பெற்ற நிலையில் இருப்பதை 'பிளாஸ்மா நிலை' என்கிறார்கள். பொது வாக சடப்பொருள் ஒன்று திண்மமாக, திரவமாக, வாயுவாக மூன்று நிலைகளில் இருக்கலாம் எனப் படித்திருப்பீர்கள். ஆனால் சடப்பொருள் ஒன்று இருக்கக் கூடியதான இன்னொரு நிலைதான் பிளா ஸ்மா நிலை. ஆக, சடப்பொருள் இருக் கக் கூடிய நிலையாக இப்போது திண்மம், திரவம் வாயு, பிளாஸ்மா என்ற நாலு நிலைகளைக் கூறுகின்றார்கள். சாதாரண திண்மம், திரவம், வாயு என்ற மூன்று நிலைகளையும் காணலாம் அல்லது உணரலாம். ஆனால் நாலாவது நிலை யான பிளாஸ்மா நிலையினைக் காணவோ அல்லது உணரவே முடியாது. ஆனால் பேரண்டத்துள் சடப்பொருட்கள் அதிகமாகப் பிளாஸ்மா நிலையில்தான் அதிகமாக இருக்கின்றன. கதிரவன் போன்ற உயர் வெப்பநிலையில் காணப்படும் விண்மீன்கள் போன்றவற்றில் சடப்பொருட்கள் இந்த பிளாஸ்மா நிலையில்தான் இருக்கின்றன.

திண்மம் ஒன்றுக்கு வெப்பத்தைக் கொடுக் கும்போது, அது வெப்பசக்தியைப் பெற்று சடப்பொருளின் இன்னொரு நிலையான திரவமாக மாறும். பனிக்கட்டி நீராக மாறுவதை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இத்திரவத்துக்கு இன்னமும் வெப்பத்தைக் கொடுக்கும்போது (வெப்ப மாக்கும் போது) அது வாயுவாக (ஆவி யாக) மாறி சடப்பொருளின் இன்னொரு நிலையினை அடையும். நீரைக் கொதிக்க வைத்து நீராவி பெறுவதை காட்டாக எடுக்கலாம். இந்த நீராவிக்கு இன்னமும் போதிய அளவிற்கு வெப்பத்தைக் கொடுத் தால் அதன் அணுக்கள் வெப்பசக்தியைக் பெற்று அயன்களாக மாறிவிடும். இந் நிலையினைத்தான் பிளாஸ்மா நிலை என்கிறார்கள். சாதாரண நடைமுறையில் இதனை நாம் காணமுடியாது.

பேரண்டத்தின் வயது 1.2 செக்கனாக இருக்கும்போது இப்படியான பிளாஸ்மா நிலையினில்தான் இன்று காணப்படுகின்ற அத்தனையும் காணப்பட்டன. பேரண்டத் தின் வயது 14 செக்கன்கள் வரும்வரை யில் இந்நிலையானது காணப்பட்டது. 14 செக்கன்களின் பின்னர், பேரண்டம் விரி- வடைந்து கொண்டே வந்ததினால் இன்ன மும் பருமனிற் பெரிதாகி, அதன் சக்தியடர் த்தி குறைந்து விட்டது. அதனால் பேரண் டத்தின் வெப்பநிலையும் குறைந்து மூவாயி ரம் மில்லியன் பாகை கெல்வினுக்கு வந்து விட்டது. குறைந்துவிட்ட வெப்பநிலையால் பேரண்டம் தனது அடுத்த பரிணாமத்தை அடையத் தொடங்கியது.

மூவாயிரம் மில்லியன் பாகை கெல்வின் வெப்பநிலை என்பது சடங்களைப் பொறுத்த வரையில் முக்கிய வெப்பப்படிநிலையாக இருக்கிறது. முக்கியமாக இலத்திரன்களுக் கும் பொசித்திரன்களுக்கும் இந்த வெப்ப நிலை பொருத்தமானதாக இருக்கவில்லை.



பேரண்டத்தின வெப்பநிலையுடன் வெப்பச் சமநிலையில் இருக்கும் இரண்டு போட் டோன்களின் மோதுகையின் போதுதான் மற்றத் துணிக்கைகள் போன்று இலத்திரன் களும் பொசித்திரன்களும் தோன்றுகின்றன. ஆனால் இப்படியாக இவை இரண்டும் தோன்றுவது எல்லா வெப்பநிலைகளிலும் நடைபெறுவதில்லை. ஒன்றுடன் ஒன்று மோதுகின்ற போட்டோன்கள் இரண்டும் கொண்டுள்ள சக்தி, இலத்திரனும் பொசித் திரனும் கொண்டுள்ள சக்தியின் அளவுக் குப் பொருத்தமாக இருந்தால் மட்டுமே அவை தோன்ற முடியும். அதாவது பொருத்தமான வெப்பநிலையில் உள்ள போட்டோன்கள் மோதுகை அடைகை யிலேயே இலத்திரன் - பொசித்திரன் சோடி தோன்ற முடியும். அல்லாதுவிடின் அவை தோன்றாது.

பேரண்டம் மூவாயிரம் மில்லியன் பாகை வெப்நிலையில் இருக்கையில் போட்டோன் களும் அவ்வெப்பநிலையிலேயே இருக் கும். இவ்வெப்பநிலையில் உள்ள போட் டோன்கள் கொண்டுள்ள சக்தி, இலத்திரன் - பொசித்திரன் சோடியைப் பிறப்பிக்கப் போதாது. அதனால் பேரண்டத்தின் வயது 14 செக்கன்கள் ஆனாதும் இலத்திரன் களும், பொசித்திரன்களும் புதிதாகத் தோன்றுவது நின்றுவிட்டது. ஆனால் ஏற் கனவே பேரண்டத்துள் இருந்த பெருந் தொகையான இலத்திரன்களும் பொசித் திரன்களும் ஒன்றுடன் ஒன்று மோதுகை யடையும் வேளையில் அவை அழிந்து சக்தியாகப் போட்டோன்கள் தோன்றிக் கொண்டே இருந்தன. இதன். விளைவாக, பேரண்டத்தின் வயது 14 செக்கன்களாகிய தும் பேரண்டத்துள் இலத்திரன்களினதும் பொசித்திரன்களினதும் எண்ணிக்கைகள் சடுதியில் குறைவடையத் தொடங்கியது.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இது ஒரு முக்கிய விளைவாகும். இலத் திரன்களினதும் பொசித்திரன்களினதும் எண்ணிக்கை குறைவடைந்து கொண்டு வரும் அதேநேரம் போட்டோன்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு இருந்தது. எனவே, இப்போது பேரண்டத் தின் உள்ளே, ஒப்பீட்டளவில் மற்றத் துணிக்கைகளை விட அதிக அளவில் போட்டோன்கள் காணப்படத் தொடங்கின. அத்துடன் போட்டோன்கள் பேரண்டத்துடன் வெப்பச் சமநிலையிலும் இருப்பதால் இப் போது பேரண்டத்தின் வெப்பநிலை போட் டோன்களின் வெப்பநிலையால் குறிப்பிடப் படக் கூடியதாக அமைந்து விட்டது. பெரு மளவில் நியூற்றினோக்களும் இருந்தன தான். ஆனால் அவை பேரண்டத்தின் வெப்பநிலையுடன் வெப்பச் சமநிலையில் இல்லாததனால், வெப்பநிலை என வருகை யில் போட்டோன்களின் வெப்பநிலையே பேரண்ட வெப்பநிலையுடன் ஒத்துக் கூறக் கூடியதாக இருந்தது.

இந்த முக்கிய விளைவினால் பேரண்டத் துள் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்த முறை சந்திக்கையில் கவனிப்போம்.


**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா**
**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2018**

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11:00 முதல் 2:00 மணிவரை 3600 Kingston Rd, Scarboroughஇல் அமைந்துள்ள Scarborough Village Recreation Centre மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெறவுள்ளது. மேலும் அண்மையில் தாயகத்திலிருந்து வருகைதந்திருக்கும் சரவணையைச் சேர்ந்த கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான திரு. கெங்காதரம்பிள்ளை தனபாலன் (அப்பு மாஸ்ரர்) அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதுடன் மதிய உணவும் வழங்கப்படவுள்ளது. சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்

செழியன் - 416-949-7795 சிவா - 416-562-4141 மேகவர்ணன் - 647-229-4955

Since 2003

# விலா கருணா முதியோர் இல்லம்

## TET - HD-யுடன்

இணைந்து வழங்கும்

# சந்தியாராகம் 2018

விளம்பர அனுசரணை
COMPUTEK COLLEGE
416-321-9911

மீண்டும் இதோ. மறைந்து கிடக்கும் உங்கள் பாடல் திறமையை வெளியுலகத்திற்கு வெளிப்படுத்த வழங்கப்படும் ஓர் உன்னத மேடை. தாமதிக்காதீர்கள், தயங்காதீர்கள் கீழ் காணப்படும் விண்ணப்ப படிவத்தை உடனடியாக பூர்த்தி செய்து மார்ச் 25ம் தேதிக்குள் அனுப்பவும். ஏப்ரல் 7ம் தேதி நேரடி தேர்வு காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை நடைபெறும். விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

Mailing Address: 602 Brimley Rd, Scarborough, ON M1J 1B5
Tel: 416-200-6971, Email: villakaruna602@gmail.com

55 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் கலந்து கொள்ள வாருங்கள்.

**PLEASE FILL WITH BLOCK LETTER - THANK YOU**

FULL NAME:........................................................

ADDRESS:........................................................

........................................................

AGE/DOB:........................................................

TEL DAY TIME / CELL:........................................................

EMAIL ADDRESS :........................................................

ADMIN FEE : $**30**

PRIOR PARTICIPATION IN ANY SINGING COMPETITION:

........................................................

........................................................

........................................................

SIGNTURE OF THE PARTICIPANT:........................................................

Date:..................................

**OFFICE USE ONLY :** ____________________

**AUDITION RESULT:** ____________________ **SCORE:** ____________

**FINAL RESULT :** ____________________ **SCORE:** ____________

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

# உளநோயின் அறிகுறிகள்

வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
*Tel.: 647.456.9796*



உளநோய் எம்மை பலவழியிலும் துன்புறுத்தும் என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே இவற்றை ஒருமுறை நினைவு கூருவது நன்மை பயக்கும் எனக் கருதுகின்றேன்.

'வருமுன்னர் காப்பதுதான் வாழ்க்கை எரிமுன்னர் கைத்தூறு போலக்கெடுகம்' என்பர். எனவே உளநோய் ஏற்பட்டிருப்பவரின் அறிகுறிகளைப் பார்ப்போம்.

**உளப்பிளவு நோய்** (schizophrenia) - மாயப்புலனுணர்வுகளாக சத்தங்கள் கேட்டல், உருவங்கள் தெரிதல், மணம்தெரிதல் போன்றவையிருக்கும். தவறான, மாற்றமுடியாத நம்பிக்கைகள் காணப்படும். பிற சக்தியால் கட்டுப்படுத்தப்படுவதாக எண்ணுவர். சுய எண்ணம் அகற்றப்பட்டு வேற்று எண்ணங்கள் புகுதல் நிலை காணப்படும். தமக்கே உரிய உலகத்தில் சஞ்சரிப்பர். சிலர் ஒதுங்கி வாழ்வர். சிலர் அட்டகாசமாகத் திரிவர். உணவு உண்பதில் நாட்டமின்றிக் காணப்படுவர். உடையில் கவனிப்பின்மை, நித்திரைக் குறைவும் தென்படும்.

**மனச்சோர்வு** Depressive Illness - இந்நிலை ஏற்பட்டோர் தாழ்வு மனப்பான்மை, விரக்தி, தன்னைப்பற்றிய கரிசனை குறைவு போன்ற உளவியல் மாற்றங்கள் காணப்படும். நித்திரையில் குழப்பநிலையும் தென்படும்.
மனச்சோர்வு Depressive / **மிகை எழுச்சி நிலை** Mania - மிக உற்சாகமானநிலை. அளவுக்கு மிஞ்சி அதிகமாகக் கதைப்பர். ஒரே நேரத்தில் பல வேலைகளைத் தொடங்கி ஒரு வேலையைக்கூட சரியாகச் செய்யமாட்டார்கள். கடும் நிறங்களைக் கொண்ட ஆடைகளை அணிந்து கொள்வர். இவர்களின் செய்கை முறை காலத்திற்கு காலம் வேறுபட்டுக் காணப்படும்.

பதகளிப்பு (Anxiety Neurosis) - உளவியல் ரீதியாகப் பயம், கவலை, பதற்றம், ஆறுதல் இன்மை, ஏக்கம், யோசனை, கிரகித்தல் குறைவு என்பன காணப்படும். உடற்றொழில் ரீதியில் வாயுலர்தல். உணவு உட்கொள்ளல் கடினம், இருதயம் படபடத்தல், அடிக்கடி சலம்கழித்தல், ஆழமற்ற விரைவான சுவாசம் போன்றவை காணப்படும். தலையிடி காணப்படும். நித்திரை கொள்வது கடினமாகும்.

மெய்ப்பாட்டு நோய் - Somatization - உளவியல் காரணத்தினால் உடலில் நோய் அறிகுறிகள் தோன்றல் மெய்பாட்டுநோய் ஆகும். இதன்போது உடல் அமைப்பை நோய்நிலையாக கூறுவர். கிரகித்தல் கடினமாக இருக்கும். உடல் நோ, படபடப்பு, தலையிடி, பலவீனம் என்பன காணப்படும்.



உளத்தாக்கத்திற்கு பின்னரான மனவடு நோய் (Post Traumatic Stress Disorder) - ஒருவர் சாதாரணமாக எதிர்கொள்ள முடியாத நெருக்கப்பாட்டுக்கு உட்படுவதால் ஏற்படும் நோய், அந்நெருக்கீட்டிற்கான காரணிகள் மீளமீள நினைவிற்கு வரும். அத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்த இடங்களை அல்லது சந்தர்ப்பங்களை விலத்துவர். பதகளிப்பு, சோர்வு காணப்படும். கிரகித்தல் குறைவு அத்துடன் விறைப்புத்தன்மை தென்படும்.

**உடனடியான நினைவுப் பிறழ்ச்சி** Acute Confusional- நேரம் இடம் என்பனவற்றைச் சரியாகக் கூறமாட்டார்கள். தெரிந்தவர்களையும் மறந்து விடுவர். இந்நோய் நிலையில் ஏற்படும் ஆபத்தான நிலையாகும்.

**நிரந்தர நினைவுப் பிறழ்ச்சி** (Chronic Confusional ) - வயதாகும்போது மூளையின் பகுதிகள் செயலிழப்பதால் ஏற்படும் (அறளை பெயரல்) அண்மையில் நிகழ்ந்த சம்பவங்களை முதலில் மறப்பர். உண்ட உணவைக் கூட மறப்பர்.

எனவே இவற்றில் கூறியவற்றை நன்கு அவதானித்து தகுந்த உள நோய்களுக்கு உரிய வைத்திய ஆய்வாளர்களைக் கொண்டு சிகிச்சை முறைகளைப் பெற்றுக்கொண்டால் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள ஓரளவு முடியும் எனக் கருதுகின்றேன்.

**MOHAN**
**HOMEOPATHIC CLINIC**
**& MASSAGE CLINIC**



- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

*Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis*

*Also other Acute & Chronic Problems*

**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

## காப்புறுதி...

11 ஆம் பக்கத்தொடர்ச்சி

திற்கு நேரடியாக தங்கள் காப்புறுதி கம்பனியிலிருந்தே நட்டஈடு பெறும் பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. (Un Insured Coverage)

அதற்கும் சேர்த்தே நாம் ஒவ்வொருவரும் மாத கட்டுப்பணம் செலுத்துகின்றோம். ஆனால் இங்கும் சிலநிபந்தனைகள் உண்டு.

- விபத்தில் தங்கள் பக்கம் தப்பு என்பது (Not at Fault) இருக்கக் கூடாது.
- காப்புறுதியில்லாது தங்கள் வாகனத்துடன் விபத்துக்குள்ளான மற்ற வாகனத்தின் அடையாளம், நட்டஈடு கோரலின் போது தங்கள் காப்புறுதி கம்பனிக்கு வழங்க வேண்டும்.

(இதன் காரணமாகவே விபத்தில் மற்றவர் தப்பி ஓட முன்பு வாகன தகட்டின் இலக்கத்தினை குறித்து கொள்ளுங்கள் என அறிவுரை வழங்குவது வழமையாகும்.)

மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளுக்கும் உட்பட்ட நிலையாக இருந்தால், எதுவிதமான விலை பாதிப்புக்கு ஒரு குறித்த தொகை வரை நட்டஈடு வழங்கிய பின்பு காப்புறுதியில்லாது, வாகனம் செலுத்தி விபத்தினை உருவாக்கிய மற்ற நபர் மீது தங்கள் கம்பனி சட்டரீதியாக அறவிட முயலும்.

'OPCF - 44 R FAMILY PROTECTION COVERAGE - $1000,000'
**என்ற ஆங்கில சொற்பதம் ஒன்றினை குறிப்பிட்டு ஒரு மேலதிக நட்டஈட்டுப் பிரிவு** (Endorsement) **சற்று அதிக பணத்தோடு வாகன காப்புறுதி பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.**

### அது என்ன? நிச்சயம் தேவையானதா?

விபத்து ஒன்றில் ஏற்படும் உடல் காயம் என்பது, மிக மோசமாக வாழ்வின் அன்றாட செயல்பாட்டினை நிரந்தரமாக முடக்கும் துர்பாக்கிய நிலைமை ஒன்று ஏற்படுமாக இருந்தால் அந்த சந்தர்ப்பங்களில், இந்த பிரிவு கை கொடுக்கும்.

இது விரும்பினால் மேலதிக பணம் செலுத்தி வாகன காப்புறுதியில் சேர்த்து வைத்திருக்கலாமே தவிர கண்டிப்பாக உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அல்ல. அனேகமாக மேலதிகமாக சேர்க்கும் பணமும் சொற்பமாகவேயிருக்கும்.

இந்தப் பிரிவு எப்படி கை கொடுக்கும் என்பதனை இலகுவாக புரிந்து கொள்ளலாம். உதாரணமாக விபத்து என்பது பல கோணங்களிலிருந்து உருவாகலாம். உடல் காயங்கள் என்பதும் பலமான நிலைமைகளில் உருவாகலாம். இங்கு உருவாகும் ஒவ்வொரு நிலைமைகளுக்கு ஏற்றமாதிரி, ஒவ்வொரு

(தொடர்ச்சி 37 ஆம் பக்கம்...)

## கனடாவின்...

07 ஆம் பக்கத்தொடர்ச்சி

சிலைகளும் தான் சம்பவங்களைச் சொல்லும் ஆவணங்களாக இருந்தன. மானிட வாழ்க்கையில் ஆண் பெண் உறவு முக்கியமானது என்பதை மறைமுகமாக எடுத்துச் சொல்லவே இப்படியான ஓவியங்களும், சிலைகளும் வழிபாட்டுத் தலங்களில் இடம் பெற்றிருந்தன. இத்தகைய முறை முதற்குடி மக்களிடமும் இருந்திருக் கின்றது. வன்கூவரில் உள்ள முதற்குடி மக்களின் காட்சியகத்தில் இதுபோன்ற ஓவியங்களையும், மரத்தால் செய்யப்பட்ட உருவங்களை



யும் காணமுடிந்தது. மொழி எல்லாம் மௌனமானாலும்,பல நூற்றாண்டுகளுக்கு முன் வடிவமைக்கப்பட்டசிலைகள் இன்றும் பல கதைகள் சொல்லி நிற்கின்றன.

# இன்னல் நீக்கும் இயற்கை - 20



- அகணி -
authorakani@gmail.com

பாட்டி வைத்தியம், தமிழ் வைத்தியம், நாட்டு வைத்தியம் என்றெல்லாம் அழைக் கப்படு வனவற்றிற்கு மூலகாரணமாக அமைந்தது பதினெண் சித்தர்களின் மருத்துவச் சிந்தனைகள் ஆகும். ஈழத்தில் யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த சித்தர்களாலும் இயற்கை மருந்துகள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளதாகவும், இவை பின்னர் தமிழ கத்தில் பயன்படுத்தப்பட்டதாகவும், யாழ்ப் பாண சித்தர்களால் எழுதப்பட்ட தமிழ் நூல்கள் சிங்கள மொழியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டதாகவும் அறிய முடி கின்றது. ஈழத்துச் சித்தர்களினதும், சுதேச மருத்துவ முன்னெடுப்புக்களும் முக்கிய மானவை என்பதையும் இங்கு பதிவு செய்கின்றேன்.

இப்பொழுது நாங்கள் நாளாந்த உணவில் பயன்படுத்தப்படும் மிளகில் உள்ள மருத்து வத் தன்மையைப் பற்றி ஆராய்ந்து கொள் வோம். "தேரையர் காப்பியம்" என்ற நூலில் இருந்து மிளகு கற்பம் பற்றி வாசித்து அறிந்து கொண்ட இயற்கை மருத் துவத் தகவலை முதலில் கவனிப்போம்.

"தேரையர் காப்பியம்" என்ற நூலில் மிளகு பற்றிய பாடலைக் கவனிப்போம்.

"மரிசமொவ் வொன்றொரு வார மட்டதிக
வரிசையாய்த் தினமுமோர் மண்டலங் காலமே
யுண்டிடு தேசுட னுரமிகு பசியுங்
கொண்டிடு மதன்பொடி குழைத்து நெய்யுடனே
யுண்டிடத் தொனிதரு மோதுமிப் பொரு ளொடக்
காரமுங் குழைத்துணக் கடும்பசி யழலுறும்
பாரிய நோய்களும் பறக்கும தொன்றையுங்
குடிநீ ரட்டுணக் குலவுமுத் தோடமுங்
கொடும்பிணி யாவும் குடிகெட் டோடுமே"

சித்த மருத்துவத்தில் ஒரு மண்டலம் என்பது 48 நாட்களைக் குறிக்கும். கற்ப முறையில் உண்ணுதல் என்பது ஒரு வாரம் அளவைக் கூட்டியும் மறுவாரத்தில் குறைத் தும் உண்ணுதலைக் குறிக்கும். மிளகை முதல் வாரத்தில் 1,2,3,4,5,6,7 என்ற அள வில் கூட்டியும் மறுவாரத்தில் உயர்த்திய எண்ணில் இருந்து குறைத்தும் கற்ப முறை யில் 48 நாட்களுக்கு குறைத்தும் உண்டு வருதல் வேண்டும். இவ்வாறு செய்துவர உடல் வலிமையும், ஒளியும் பெறும் என்று கூறப்பட்டுள்ளது. பசி நன்றாக ஏற்படும். மிளகைப் பொடியாக்கி நெய்யுடன் கலந்து உண்டு வந்தால் தொண்டையில் உள்ள கரகரப்பு நீங்கி குரல் இனிமை பெறும். ஒரு சிட்டிகை மிளகுத் தூளைப் போதுமானளவு சர்க்கரையுடன் சேர்த்து உண்டு வந்தால் கடும் பசி ஏற்படும் என்றும் இந்தச் செய்யு ளில் கூறப்பட்டுள்ளது. பித்தம் (அழல்) சார் பான நோய்களும் நீங்கும். மிளகைக் குடி நீராக்கி உண்டு வந்தால் பித்தம் (அழல்), வாயு (வளி), கபம் (ஐய) நோய்களையும், மேலும் பல கொடும் பிணிகளையும் நீக்கும் என்று கூறப்படுகின்றது.



மிளகு என்பது பைப்பரேசியே என்ற தாவரக்குடும்பத்தைச் சார்ந்த கொடிவகைத் தாவரம். மிளகின் தாவரவியல் பெயர் "பிப்பர் நிக்ரும் (Piper Nigrum) ஆகும். "பத்து மிளகைப் பகைவன் வீட்டிலும் உண்ண லாம்" என்ற ஒரு பழமொழியும் உண்டு. மிளகு நறுமணப்பொருட்களின் மன்னன் என்றும் கூறுகின்றார்கள். உணவில் காணப் படும் நச்சுத்தன்மையைப் போக்கி உயிர் காக்கும் உன்னதமான மூலிகை மிளகு. மிளகு நறுமணத்தையும், சுவையையும் அளிப்பதோடு மருத்துவப்பயன்பாட்டையும் கொடுக்கின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே மிளகு இறைச்சியைப் பழு-தாகாமல் வைத்திருக்கப் பயன்படுத்தப்பட்டி ருக்கின்றது. மிளகின் காய், பழம், தாவரத் தின் தண்டு ஆகியவை அனைத்துமே பயன்படக்கூடியவை. மிளகுத் தாவரத்தின் தண்டானது செவ்வியம் என்ற மருத்துவப் பெயராலும் அழைக்கப்படுகிறது. மிளகை சிறிது வறுத்துப் பொடி செய்து உணவுக-ளில் சிறிது சேர்த்துச் சாப்பிடலாம். மிளகுத் தூளை இவ்வாறு உணவில் சேர்த்துச் சாப்பிட்டு வர இரத்தக்குழாய்களில் படியும் கொழுப்புக் கரையும். செரிமானம் (சமிபாடு) அதிகரிக்கும். நோயெதிர்ப்புச் சக்தி அதி-கரிக்கும். மிளகுத் தூளை தேனுடன் சேர்த் துச் சாப்பிட்டால் மனவெழுச்சி அதிகரிக் கும். சோம்பல் தன்மை நீங்கும். காய்ச்சல் இருந்தால் கட்டுப்படுத்தும். ஏழு மிளகினை எடுத்து 200 மில்லிலீற்றர் நீரில் போட்டு 50 மில்லிலீற்றர் வரும்வரை காய்ச்சிக் குடித் தால் சளியும், உடலில் உள்ள காய்ச்சலும் கட்டுப்படுத்தப்படும். பூச்சிக்கடி, பூரான்கடி, சிறுபாம்புக்கடி போன்றவற்றால் பாதிக்கப் பட்டவர்கள் காலை ஆறு மணியளவிலும், மாலை ஆறு மணியளவிலும் கற்பூர வெற்றிலையில் 5 மிளகு வைத்துச் சாப்பிட நச்சு முறிவு ஏற்படும்.

தலையில் புழுவரிப்பினால் மயிர் உதிரும் போது மிளகு, சின்ன வெங்காயம், உப்பு சமவளவில் எடுத்துப் பூசிவர முடி மீண்டும் வளரும். மிளகு 100 கிராம், பெருஞ்சீரகம் (சோம்பு) 140 கிராம் ஆகியவற்றைக் கலந்து வறுத்துப் பொடியாக்கி அரை லிற்றர் அளவு தேனுடன் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை நேரங்களில் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வர மூலநோய் நீங்கும். செரிமானச் சிக்கலும் குணமாகும். உணவுகளில் காரச்சுவை தேவைப்படும் பொழுது மிளகுத் தூளைத் தூவிச்சாப்பிட்டு வருதல் இதயத்தின் நலத்தைச் சீராக்கும். மிளகுடன், மஞ்சள் தூளும் சேர்ந்து புற்று நோயைத் தடுக்கவல்லது என்று ஆய்வுத் தகவல் கூறுகின்றது. வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் இரண்டையும் மிளகு தடுக்கின் றது. உடலில் வியர்வையை அதிகரிக்கச் செய்யும், சிறுநீர் சீராகச் செல்ல உதவும். உடலில் கொழுப்பைக் கட்டுப்படுத்துகிறது. எனவே உடற்பருமனைக் குறைக்கவும் மிளகு உதவுகின்றது. உடலில் வாயுக் கோளாறைக் கட்டுப்படுத்துகிறது. மிளகு மூளையின் செயற்பாட்டைச் சீராக்குகின்றது. கருமையான மிளகைத் தூளாக்கி தயிருடன் கலந்து தலைக்குப் பூசி அரைமணி நேரம் சென்றபின்பு கழுவி விட்டு மறுநாள் முழுகி வர தலையில் உள்ள பொடுகு நீங்கும். வர லாற்றுச் சான்றுகளில் இருந்து முன்னைய காலத்தில் மிளகு தங்கம் போன்று விலை கூடியதாக இருந்ததமை பற்றி நீங்கள் அறிந் திருப்பீர்கள். மிளகின் மகிமையை இந்த வரலாற்றுச் சான்றும் எடுத்துக் கூறுகின்ற தல்லவா. மிளகில் கல்சியம், பொசுபரஸ், இரும்பு ஆகிய தாதுப்பொருட்களும், தயா மின், ரிபோபிலவின், ரியாசின் போன்ற விட்டமின்களும் உள்ளன. உடலில் சளி ஏற்பட்டு மூக்கில் இருந்து ஏற்படும் வடி தலை மிளகு கட்டுப்படுத்தும். மிளகு, ஓமம், உப்பு மூன்றையும் கலந்து சாப்பிட தொண்டை நோ குறையும். மிளகும் உப்பும் சேர்த்து பல்லைத் துலக்கி வந்தால் வாயில் துர்நாற்றம், இரத்தம் வடிதல், முரசு வலி ஆகியவை குறையும். மிளகை எரித்து அதன் புகையைச் சுவாசிக்க தலைவலி குறையும். மிளகு இரத்தத்தையும் சுத்தி-கரிக்க வல்லது.

மிளகை அதிகமாக உட்கொள்ளக் கூடாது. அவ்வாறு அதிகமாக உட்கொண்டால் பக்க விளைவுகள் உண்டாகும். வயிற்றில் எரிச் சல் உண்டாகும். கண் சிவப்பாகும். கண் ணெரிச்சல் உண்டாகும். நுரையீரலைப் பாதிக்கும். சுவாசப்பிரச்சினை ஏற்படும். சரும வரட்சி ஏற்படும். கர்ப்ப காலத்தில் பெண்கள் அதிகளவு மிளகு சாப்பிடக் கூடாது. இயற்கை உணவினால் பக்க விளைவுகள் இல்லை என்றும் கூறிவிட முடி யாது. மேற்கத்திய மருந்துகளைப் போல் இல்லாவிட்டாலும் எந்த இயற்கை உண வையும் அளவுக்கதிகமாகச் சாப்பிட்டால் பாதிப்பு உண்டு என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.


**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல் நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப் பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோ சனையை மேற்கொள்ளுங்கள் என்று வலி யுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக் கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களை யும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப் போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

## உங்கள் எதிர்கால சுபீட்சத்துகாக தனிமையில் அமர்ந்து ஐந்து நிமிடங்கள் இதனை மனதில் நிறுத்திப் படியுங்கள் - என் உண்மைக்கதை

2009ஆம் ஆண்டு ஒரு வயோதிப சீனர் என்னிடம் வந்து ஐயா இந்த இணைய நாணயம் இரண்டு சதம் ஒரு ஐம்பது டொலருக்கு 5000 நாணயத்தை வாங்கி வையுங்கள் என்றார். நானும் சரியென வாங்கத்தயாராக என்னுடன் இருந்த நண்பன், "உவர் உம்மை ஏமாற்றிப் பணம் பறிக்கப் பார்க்கிறார்" என்றார். அவரை நம்பி நானும் அந்த நாணயத்தை வாங்கவில்லை.
விளைவு??? இன்று ஒரு நாணயத்தின் விலை இருபதினாயிரம் டொலர். நூறு மில்லியன் டொலரை இழந்துவிட்டேன்.
ஒரு நாணயம் ஒரு மில்லியன் வரை உயர இருக்கிறது. ஆகமொத்தம் 5000 மில்லியன் டொலரை கைநளுவ விட்டுவிட்டேன்.
உங்கள் உறவினர் நண்பர்கள் சிலர் இந்த நாணயத்தை வைத்திருப்பினும் உங்களுடன் பகிர மாட்டார்கள்.

இதேவிதம் எங்களால் 20 ஆயிரம் டொலர் கொடுத்து வாங்க ஒரு நாணயம் கூட வாங்க வசதியில்லை அல்லவா.
மூன்று மாதங்களுக்கு முன்பு இதேமாதிரியான ஏன் அதைவிட சிறந்த நாணயம் ஒன்று வாங்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. 2009ஆம் ஆண்டு விட்ட அதே பிழையை விடவேண்டாமே என்று ஒரு நாணயம் இரு சதத்திற்கு 25000 ஐ வாங்கினேன். இன்று ஒரு நாணயத்தின் விலை ஒரு டொலராகி எனது முதலீடு 50 மடங்காகி விட்டது. 2018ஆம் ஆண்டு முடிவில் ஒரு நாணயம் ஆயிரம் டொலராகும் எனக் கூறப்படுகின்றது.

காரணம் உலகில் உள்ள அனேக வங்கிகளும் 2018ஆம் ஆண்டு அதனை பயன்படுத்தப் போகின்றன என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே கனேடிய, அமெரிக்க, ஜப்பான், அரேபிய வங்கிகள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டன. ஆகக்குறைந்த பட்சம் நூறு டொலருக்கு நூறு நாணயங்களையாவது உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

இதனை சாத்தியப்படுத்த ஓர் அருமையான ஸ்தாபனம் தனது கிளையை ரொறொன்ரோவில் ஸ்தாபித்து வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் மாலை 7:30 மணிக்கு Mccowan and Sheppard இல் அமைந்திருக்கும் மண்டபத்தில் எமக்கு இதனைக் காட்டித் தருகிறார்கள். என்னை தொலைபேசியில் அழைத்து அல்லது நேரடியாக வந்து பார்த்து திருப்தி அடைந்தால் இந்த நாணயம் விலை ஏறியதும் அதன் ஒரு பகுதியை விற்று உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். கனேடிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்களைப் பரிசீலனை செய்யும் உத்தியோகத்தராக 13 வருடம் பணிபுரிந்தவர் இதனை தலைமை தாங்குகிறார்.

இறை அருளால் நான் விட்ட தவறை சரி செய்ய எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததால் மற்றவர்களும் பலன் பெறட்டுமே என்ற ஒரே நோக்கில் உங்களுடன் இதனை பகிர்கிறேன். நான் முதலிட்ட இந்த நாணயத்தால் ஏற்கனவே என் முதலீடு நூறு மடங்காகி விரைவில் என் பணக்குறையெல்லாம் தீரவிருக்கிறது. 2009 இல் ஐம்பது டொலரை சேமித்து முட்டாள் ஆகிய நான் 2017இல் ஐந்நூறு டொலரை வைப்பில் இட்டு இறை அருளால் நன்மை பெறுகிறேன். அதிஸ்டம் இருந்தால் ஒருமுறை வந்து பார்த்து பலன் அடையுங்கள்.

## உங்கள் உடல் நலத்தை பேணிக்காத்து மற்றோருக்கும் அதனை கூறி பலன் அடைய விரும்புகிறீர்களா?

இருபது வருடங்களாக சொறயிசிஸ் என்னும் (PSORISIS) தீராத வியாதியால் அவதியுற்றேன். எனது நண்பன் இந்த மூலிகையைதான் அங்கத்தவனாக இருக்கும் ஸ்தாபனத்தில் 25% கழிவு விலையில் $13.75 இற்கு வாங்கித்தந்தார். நம்பமாட்டீர்கள் மூன்றே மூன்று நாட்களில் அதிசயமாக குணமடைந்து விட்டேன்.
கேரளா இந்தியா சென்று ஒரு மாதம் தங்கியிருந்து குணப்படுத்த $5000 கேட்டார்கள்.
ஒரு இயந்திரத்தை எங்கள் உள்ளங்கையில் வைத்து எமது உடல் உறுப்புக்களில் இருக்கும் குறைபாட்டை துல்லியமாக கண்டு ஒரு அறிக்கையை 10 நிமிடத்தில் அச்சிட்டு தருகிறது.
இதயம், ஈரல், நுரையீரல், சுவாசப்பை, எலும்பு, சிறுநீரகம், மூளை, ஆண் பெண் உடல் உறுப்பு, நரம்பு மண்டலம், மூட்டு, புற்றுநோய், சலரோகம், நாடி நாள கொழுப்பு படிவு ஆகிய உடலுறுப்பின் குறைபாடுகளை கண்டு நிவர்த்தி செய்ய உதவுகிறது. இளையோர் முதல் முதியோர் வரை இலவசமாக சோதித்து பலன் பெறலாம்.

இந்த ஸ்தாபனம் FINCH & VICTORIA PARK AVENUE வில் அமைந்துள்ளது. உலகம் முழுவதும் பல்லாயிரம் மக்கள் பலன் பெறுகிறார்கள். என்னை ஒருமுறை தொடர்பு கொண்டு இந்த இலவச சேவை மூலம் பலன் பெற்றால் அதாவது உங்கள் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கண்டால் உங்கள் நண்பர், உறவினரை அறிமுகம் செய்து பணபலத்தைப் பெருக்குவீர்கள்.

Quality Management Standard, Environment Management Standard, Safety Management Standard
ஆகிய முறையை கடைப்பிடித்து FDA and GMP ஆல் Assessed and Registered ஸ்தாபனமாகும்.

**இந்திரன்: 437.770.6059**
**healthywealthy200@gmail.com**

இது ஒரு கட்டணம் செலுத்திய விளம்பரம்




# இந்திய சினிமாவின் முதல் சூப்பர் ஸ்ரார் நடிகை ஸ்ரீதேவி மரணம்!

இந்திய சினிமாவின் முதல் சூப்பர் ஸ்ரார் என்ற பெருமைக்குரியவர் ஸ்ரீதேவி தனது 54 வயதில் மரணமானார். தமிழ், தெலு ங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி திரையுலகில் கோலோச்சியவர் நடிகை ஸ்ரீதேவி. தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். பின்பு ஹிந்தி திரையுலகம் வரை சென்று தன் காலடியைப் பதித்தவர். தெற்கிலிருந்து போய் வடக்கைக் கலக்கிய மிகப் பெரிய நடிகை. ஹிந்தியில் சினிமாவில் அப்போது ஆதிக்கம் செலுத்தி வந்த ஜித்தேந்திரா, அமிதாப் பச்சன் போன்ற சூப்பர் ஸ்ரார்களையும் தாண்டி ஸ்ரீதேவி கொடி நாட்டியது அப்போது ஆச்சரியமாக பார்க்கப்பட்டது.

ஜெயப்பிரதா, ரேகா என சக நடிகைகளின் கடும் போட்டியையும் தாண்டி தனது தனி ஸ்டைலால் ஒட்டுமொத்த வடஇந்திய ரசிகர்களையும் கட்டிப்போட்டு வைத்திருந்தவர் ஸ்ரீதேவி. 1978ஆம் ஆண்டு சொல்வா சவான் என்ற படம் மூலம் ஹிந்தியில் அறிமுகமானவர் ஸ்ரீதேவி. மிஸ்ரர் இந்தியா, மாவாலி, டோபா, சாந்தினி போன்ற படங்களால் இந்தி ரசிகர்களை உலுக்கினார். மிகப் பெரிய பொக்ஸ் ஒவ்பீஸ் ஹிட் படங்கள் இவை. சால் பாஸ், சத்மா, லம்ஹே, கும்ரா போன்றவை அவரது நடிப்பால் பேசப்பட்டவை.

15 ஆண்டு காலம் படங்களில் நடிக்காமல் இருந்த ஸ்ரீதேவி 2012இல் மீண்டும் நடிக்க வந்தார். இங்கிலீஷ் விங்கிலீஷ் அவரது நடிப்புக்காக பேசப்பட்டது. கடைசியாக அவர் இந்தியில் நடித்த படம் மாம். கடந்த ஆண்டு வெளியானது. வட இந்தியாவுக்குப் போய் வெற்றிக் கொடி நாட்டியதோடு, அங்குள்ள சூப்பர் ஸ்ரார்களையும் தாண்டி புகழ் பெற்றது என்று பார்த்தால் அது ஸ்ரீதேவி மட்டுமே. அவருக்கு முன்பு வைஜெயந்தி மாலா போன்றோர் இருந்தாலும்கூட ஸ்ரீதேவி அளவுக்கு யாருமே புகழ் நாட்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகாசி அருகேயுள்ள மீனம்பட்டி என்ற கிராமத்தில் ஐயப்பன் - ராஜேஸ்வரி தம்பதியின் மகளாக 1963 ஓகஸ்ட் 13 அன்று பிறந்தவர் ஸ்ரீதேவி. கறுப்பு வெள்ளைக் காலத்தில், 4 வயதுச் சிறுமியாகத் தமிழ்க் கடவுள் முருகன் வேடத்தில் ஸ்ரீதேவி குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். 'சாண்டோ' சின்னப்பா தேவரின் தயாரிப்பில் எம்.ஏ. திருமுகம் எனும் சாதனை இயக்குநரால் கண்டறியப்பட்டு, இசையருவி கே.பி.எஸ், சௌஹார் ஜானகி, நாகேஷ், மேஜர் சுந்தர்ராஜன், வி.எஸ்.ராகவன் போன்ற சாதனைக் கலைஞர்களுடன் முதல் படத்திலேயே நடிக்கும் பேறுபெற்றார். ஸ்ரீதேவிக்கு மீண்டும் பல படங்களில் முருகன் வேடம் கிடைத்தாலும், மலையாளம், கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளிலும் விதவிதமாகக் குழந்தை கதாபாத்திரங்கள் கிடைத்தன. அவற்றில் 1971இல் பி.கே.பொற்றேகாட் இயக்கத்தில் மலையாளத்தில் வெளியான 'பூம்பட்டா' என்ற படம், சிறுமி ஸ்ரீதேவியை பிறவிக் கலைஞராக அடையாளம் காட்டியது. அதில் சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாகி மீளும் சாரதா என்ற சிறுமியாக முதன்மைக் கதாபாத்திரத்தை ஏற்று நடித்து, சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான கேரள அரசின் விருதை 8 வயதில் வென்றார்.



குழந்தை நட்சத்திரமாகப் புகழ்பெற்றுவிட்டாலும் குமரியானதும் கதாநாயகியாக நடிக்க வேண்டும் என்ற உந்துதல் சாவித்திரியைப் பார்த்தே உருவானது எனக் கூறும் ஸ்ரீதேவி, தனது 12 வயதில், சேதுமாதவன் ஹிந்தியில் இயக்கிய ஜூலி படத்தில் அறிமுகமாகி, கதாநாயகியின் தங்கையாக நடித்தார். இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் தனது 'மூன்று முடிச்சு' படத்தில் ஸ்ரீதேவியை கதாநாயகியாக அறிமுப்படுத்தினார். 16 வயதினிலே மயிலாக பாரதிராஜாவால் உச்சம் பெற்றுத் தமிழ் ரசிகர்களின் கனவுகளை ஆக்கிரமித்துக்கொண்டது. மூன்றாம் பிறை, மீண்டும் கோகிலா, பிரியா, சிவப்பு ரோஜாக்கள், வறுமையின் நிறம் சிவப்பு உள்ளிட்ட படங்களில் நடித்து ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் ஸ்ரீதேவி. கமல், ரஜினியோடுதான் ஸ்ரீதேவி நடிப்பார் என்ற முத்திரைக்குள் சிக்கிவிடாமல், சிவகுமார், விஜயகுமார் என அனைத்து முக்கிய நடிகர்களுடனும் நடித்தார். அன்று ரசிகர்கள் நேசித்த பாலசந்தர், பாரதிராஜா, பாலுமகேந்திரா, மகேந்திரன் போன்ற இயக்குநர்களின் தேர்வாக மாறினார்.

தலைமுறைகளைக் கடந்து கதாநாயகியாகவே மிளிர்ந்த சாதனை ஸ்ரீதேவிக்கு மட்டுமே உரியது. தெலுங்குப் படவுலகம் கொண்டாடிய நாகேஸ்வர ராவுக்கு ஜோடியான ஸ்ரீதேவி, அவருடைய மகன் நாகார்ஜுன் ஜோடியாகவும் நடித்தார். ஹிந்திப் படவுலகிலோ தர்மேந்திராவுடன் ஜோடி சேர்ந்தவர், அவருடைய மகன் சன்னி தியோலுக்கும் ஜோடியாகி அசத்தினார்.

திரை உலகில் பிரபலமாக இருந்தபோதே பொலிவுட் தயாரிப்பாளர் போனிகபூரை திருமணம் செய்து கொண்டார். திருமண வாழ்க்கையில் சிறந்த மனைவியாக, இரு பெண் குழந்தைகளின் அர்ப்பணிப்பு மிக்க தாயாக, திரை நடிப்பிலிருந்து ஒதுங்கியிருந்த ஸ்ரீதேவி, குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதும் திரையிலிருந்து விலகிய 15 ஆண்டுகளுக்

(தொடர்ச்சி 34 ஆம் பக்கம்...)

AWARD WINNING BBQ and WING Tap & Grill.




For Sale $245,000

HORN DAWGS BBQ
TAP & GRILL



- Excellent opportunity, turnkey operation with trained staff.
- Average sales approx. $700,000/yr. Potential for sales increase with additional hours.
- Fully equipped with over $80,000 spent in improvements in last year.
- Licensed for 85 seats. Potential to add patio (drawings available).
- Located in busy Tim Hortons Plaza and across from Arena and Fairgrounds.
- 800 new homes being built in the immediate area.
- Excellent lease. MLS#E4043386.

Serious Inquiries ONLY

Contact: Peter Flanagan 905-435-7070. peterflanagan29@yahoo.com

விசேட சலுகை விலையில்



SAVE UP TO $1350

SMART HOME MONITORING

UNLIMITED
INTERNET
TV - HOME PHONE



தமிழில் உரையாட அழையுங்கள்
சுந்தர் சின்னத்தம்பி
Rogers Local Area Advisor
416.908.6845
puvanendran.sinnatha@rci.rogers.com

ROGERS™


# இணைந்து கனடாவில் குடியேறி வாழ்வது மிகவும் இலகு.



மிக விரைவில் கனடாவை உங்களின் வீடாக்குவதற்கு தோழமையும் அனுபவமும் வாய்ந்த குடியேற்றத் துறைசார் நிபுணர்கள் உதவிசெய்ய முடியும்.

உங்களுக்கு அருகிலுள்ள இந்த இலவச சேவைகளைக் கண்டறிவதற்கு

Canada.ca/newcomerservices ஐப் பார்வையிடுங்கள்.




Immigration, Refugees and Citizenship Canada	Immigration, Réfugiés et Citoyenneté Canada

Canada


# Black Panther - திரை விமர்சனம்



ஞா. ஆரணி

பிரபல Comic Book நிறுவனமான Marvel இன் புதிய வெளியீடு இந்த Black Panther என்ற ஆங்கிலத் திரைப்படமாகும். 1966இல் Marvel கதைப்புத்தகங்களில் அறிமுகப் படுத்தப்பட்ட Black Pantherஐ கதாநாய கனாகக் கொண்டு February 2018இல் வெளியானது இப்படம்.

Wakanda, ஆபிரிக்காவில் உள்ள ஒரு (கற்பனை) நாடாகும். உலகின் மிக வலிமை யான உலோகப் பொருளான Vibranium வளங்கள் இந்நாட்டில் மட்டும்தான் இருக் கின்றன. உலகின் மிகத் திறமையான தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்த நாடும் இதுவாகும். ஆனால் உலகில் நடக்கும் கெட்ட சம்பவங்களை (அடிமைப்படுத்துதல், உலகப்போர்கள்) கண்டு, Wakanda தங்க ளது வளத்தை ஒளித்து உலகிற்கு தாங்கள் ஒரு மூன்றாம் உலக நாடு போல வெளிப் படுத்துகின்றனர். எனவே, மேற்கத்தைய தாக்கம் இல்லாத கலாசாரமும், மேற்கத்தி யர்களைவிட மிகவும் முன்னேற்றம் அடைந்த Wakandaவின் உண்மை நிலையும் உலகிற் குத் தெரியாது.

இந்நாட்டின் அரசரான T'Chaka ஐக்கிய நாடுகள் சபையில் நடந்த தாக்குதலில் இறந்தார். அவ்வேளையில் அவருடன் இருந்த அவரது மகன் T'Challa அரச பதவி ஏற்க தனது நாடு திரும்புகிறார். Wakanda வின் மன்னர், நாட்டைக் காக்கும் Black Panther என்ற Superhero வேடம் அணிந்து, ஒரு சக்தியுள்ள பூவின் சாற்றைக் குடித்து Superpowersகளைப் பெறுவார். T'Challa வும் இவ்வாறு முறைப்படி முடிசூட்டப்பட்டு Wakandaவின் அரசனாகிறார்.

ஆனால் சில நாட்களில் பின் அமெரிக்கர் ஒருவர் Wakandaவிற்கு வந்து, தானும் இந் நாட்டைச் சேர்ந்தவன் என்றும், தனக்கு Wakandaவை ஆளும் உரிமை இருக்கிறது என்றும், உலகில் பல நாட்டு மக்கள் கஷ்டப்படும் பொழுது எவ்வாறு அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறனுள்ள Wakanda ஒளிந்திருக்க முடியும் எனக்



குற்றம் சாட்டுகிறார். இதனால் Vibranium த்தைப் பாவித்து Wakanda உலகம் முழு வதையும் கைப்பற்றி, எதிர்த்தவர்களைக் கொன்று, உலகநாடுகளை ஆளவேண்டும் எனக் கூறுகிறார்.

யார் இவர்? T'Challaவிடமிருந்து அரசைப் பறிப்பாரா? T'Challa அவரிடமிருந்து Wakanda ஐக் காப்பாற்றுவாரா? என்பதைப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

Wakanda எல்லா வளங்களும் உள்ள ஒரு சிறந்த நாடாகும். பல்வேறு ஆபிரிக்க கலா- சாரங்களைப் பின்பற்றிக்கொண்டு, தொழில் நுட்பத்தில் ஒரு முன் உதாரணமாகவும் (Magnetic Rail, மிகச்சிறந்த மருத்துவம்) இருப்பதால், வழமையான Science Fiction கதைகளில் காட்டப்படும் எதிர்காலங்களில் இருந்து இப்படம் வித்தியாசமாக எடுக்கப் பட்டுள்ளது. அதாவது ஒரு நாடு 'Modern' ஆக முன்னேற 'Western'ஆக மாறத்

(தொடர்ச்சி 27 ஆம் பக்கம்...)

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# 2018 குளிர்கால ஒலிம்பிக்போட்டி

குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவில் நடைபெற்றது. ஒலிம்பிக் போட்டியைப்போல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. உறைபனியில் நடத்தப்படக் கூடிய விளையாட்டுகள் மட்டும் இந்தப் போட்டியில் அரங்கேறும். 93 நாடுகளை சேர்ந்த 2,952 வீரர் - வீராங்கனைகள் பங்கேற்கும் 23-வது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவில் உள்ள பியாங் சாங் நகரில் பெப்ரவரி 02, 2018 ஆரம்பமாகி பெப்ரவரி 25, 2018 திகதி வரை நடைபெற்றது. இந்த போட்டியில் ஐஸ் ஹொக்கி, பனிச்சறுக்கு, ஸ்கேட்டிங் உள்பட 15 வகையான விளையாட்டுகள் இருபாலருக்கும் நடத்தப்பட்டன.




தென்கொரியாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெறுவது இது முதல்முறையாகும். 1988ஆம்ஆண்டில் தென்கொரியா தலைநகர் சியோலில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று இருந்தது. இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் ஈகுவடார், எரிட்ரியா, கோசோவா, மலேசியா, நைஜீரியா, சிங்கப்பூர் ஆகிய 6 நாடுகள் முதல்முறையாக பங்குபற்றின. இம்முறை வடகொரியா மற்றும் தென்கொரிய வீரர்கள் கூட்டாகப் பங்குபற்றினர்.



ஊக்க மருந்து பிரச்சினை காரணமாக ரியோ ஒலிம்பிக்கில் ரஷியா பெயரில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டு இருந்த ரஷிய அணியினர் தனிப்பட்ட போட்டியாளர்களாகப் பங்குபற்றினர். பெண்களுக்கான பிகர் ஸ்கேற்றில் தனிநபர் பிரிவில் 15 வயதான ரஷிய இளம் வீராங்களை அலினா ஜாகிடோவா தங்கப்பதக்கம் வென்றார். இவரே முதல் தங்கம் வென்ற ரஷிய இளம் வீராங்கனை ஆவார். இப்போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை மற்றுமொரு ரஷிய வீராங்கனையும் வெண்கலப்பதக்கத்தை கனேடிய வீராங்கனையும் பெற்றிருந்தனர். ரஷிய வீரர்கள் ஐஸ் ஹாக்கி இறுதிப்போட்டியில் ஜெர்மனி அணியை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றனர். இதன்மூலம் இந்த ஒலிம்பிக் தொடரில் முதன்முறையாக ரஷியாவின் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது.

தென்கொரியா அதிபர் மூன் ஜே-இன், அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்பின் மகளும், ஆலோசகருமான இவான்கா ட்ரம்பின், வட-கொரியாவை சேர்ந்த மூத்த அதிகாரியான கிம் யோங் சோல் உள்ளிட்டோர் நிறைவு விழாவில் கலந்துகொண்டார்.

நிறைவு நிகழ்வாக ஒலிம்பிக் தீபம் அணைக்கப்பட்டதுடன் ஒலிம்பிக் போட்டிக்கான கொடியை பியோங்சாங் நகர மேயர் சிம் ஜே குக்கிடமிருந்து பெற்று சர்வதேச ஒலிம்பிக் குழுத்தலைவர் தோமஸ் பாஜ் அடுத்த குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடை-பெற உள்ள சீனாவின் பெய்ஜிங் நகர மேயர் சென்ஜின்னிங்கிடம் அதை ஒப்படைத்

| F I N A L M | | |
|---|---|---|
| COUNTRY | GOLD | SILVER |
| Norway | 14 | 14 |
| Germany | 14 | 10 |
| Canada | 11 | 8 |
| United States | 9 | 8 |
| Netherlands | 8 | 6 |

தார். இறுதியாக பியோங்சாங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் அதிகாரபூர்வமாக நிறைவடைவதாக அறிவித்தார். இனிவரும் 2022ஆம் ஆண்டு சீன தலைநகர் பெய்ஜிங்கில், அடுத்த குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெற உள்ளது.

## எண்பது வயது மூதாட்டிக்கு பாராட்டு



மார்க்கம் நகரபிதா FRANK SCARPITTI அவர்கள், எண்பது வயதில் M.A முதுமானிப்பட்டத்தை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பெற்ற திருமதி யோகரத்தினம் செல்லையா அவர்களை வாழ்த்தி பாராட்டு பத்திரம் வழங்கினார்.

மேற்படி நிகழ்வு மார்க்கம் நகரில் உள்ள மார்க்கம் நகர பிதாவின் அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்வின் போது மார்க்கம் கவுன்சிலர் திரு. லோகன் கணபதி, மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தலைவர் திரு. அருள் இராஜசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





## தமிழ்ப்புதிர்

கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு அல்லது தொடர்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை அல்லது சொற்தொடர்களை இட்டு பின்வரும் வலையத்தை நிரப்பவும். உங்கள் விடையை இந்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக எமக்கு அனுப்பி வைக்கவும். உச்சப் புள்ளி பெற்றவராக எமது நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் போட்டியாளருக்கு விளம்பரம் பத்திரிகை நிறுவனத்தினரால் உரிய பரிசு வழங்கப்படும்.

**போட்டியாளர்:**

| |
|---|
| பெயர்: |
| முகவரி: |
| தொலைபேசி இல: |
| மின்னஞ்சல்: |

**தமிழ்ப்புதிர் – 05 வினா**



| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 Mumble | 1 Full Moon |
| 5 Describe | 2 Crown |
| 7 Proceeds | 3 Earth |
| 9 Celebrate | 4 Documentary evidence |
| 11 Useless | 6 Snatch |
| 12 Our | 8 Malabar nut |
| 13 Achieve | 9 Condominium |
| 14 Sheep | 10 Horned Viper |
| 16 Head Tax | 14 Arrogance |
| 17 Hook | 15 Net |
| 19 Hole | 16 Bran |
| 20 Debt | 17 Rip |

### விடை அனுப்பும் விதம்

மின்மடல்: vlambaram@sympatico.ca / info@vlambaram.com
தொலை நகல்: 416-286-0334
முகவரி: Tamil Puzzle, Vlambaram,
5215 Finch Ave. E. #201,
Toronto, ON, M1S 0C2

**தமிழ்ப்புதிர் – 04 விடை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 வா | ளை | ■ | 3 ம | ■ | 4 அ | ரி | ப் | 5 பு |
| 6 வி | ழை | ■ | 7 அ | ரு | ந் | து | ■ | ■ | ள் |
| ■ | ■ | 8 அ | ர | ண் | ■ | 9 ம | 10 தி | ■ | ள |
| 11 நா | ம் | தி | ட் | ட | மி | ட் | ட | 12 ப | டி |
| ■ | ■ | 13 கா | டை | ■ | ■ | டு | ■ | சு | ■ |
| 14 எ | ல் | லை | ■ | ■ | 15 தா | ம | த | ம் | ■ |
| ழு | ■ | ■ | 16 பே | 17 தி | ■ | ல் | ■ | 18 பு | வி |
| ச் | ■ | 19 அ | ■ | யா | ■ | ல | ■ | ல் | ■ |
| 20 சி | று | நீ | ர | க | ம் | ■ | 21 ஏ | ■ | 22 ம |
| ■ | ■ | தி | ■ | ம் | ■ | 23 சா | கு | ப | டி |

தமிழ்ப்புதிர் – 04 வெற்றியாளர்: யசோதை தயாபரன் – ஒட்டாவா

# பசுமை நிறைந்த செஞ்சீனா

**- வே. விவேகானந்தன் -**

கடந்த இதழ் தொடர்ச்சி...

இரு நாட்களின் பின்னர் ஷாங்காய் புறப்பட ஆயத்தமானோம். பெய்ஜிங் நகரில் வழி காட்டுனறாகப் பணிபுரிந்த jing என்ற சீனப் பெண்மணி விமானநிலையம்வரை வந்து எம்மை வழியனுப்பி வைத்தார். ஷாங்காய் சர்வதேச விமானநிலையத்தில், அந்தனி என்ற சீன வழிகாட்டுனர் வரவேற்று, உபசரித்தார். பின்னர் அவர் ஒழுங்கு செய்திருந்த சொகுசு பஸ் வண்டியில் சீன வரலாற்றில் கி.மு 514ஆம் ஆண்டு முதல், வரலாற்றுப் முக்கியத்துவம் வாய்ந்த Suzhou என்ற இடத்துக்குப் போனோம். "கிழக்கின் வெனிஸ்" என வர்ணிக்கப்படும் இந்த இடம் எழில்மிகு இயற்கை அழகைக் கொண்டதாகவும், பட்டுநூல் கைவினை வேலைப்பாடுகளுக்கு (Silk Embroidery) பிரசித்தி பெற்றதாகவும், விளங்கி வருகிறது. அங்குள்ள பட்டு நிலையத்தின், காட்சி அறையில் பலநிறப் பட்டு நூல்களினால் இழைக்கப்பட்ட, இயற்கைக் காட்சிகள், மற்றும் டயானா போன்ற பிரபல்யமன வர்களின் படங்கள், பல்வேறு வடிவங்களில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தமை வர்ணிக்க முடியாததொன்றாகும்.



மதிய போசனத்தையடுத்து சீனாவின் பழமை வாய்ந்த வாழ்விடங்கள், வாழ்க்கை முறை, கட்டட அமைப்புக்கள் பயன்படுத்தப் பட்ட பொருட்கள் போன்றவற்றை உள்ளடக் கிய பூங்காவைப் (Lanli Garden) பார்த் தோம். இதன்மூலம் ஆரம்பகால சீனமக்கள் இயற்கையோடு இணைந்தும், இயற்கையை இரசித்தும் வாழ்ந்தார்கள் என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

மறுநாள் காலை பட்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றைப் பார்வையிடச் சென்றோம். பட்டு உற்பத்திக்குப் பெயர் பெற்ற நாடுகளுள் சீனாவும் ஒன்று. பட்டுப் பூச்சியின் பிரதான உணவான மல்பெரிச் செடியின் வளர்ச்சிக்கேற்ற காலநிலையும், பட்டுப் பூச்சியிலிருந்து பெறப்படும் நூல் களைக் கழுவி சுத்தம் செய்து பதப்படுத்த போதுமான நீர் வளமும் பட்டு உற்பத்திக் குச் சாதகமாக அமைந்துள்ளன. இங்கு உள்ளாடைகள் முதல் உடைகள், தலை யணை உறைகள், கட்டில் விரிப்புகள், போர்வைகள் சொகுசு மெத்தைகள் என்பன செயப்படுகின்றன. பட்டுப் பூச்சியின் கழிவு மல்பெரிச் செடியின் இலைகளில் இருந்து சேகரிக்கப்பட்டுக் காய வைத்து, பட்டுடன் சேர்த்து தலையணை செய்யப்படுகிறது. இது இரத்த ஓட்டத்தினை சமநிலைப்படுத்தி இதய நோய், இரத்தக் கொதிப்பு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறப் படுகிறது.

அடுத்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்களால் உருவாக்கப்பட கால்வாயைப் (Grand Canal) பார்க்கச் சென்றோம். இயந் திரப் படகில் இக்கால்வாயூடாகப் பயணம் செய்தபோது மிகப் பழமைவாய்ந்த குடியிரு ப்புக்களை அவதானிக்கக் கூடியதாக இருந் தது. சீனாவின் ஆரம்பகாலக் கட்டடக்கலை-களையும் கலாச்சார, பாரம்பரிய சின்னங் களையும் காண முடிந்தது. மிக அமைதி யான சூழலைக் கொண்டிருக்கும் இக் குடி யிருப்புகளில் ஓய்வுபெற்றவர்களும் முதிய வர்களும் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர் என எமது சீன வழிகாட்டுனர் கூறினார். சீனப் பாரம்பரிய கலாச்சார முறைப்படி திருமணம் செய்ய விரும்புவோர் இங்கு வந்து திருமண வைபவத்தை நடத்துகின்றனர் என அவர் மேலும் கூறினார்.



அன்றய மதிய உணவைத் தொடர்ந்து Wuxi என்ற இடத்துக்குப் பயணித்தோம். இது சீனாவின் பழமை வாய்ந்த மற்றுமோர் இடமாகும். மித வெப்பமானதும் ஈரலிப்பான-துமான காலநிலையைக் கொண்ட இப் பிர தேசம், பல நன்னீர் வாவிகளையும் கொண்டுள்ளது. அதனால், மக்கள் விரும்பி வாழும் இடமாகவும் விளங்குகிறது. இதன் செழிப்புக் காரணமாக "Land of Fish and Rice" என வர்ணிக்கப்படுகிறது. இதன் அருகே Ling Shan என்ற இடத்தில் மிகப் பெரிய பௌத்த பூங்காவையும், சீனாவில் மட்டுமின்றி உலகத்திலேயே மிகப் பெரிய புத்தர் சிலையையும் கண்டு களித்தோம். இவை மத வழிபாட்டு இடங்களாக, அன்றி, உல்லாசப் பயணிகளைக் கவரும் உல்லாசப் பயணத்துறை மையங்களாகவே காணப்படுகின்றன.

(தொடரும்)

# சிறுகதை - அரண்

**- ராபியா குமாரன் -**

ஓய்வு நேரத்தில் கணினி ஆய்வகத்தில் அமர்ந்து, இன்ரர்நெற்றில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள் பொறியியல் மாணவி பாத்திமா. குறிப்பெடுத்துக் கொண்டிருந்தவளிடம் 'பாத்திமா.. உன்னை ஹெச்.ஓ.டி அவங்க ரூம்ல வந்து பாக்கச் சொன்னாங்கடி..' என சொல்லிச் சென்றாள் பாத்திமாவின் வகுப்புத் தோழி திவ்யா.

உடனே கம்ப்யூட்டரை ஒஃப் செய்துவிட்டு, ஹெச்.ஓ.டி அறைக்குச் சென்ற பாத்திமா அறையின் வாசலில் நின்று கொண்டு 'மேய் ஐ கம் இன் மடம்...' என்றாள்.

ஹெச்.ஓ.டி திலகவதி 'எஸ்.. கம் இன்..' என்று பதிலளித்து அறையினுள் வர அனுமதியளித்தார்.

'மடம் உங்களை வந்து பார்க்கச் சொன்னதா திவ்யா சொன்னா...'

'யெஸ்.. பாத்திமா நான்தான் வரச் சொன்னேன். ரேக் யுவர் சீட்..'

'தங்க்யூ மாம்..'

'பாத்திமா.. வழக்கம்போல இந்த செமஸ்டர் லையும் நீதான் ஃபர்ஸ்ட் மார்க் போல...? என்று ஹெச்.ஓ.டி கேட்டதும் மலர்ந்த முகத்தோடு, 'ஆமாம் மடம்..' என்று பதிலளித்தாள் பாத்திமா.

ஹெச்.ஓ.டி, 'வெரி குட்.. கீப் இட் அப்..' என்றதும் அதே முக மலர்ச்சியோடு,

'தங்க்யூ சோ மச் மடம்..' என்றாள்.

'அண்ட் வன் மோர் திங் பாத்திமா.. நம்ம காலேஜ் ஸ்டுடன்ஸ் அசோசியேசனுக்கு நீதானே செகரட்ரி..?

'யெஸ்.. மடம்.. ஏன் கேட்கிறீங்க...?'

'நம்ம காலேஜ்ல புதுசா ஒரு ரூல்ஸ் வரப் போகுது.. அதைப்பற்றி பேசத்தான் வரச் சொன்னேன்..' என்று ஹெச்.ஓ.டி சொன்னதைக் கேட்டதும் காலேஜ் ரூல்ஸைப் பத்தி நம்மிடம் என்ன பேசப் போறாங்க..?' என்று குழம்பிய பாத்திமா,'என்ன ரூல்ஸ் மடம்..? காலேஜ் ரூல்ஸ் பற்றி என்னிடம் என்ன பேச வேண்டும்..?' என்று ஹெச்.ஓ.டியிடம் நேரடியாகக் கேட்டாள்.

'நேற்று நடந்த மீட்டிங்கில் பிரின்ஸ்பல் புதுசா ஒரு ரூல்ஸ் கொண்டு வரப்போறதா சொன்னாங்க.. முஸ்லிம் ஸ்டுடன்ஸ் யாரும் இனிமேல் பர்தா போட்டுக்கொண்டு காலேஜ்க்கு வரக்கூடாதுனு ரூல் வரப் போகுதாம்.. இதைப்பற்றி ஏதாவது ஒரு முஸ்லிம் ஸ்டுடண்ட்கிட்ட பேசி அவங்க என்ன நினைக்கிறாங்கனு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன். அதனால்தான் உன்னை வரச்சொன்னேன் பாத்திமா...' என்று ஹெச்.ஓ.டி சொன்னதைக் கேட்டதும் அதிர்ச்சியில் உறைந்து போனாள் பாத்திமா.

'என்ன மடம் சொல்றீங்க..? எதுக்கு திடீர்னு இப்படி ஒரு ரூல்...?'



'மத அடையாளங்கள் கல்லூரிக்குள் இருக்கக்கூடாது, மூடப் பழக்க வழக்கங்களிலிருந்து இளைய சமுதாயத்தை மீட்க வேண்டும், பெண்ணடிமைத் தனத்தைப் போக்க வேண்டும், எல்லோரும் தோற்றத்தில் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இந்த புது ரூலை கொண்டு வரப்போறாங்க...'என்று ஹெச்.ஓ.டி சொல்லி முடிப்பதற்குள், 'இது ரொம்ப அநியாயம் மடம்...' என்று ஆவேசப்பட்டாள் பாத்திமா. 'அநியாயமா? என்ன சொல்ற பாத்திமா? இது ஒரு வகையில் உங்களுக்கு நன்மை தரக்கூடிய விஷயம்தானே? உங்க வீட்டில உன்னை கட்டாயப்படுத்தி பர்தா அணியச் சொல்றதுனாலதான நீ அணியுறா..? இனி இந்தத் தொல்லை இல்லைனு நீ உண்மையில் சந்தோசம்தான் அடைய வேண்டும்...'

'இல்லை மடம் பர்தாவை நான் விரும்பித் தான் அணிகிறேன்.. என்னை பர்தா போடச் சொல்லி யாரும் கட்டாயப்படுத்தவில்லை. இஸ்லாத்தில் எந்த விசயத்திலும் நிர்பந்தமும் இல்லை..' என்று பாத்திமா சட்டென பதிலளித்தது ஹெச்.ஓ.டிக்கு வியப்பை ஏற்படுத்தியது.

'என்னது? பர்தாவை விரும்பித்தான் அணியுறியா? பொய் சொல்லாதே பாத்திமா..'

'இல்லை மடம்.. பொய் சொல்லவில்லை.. நிஜமாத்தான் சொல்றேன். பர்தாவை விரும்பித்தான் அணிகிறேன்... வேறு எந்த உடையிலும் கிடைக்காத கண்ணியம் எனக்கு இந்த உடையில் கிடைக்கிறது மடம்..இதை நான் அனுபவத்தில் சொல்கிறேன்.. சும்மா பேச்சுக்காக சொல்லவில்லை..'

பாத்திமா மிகவும் யதார்த்தமாக பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த ஹெச்.ஓ.டி.,' என்னைப் பொறுத்தவரை பர்தா என்பது பெண்ணடிமைத்தனத்தின் ஒரு வகைதான். இஸ்லாத்தில் உள்ள எத்தனையோ நல்ல விடயங்கள் எனக்குப் பிடிக்கும். ஆனால் எனக்கு இஸ்லாத்தில் பிடிக்காத ஒன்று பெண்களைத் திரையிட்டு மறைப்பதுதான்..' என்றார்.

'நீங்கள் தவறாக புரிந்திருக்கிறீர்கள் மடம்.. பர்தா பெண்ணடிமைத்தனத்தின் வெளிப்பாடு அல்ல.. உண்மையில் பர்தா பெண்களை கௌரவிக்கத்தான் செய்கிறது. நீங்கள் நினைக்கிற மாதிரி திரையிட்டு மறைத்து அடிமைப்படுத்தவில்லை. இஸ்லாம் பெண்களுக்கு கல்வியுரிமை, சொத்துரிமை, விவாகரத்து உரிமை, திருமணக் கொடையுரிமை என எத்தனையோ உரிமைகளை வழங்கி பெண்களை கௌரவிக்கிறது. அதேமாதிரி தான் மடம் பர்தாவின் மூலமாகவும் இஸ்லாம் பெண்களை கண்ணியம் செய்கிறது...'

'அப்படி என்ன கண்ணியம் இந்தப் பர்தாவில் இருக்கு...?'

'எவ்வளவோ இருக்கு மடம்...ஒரு பெண்ணுக்கு எல்லா உரிமையையும் கொடுத்து அவளோட பாதுகாப்புக்கு காரண்டி தர்றது தான் உண்மையான கண்ணியம்.. அந்த கண்ணியத்தை இஸ்லாம் பர்தா மூலமா பெண்களுக்கு வழங்கியிருக்கு...அதைப் பற்றி சொல்றதுக்கு முன்னால பர்தானா என்ன? அதோட வரைமுறை என்னவென்று நீங்க தெரிஞ்சுக்கணும் மேடம்...'

'சொல்லு பாத்திமா.. தெரிஞ்சுக்குறேன்..'

'சொல்றேன் மேடம்.. நீங்க நினைக்கிற மாதிரி இஸ்லாம் பெண்களை திரையிட்டு மறைக்கச் சொல்லவில்லை.. பெண்கள் தங்களோட முகம் மற்றும் இரண்டு முன் கைகள் மட்டும் தெரியும்படி ஆடை அணிய வேண்டுமென்று தான் இஸ்லாம் சொல்லுது... உலகத்துல இருக்கிற எல்லா பெண்களும் அந்தந்த நாட்டுல வழக்கத்துல இருக்குற ஆடைகளைத்தான் அணியுறாங்க... பெண்களுக்கு ஒரு பிரத்தியேகமான உடையை வடிவமைத்து இதைத்தான் உலகத்தில் உள்ள எல்லா முஸ்லிம் பெண்களும் அணிய வேண்டுமென்று இஸ்லாம் நிர்பந்திப்பதில்லை. இந்தியாவில் இருக்குற முஸ்லிம் பெண்களும் புடவைதான் கட்டுறாங்க.. பெண்கள் விதவிதமான, கலர் கலரான ஆடைகள் அணிவதையோ, தன்னை அழகு படுத்திக் கொள்வதையோ இஸ்லாம் தடுக்கவில்லை. பெண்களின் இந்த சுதந்திரத்திலெல்லாம் இஸ்லாம் தலையிடவில்லை. இஸ்லாம் சொல்ற ஒரே கண்டிசன் அந்நிய ஆண்களுக்கு முன்னாடி முகம் மற்றும் இரண்டு முன் கைகள் தவிர மற்ற பகுதிகளை மறைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். எல்லா பெண்களை மாதிரியும் முஸ்லிம் பெண்கள் புடவை, சுடிதார் போன்ற ஆடைகளை அணியத் தான் செய்கிறாங்க... தன்னை அழகுபடுத்திக் கொள்றாங்க... வெளியே எங்கையாவது போகும் போது தான் பர்தா போடுறாங்க மடம்... 24 மணிநேரமும் பர்தா அணிய வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டிருந்தால் இஸ்லாம் பெண்களை அடிமைப் படுத்துகிறது என்று நீங்கள் சொல்லலாம், ஆனால் அந்நிய ஆண்கள் முன்னிலையில் மட்டுமே இஸ்லாம் சில வரையறைகளை கடைப்பிடிக்கச் சொல்லுது. மற்றபடி வீட்டில் தன் தந்தை, சகோதரர்கள் முன்னிலையிலும், கணவன் முன்னிலையிலும் கூட பர்தாவோடுதான் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லாத போது எப்படி மடம் பர்தாவை பெண்ணடிமைத்தனத்தின் அடையாளமாகச் சொல்ல முடியும்?


'ஓ.. அப்டினா ஒரு முழு நீள கருப்பு அங்கியால தலை முதல் பாதம் வரை உடலை மூட வேண்டுமென்று இஸ்லாம் சொல்லவில்லையா...?' என்று ஹெச்.ஓ.டி கேட்டதும் லேசாக சிரித்த பாத்திமா தொடர்ந்து பேசினாள்.

'இல்லை மடம்.. ரைற்றான டிரஸ்ஸா இல்லாமல், முகம், இரண்டு முன் கைகள் தவிர மற்றப் பாகங்கள் மறைந்திருக்க வேண்டும் என்பதுதான் சட்டம். எல்லா பெண்களும் புடவை, சுடிதார் என தங்களுக்கு பிடித்த உடைகளை அணிந்து கொள்கிறார்கள். வெளியே செல்லும்போது மட்டும் இஸ்லாம் சொல்ற மாதிரி உடல் பாகங்களை மறைப்பதற்கு பர்தாவை அணியுறாங்க. இந்த முழு நீள அங்கி பெண்களோட சௌகரியத்துக்காக டிசைன் பண்ணப்பட்டிருக்கு மடம்...கருப்புக் கலர்லதான் பர்தா இருக்க வேண்டும் என்ற கண்டிஷன்லாம் கிடையாது. எந்தக் கலர்லா வேண்டுமானாலும் இருக்கலாம்..'

'நீ சொல்றதும் ஒரு வகையில் நியாயமாகத்தான் தெரியுது... ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாடி சொன்ன ஒரு விடயம் இந்தக் காலத்துல அதுவும் இந்த நவீன உலகத்துக்கு சரியா வரும்னு நினைக்கிறியா பாத்திமா...?'

'கண்டிப்பா மடம்...சொல்லப்போனா இந்தக் காலத்துலதான் பர்தா ரொம்ப அவசியமா தேவைப்படுது.. பெண்களை சினிமாவிலும், டி.வி.லையும் ஆபாசமா காட்றது நாளுக்கு நாள் அதிகரிச்சுட்டே இருக்கு. ஆண்கள் மட்டுமே பயன்படுத்துற பொருட்களின் விளம்பரத்துக்குக் கூட பெண்கள் தேவைப்பட்றாங்க. பெண்களை போகப் பொருளாக பார்க்கும் மனோபாவம் அதிகரிச்சுட்டே வருது. ஒரு பெண் ரோட்டுல நடந்து போறப்ப எத்தனையோ பேர் தப்பான எண்ணத்தோட பாக்குறாங்க. பர்தா போட்டுட்டு போறதுனால அவங்களோட கழுகுப் பார்வையில் இருந்து தப்பிக்க முடியும் மடம். நம்ம காலேஜ்ல கூட எத்தனையோ பெண்கள் தங்களை ஈவ் டீ சிங் பண்றதாகவும், பின்னாடியே சில ஆண்கள் வருவதாகவும் கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்க. ஆனால் பர்தா போட்டுக் கொண்டு வர்ற எந்தப் பெண்ணாவது இது வரைக்கும் அந்த மாதிரி கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்களா மடம்? கம்ப்ளைண்ட் பண்ணியிருக்க மாட்டாங்க. ஏன்னா பர்தா எங்களுக்கு ஒருவிதமான பாதுகாப்பைத் தருகிறது. எத்தனையோ பெண்கள் ஈவ் டீ சிங்

(தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416.754.7338 / 416.724.7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

## Black...

23 ஆம் பக்கத்தொடர்ச்சி

தேவையில்லை என இப்படத்தில் தெளிவாகக் காட்டப்படுகிறது.



இதேபோல் கதையும், கதாபாத்திரங்களும் சிறப்பாக உள்ளன. நாட்டை ஆளும் பொறுப்பை புதிதாக ஏற்கும் T'Challa, தனது நாட்டின் நலனுக்கும், வெளி உலகின் நலனுக்கும் இடையில் சிக்கிக் கஷ்டப்படுவதைக் காணுகிறோம். T'Challa ஒரு நல்ல மனிதன். எனவே நல்ல மனிதர்களால் அரசாளுவது கடினம் எனக் கூறப்படுகிறது. அதேபோல் அவரது தந்தை பல ஆண்டுகளுக்கு முன் செய்த தவறால் ஏற்படும் பிரச்சினையை எவ்வாறு T'Challa சமாளிக்கிறார் எனவும் இப்படத்தைப் பார்த்து அறியவும்.

இந்திய சமூகத்தின் அறிவியல் மறுமலர்ச்சி வரலாற்றில் ஸ்வர்ணகுமாரி தேவியின் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பெயர். அறிவியல் தொடர்பான பொருட்களில் ஏராளமாக எழுதிக் குவித்த முதல் இந்தியப் பெண்மணி அவர். அறிவியல் மட்டுமல்ல, சமூக, அரசியல், கலாசாரத் துறைகளிலும் அவர் நிறைய எழுதினார். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த வங்காளத்தில் இருந்த சாதாரண மக்களுக்கும் புரிய வேண்டும் என்பதற்காக அவர் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்த வங்க மொழியையே தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவருடைய எழுத்துகள் சாதாரண பெண்களையும் ஈர்த்தன. அக்கால நிலைமைகளைக் கணக்கில் கொண்டால், அறிவியலை சாதாரண மக்களிடம் கொண்டு சேர்க்கும் இயக்கத்தை முனைப்போடு அவர் நடத்தியதை பெரும் சாதனை என்றே கூறலாம்.

தேவேந்திரநாத் டாகூருக்கும் சாரதா தேவிக்கும் நான்காவது மகளாக ஸ்வர்ணகுமாரி 1855ஆம் ஆண்டு பிறந்தார். அக்காலத்தில் சிறுமிகளைப் பள்ளிகளில் சேர்ப்பது வழக்கம் இல்லை. ஆனால் தேவேந்திரநாத் டாகூர் வீட்டிலேயே ஆசிரியர்களை வரவழைத்து சம்ஸ்கிருதம், ஆங்கிலம், இலக்கியம், இசை, ஓவியம், அறிவியல், மதம், அரசியல் ஞானம் ஆகிய பல்வேறு துறைகளில் ஸ்வர்ணகுமாரிக்குக் கற்பித்தல் நடைபெற ஏற்பாடு செய்தார். ஸ்வர்ணகுமாரிக்கு 13 வயதே ஆனபோது அக்கால வழக்கப்படி ஜானகிநாத் கோஷல் என்பவருடன் அவருக்கு திருமணம் நடத்திவைக்கப்பட்டது. நாதியா மாவட்ட நிலவுடமையாளரான ஜானகிநாத் கோஷல் இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவனர்களில் ஒருவர். 1890இல் ஸ்வர்ணகுமாரி காங்கிரசில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கினார்.



ஸ்வர்ணகுமாரி தன்னுடைய அறிவார்ந்த பயணத்தை ஒரு நாவல் ஆசிரியராகவும் கவிஞராகவும் தொடங்கினார். தீப்நிர்பன் என்ற அவரது முதல் நாவல் 1876ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நவீன இந்திய இலக்கியத்தில் ஒரு பெண்ணால் எழுதப்பட்ட முதல் புனைவு நூல் அதுதான். அதன்பின் அவர் பல நாவல்களை எழுதினார். அவரது கவிதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தகுந்தவையாக இருந்தன. சிறந்த எழுத்தாளராக விளங்கியது மட்டுமின்றி, பெண்விடுதலைக்கு அழுத்தம் கொடுத்த "பாரதி" என்ற மாதப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் அவர் இருந்தார். அவரது முதல் அறிவியல் கட்டுரையான "புகர்பா" நான்கு பகுதிகளாக பாரதி இதழில் வெளிடப்பட்டது. அறிவியல் சார்ந்த கட்டுரைகளுக்கு முன்னுரிமை தருவதை பாரதி இதழ் ஆசிரியர் குழுவின் கொள்கையாகக் கொணர்ந்தார் ஸ்வர்ணகுமாரி. 1882-ல் அவர் எழுதிய அறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு "பிரதிபி" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. அது பூமி தோன்றி வளர்ந்த கதை. கட்டுரைகளின் தலைப்புகளைப் பார்த்தாலே அத்தொகுப்பின் முற்போக்கான குணாம்சத்தைப் புரிந்து கொள்ள முடியும். "அறிவியல் கல்வி" என்பதுதான் முன்னுரையின் தலைப்பு . "பூமி-சூரியக் குடும்பத்தின் ஓர் உறுப்பினர்".. "பூமியின் இயக்கங்கள்", "பூமியின் தோற்றம்", "பூமியின் மேற்பரப்பு", "பூமிக்கு உள்ளே", "பூமியின் எதிர் காலம்"... ஆகியவை பிற கட்டுரைத் தலைப்புகள். அறிவியல் கல்வி பற்றிய முன்னுரையில் ஆதாரங்களின் அடிப்படையில் முடிவுக்கு வருதல் (inductive), ஊகங்களின் அடிப்படையில் முடிவுக்கு வருதல் (deductive) ஆகிய அறிவியலின் இரு அம்சங்களைப் பற்றி விளக்கம் தந்ததோடு அவற்றைத் தெளிவாக வேறுபடுத்தியும் வரையறை செய்தார் ஸ்வர்ணகுமாரி. புவியியல், வானியல் ஆகிய பாடங்களின் சிக்கலான அம்சங்களை விளக்கும்போது கூட ஸ்வர்ணகுமாரியின் சொல்லாடல் குழப்பமின்றி தெளிவாக இருக்கும். சூரியக் குடும்பம், பால் வெளி, பூமியின் தோற்றம் ஆகியவற்றின் சிக்கலான அம்சங்களை சாதாரண மக்களுக்கும் புரியும்படி விளக்க வரைபடங்களையும் எளிய விளக்கங்களையும் தெளிவான பகுப்பாய்வுகளையும் அவர் பயன்படுத்துவார். ஸ்வர்ணகுமாரியின் அறிவியல் ஞானம் பரவலாகவும் ஆழமாகவும் இருந்ததற்குக் காரணம் அவரது தீவிரமான வாசிப்புப் பழக்கம்தான். அந்தக் காலத்தில் அறிவியலின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டவர்களிடையே ஸ்வர்ணகுமாரியின் ஆளுமை புகழ்மிக்க உயரத்தில் இருந்தது. அறிவியலில் மட்டுமல்லாது, அரசியல் ஈடுபாட்டிலும் அவர் தன்னிகரற்றவராக விளங்கினார். 1905 வங்கப் பிரிவினையை எதிர்த்தும் அந்நியப் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரிய சுதேசி இயக்கத்திலும் அவர் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டார். பெண் கல்விக்காகக் குரல் கொடுத்தார்.

ஸ்வர்ணகுமாரியின் பணியைப் பரிசீலித்தால் இலக்கிய உலகை மட்டுமல்லாது, அறிவியல் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் அவர் செழுமைப்படுத்தியது புலனாகும். முறையான கல்வி பெறுவதில் அவருக்கிருந்த தடைகளையும் மீறி இந்தியாவில் அறிவியலை வளர்க்க அவர் ஆற்றிய பணிகள் அறிவியல் வரலாற்றில் அவருக்கு நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன. தேசத்தை நிர்மாணம் செய்த தலைவர்களில் ஒருவர் என தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் ஸ்வர்ணகுமாரிக்கு புகழாரம் சூட்டினார். 1927இல் கொல்கத்தா பல்கலைக்கழகம் அவருக்கு ஜகத்தரணி தங்க மெடல் அளித்துக் கௌரவித்தது.

இந்திய மறுமலர்ச்சி யுகத்தின் முன்னணி சீர்திருத்தவாதிகளில் ஒருவராக ஸ்வர்ணகுமாரி போற்றப்படுகிறார் என்பதை இன்றைய இளைஞர்கள் கவனத்தில் கொள்வார்களாக!

**மூலம் - டாக்டர் ராகேஷ் குமார்**



Math tutorial 359

Answers to tutorial 358

1)The direction vector of 1st line is $d_1 = (1, 3, 1)$ and 2nd line is $d_2 = (4, -1, -1)$ Since $d_1 . d_2 = 0$ ,the two lines are perpendicular

2)Setting y =0 ,we have $x^2+6x = 0$ .So x=0 or x= -6

Setting y=0 we have $y^2 - 2y = 0$,then y=0 or y= 2.There are three intercepts ,they are (0 ,0 ), ( -6 ,0 ) and (0 ,2)

3)To determine the point of intersection ,solve the equations

$x^2 + y^2 = 4$

$x^2 + y^2 - 6x = 2$

Subtracting , 6x =6 ,x =1

Then $y^2 = 3$ and $y = \pm 3$ ,therefore the points of intersections are $(1, \sqrt{3})$ and $(1, -\sqrt{3})$ The length of the chord is $2\sqrt{3}$

4)There will be 26+26+10=62 symbols available

a) Each position can be any of the 62 symbols , so there will be $62^8$ possible passwords

b)10……………10 the first and last position have 10 choices.The remaining have any of the 62 symbols , hence ther are $62^6 \times 10^2$ possible passwords

Tutorial 359 Questions

1)By considering the angles between the vectors ,show that vector $\vec{a} + \vec{b}$ and $\vec{a} - \vec{b}$ are perpendicular when $|\vec{a}| = |\vec{b}|$

2)Find vector ,parametric ,and symmetric equation of the line -4x +6x +9 =0

3)Find the scaler equation of the plane that contains the intersecting lines(x-2)/1 =y/2 =(z+3)/3 and (x-2)/-3 =y/4 =(z+3)/2

4)A tangent to the parabola $y = 3x^2 - 7x + 5$ is perpendicular to x +3y -10 =0.Determine the equation of the tangent

By Mr.S.f.Xavier(teacher) tel 6473409490/4167322228

# இஸ்லாமும் பெண்களும்

## அறிவோம் இஸ்லாம்

**- பாத்திமா மைந்தன் -**

"இஸ்லாம் பெண்களை அடிமைப்படுத்து கிறது அவர்களுக்கு உரிமைகளை வழங்க மறுக்கிறது" என்ற கருத்துகள் பரவலாகப் பலராலும் முன் வைக்கப்படுகின்றன. இஸ்லாமிய சமூகத்தில் பெண்களின் நிலை என்ன என்பதை இங்கு விரிவாகக் காண்போம்.

உலகம் தோன்றியது முதல் இன்று வரை பெண்களை அடிமைப்படுத்தும் நிலை தொடர்கதையாய் தொடர்கிறது என்றால் அது மிகையல்ல. பெண்களை இழிவாக, குழந்தைகளைப் பெற்றுத்தரும் இயந்திர மாக, சுமையாக, சுகத்தைத் தரக்கூடிய போகப் பொருளாகப் பார்க்கும்நிலை எல்லாச் சமூகங்களிலும்இன்றும் நிலவுகிறது.

"பெண்களுக்கு ஆன்மா இல்லை" என்ற கருத்து நீண்ட காலமாக சொல்லப்பட்டு வந்தது. ஆனால் ஆண்களுக்கும் பெண் களுக்கும் இடையே இஸ்லாம் எந்தவித மான பாகுபாட்டையும் ஏற்படுத்தவில்லை.

"மனிதர்களே! உங்களை ஓர் ஆன்மாவில் இருந்து படைத்த அந்த இறைவனுக்கே பயப்படுங்கள். அந்த ஆன்மாவில் இருந்து அவன் அதனுடைய துணையைப் படைத் தான். பிறகு அவர்களில் இருந்து நிறைய ஆண்களையும் பெண்களையும் படைத் தான்". (திருக்குர்ஆன்-4:1) "அல்லாஹ் உங்களுக்காக உங்களில் இருந்தே மனை வியரை ஏற்படுத்தி இருக்கிறான். உங்க ளுக்கு உங்கள் மனைவியரில் இருந்து சந்ததிகளையும் பேரன் பேத்திகளையும் ஏற்படுத்தினான். தூய்மையான பொருட் களை உங்களுக்கு உணவாகக் கொடுத் தான்". (திருக்குர்ஆன்-16:72) ஆண்களுக்கு மட்டுமே ஆன்மா உண்டு. பெண்களுக்கு ஆன்மாவே கிடையாது என்கிற பாகுபாட்டை இஸ்லாம் பகுக்கவில்லை என்பதை மேற்கண்ட வசனங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

முதல் மனிதரான ஆதி நபி ஆதம் மற்றும் ஹவ்வா ஆகிய இருவரையும் சரி சமமாக வைத்தே திருக்குர்ஆன் பேசுகிறது. ஆணும், பெண்ணும் ஒரு மரத்தின் இரு கிளைகள். ஒரு தந்தை (ஆதம்), ஒரு தாய் (ஹவ்வா) ஆகியோரின் பிள்ளைகள் எனப் பறைசாற்றி யது, இஸ்லாம். இறைவன் முன்பு ஆணும், பெண்ணும் சமம் என்ற பிறப்புரிமையை திருக்குர்ஆன், பலதரப்பட்ட விடயங்களிலும் உறுதி செய்துள்ளது. அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படும் வணக்க வழிபாடுகளிலும் ஆணும், பெண்ணும் சரி நிகர் சமம் என் பதை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

"நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும் பெண்களும், உண்மையைப் பேசும் ஆண் களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், (அல்லாஹ் விடம்) உள்ளச்சத்துடன் இருக்கும் ஆண் களும் பெண்களும், அல்லாஹ்வை அதிக மதிகம் தியானம் செய்யும் ஆண்களும் பெண்களும்-ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் சித்தப்படுத்தி இருக்கின்றான்". (33:35)




சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட போது ஆதமுக்கும், அவருடைய மனைவி ஹவ்வாவுக்கும் சமமாகவே இறைவன் கட்டளை பிறப்பித்தான். "மேலும் நாம், "ஆதமே! நீரும் உம் மனைவியும் இந்தச் சுவனபதியில் குடியிருங்கள். நீங்கள் இருவரும் விரும்பியவாறு அதில் இருந்து தாராளமாய்ப் புசியுங்கள். ஆனால் நீங்கள் இருவரும் இந்த மரத்தை மட்டும் நெருங்க வேண்டாம். (அப்படிச் செய்தீர்களானால்) நீங்கள் அக்கிரமக்காரர்கள் ஆகிவிடுவீர் கள்" என்றும் சொன்னோம்" (2:35) என்று திருமறையில் இறைவன் கூறுகின்றான்.

ஆனால் ஹவ்வாவின் தூண்டுதலால்தான் ஆதம் (அலை) பழத்தைச் சுவைத்தார் என்று கூறப்படுகின்ற கருத்தைக் குர்ஆன் திட்டவட்டமாக மறுக்கிறது. இந்தக் கெட்ட எண்ணத்தைத் தூண்டியவன் ஷைத்தான் என்பதைத் தெள்ளத்தெளிவாக விளக்கு கிறது. "இதன்பிறகு ஷைத்தான் அவர்கள் இருவரையும் அதில் இருந்து வழி தவறச் செய்தான். அவர்கள் இருவரும் இருந்த (சொர்க்கத்)தில் இருந்து வெளியேறுமாறு செய்தான்". (திருக்குர்ஆன்-2:36)

இதன் மூலம் ஆதமின் மனைவி தானே, தனியாக அந்தப் பழத்தைச் சுவைக்கவும் இல்லை. சுவைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆதம் மனதில் ஏற்படுத்தவும் இல்லை. தவறு இருவர் மீதும் சமமாகவே இருந்தது என்பதே குர்ஆனின் கூற்றாக உள்ளது. இருவரும் தாங்கள் செய்த காரி யத்தை எண்ணி வருந்தி இறைவனிடம் பாவ மன்னிப்பு கோரி மன்றாடினார்கள்.

"எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து கிருபை செய்யாவிட்டால் நிச்சய மாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாக ஆகிவிடுவோம்" என்று கூறினார்கள். (திருக்குர்ஆன்-7:23) இன்னும் சில திருக் குர்ஆன் வசனங்கள் ஹவ்வா (அலை) அவர்களைவிட ஆதம் (அலை) அவர்களே வரம்பு மீறியதாகக் கூறுகின்றது. சொர்க்கத் தில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு ஹவ் வாதான் காரணம் என்ற கூற்றை மறுத்து ஆதம்தான் வரம்பு மீறியதாகத் திருமறை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது. "முன்னர் நாம் ஆதமுக்கு நிச்சயமாகக் கட்டளையிட்டிருந்தோம். ஆனால் (அதனை) அவர் மறந்துவிட்டார். (அக்கட்டளைப்படி நடக்கும்) உறுதிப்பாட்டை நாம் அவரிடம் காணவில்லை". (திருக்குர்ஆன்-20:115)

இன்னொரு குர்ஆன் வசனம் கீழ்க்கண்ட வாறு கூறுகின்றது: "ஆனால் ஷைத்தான் அவருக்கு (ஊசலாட்டத்தையும்) குழப்பத் தையும் உண்டாக்கி, "ஆதாமே நித்திய வாழ்வளிக்கும் மரத்தையும் அழிவில்லாத அரசாங்கத்தையும் உமக்கு நான் அறிவித் துத் தரவா?" என்று கேட்டான். பின்னர் (ஷைத்தானின் ஆசை வார்த்தைப்படி) அவ் விருவரும் அ(ம்மரத்)தினின்று புசித்தனர். உடனே அவ்விருவரின் வெட்கத்தலங்களும் வெளியாயின. ஆகவே அவ்விருவரும் சுவர்க்கத்துச் சோலையின் இலையைக் கொண்டு அவற்றை மறைத்துக் கொள்ளலா னார்கள். இவ்வாறு ஆதாம் தம்முடைய இறைவனுக்கு மாறுசெய்து அதனால் வழி பிசகி விட்டார்" (20: 120).

மேற்கண்ட வசனங்கள், முதலில் வரம்பு மீறியது ஆதம் தான் என்பதை தெளிவு-படுத்துகின்றது. இதன்மூலம் சொர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு ஆதாம்-ஹவ்வா இருவருக்கும் சமபங்கு என்று சொல்லி ஆதித்தாய் மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் திருக்குர்ஆன் துடைத் தெறிகிறது.

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

## வருடாந்த தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள் - 2018

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்தும் வருடாந்தத் தமிழ்மொழிக் கல்விசார் போட்டிகள். இப்போட்டிகள் யாவும் கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்களின் வாரிசுகள் மட்டுமே பங்குபற்றும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இடம்: **SAI CENTRE, 5321 Finch Ave. East, Scarborough, ON, M1S 5W2**

தொலைபேசி இலக்கம்: **(416)335-7242**

காலம்: பங்குனி 24, 2018 - சனிக்கிழமை, காலை 9:00 மணி
(Saturday, March 24, 2018 – 9:00 a.m.)

தமிழ்ப் பாடப் போட்டிகளுக்கான வயதெல்லை 06, 09, 12, 15, 18 வயதுக்கு உட்பட்டோர் பிரிவுகளாகவும், கணிதபாடம் தரம் 03, 04, 05, 06, 07, 08வரை ஒழுங்கமைத்து நடத்தப்படும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் காலை 8:30 மணிக்கு முன்பாக கட்டணங்களைச் செலுத்தி தமது பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும்.

கட்டண விபரம்:
* குடும்ப அங்கத்துவப் பணம் $15.00
* தமிழ்ப் பாடத்திற்கான கட்டணமாக ஒவ்வொரு பாடத்திற்கும் தலா $5.00ம் ஆகக் கூடுதலாக 3 பாடங்களுக்கு மட்டுமே அறவிடப்படும்.
* கணித பாடத்திற்கான கட்டணம் $5.00 தனியாக செலுத்துதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி பங்குனி 17, 2018 (Saturday. March 17, 2018)
சகல வயதுப் பிரிவினருக்குமான போட்டிகள் யாவும் காலை 9:00 மணிக்கு ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள:-
**போட்டிக்குத்தேவையான அனைத்து விடயங்களையும் Onlineஇலும் மேற்கொள்ளலாம். www.khcosa.ca**

திரு. ந. மகேந்திரன் - (416)616-4386
திரு. ஏ. ஜெயராஜா - (416)301-17333
திரு. R. மகேந்திரன் - (905)294-9670 - மின்னஞ்சல்: sudar.mahendran@gmail.com
திருமதி சி. நாமகள்தேவி - (416)283-1439 - மின்னஞ்சல்: namagalx5@gmail.com
திரு. நா. பாலகுமார் - (416)321-5522 - மின்னஞ்சல்: balashanthini@hotmail.com

## புலரவேண்டும் புரட்சியின் பூபாளம்

மல்லிகைபோன்ற பெண்கள்நல்
மதிப்புப்பெற்றிட வேண்டும்!
மங்கையரைக் கண்டவுடன்
மரியாதையேற்பட வேண்டும்!

பாதுகாப்புடன் பெண்கள்
பலதுறைகளிலும் பெண்கள்,
பாரதிகண்ட பெண்களாகப்
புதுமைகள் தோற்றுவிக்கப்
புலரட்டும் பூபாளம்!



பாத்திமா ஹமீத்

# பன்முக ஆளுமை நிறைந்த கமலா தம்பிராசா

- பார்வதி கந்சாமி -

வாழ்வைத் தொலைத்துவிட்டோம் என்று ஏங்கும் பலரிடையே வாழ்வை 'இன்றுமட்டும்' வாழ்ந்து விடுவோம்' என நிஜவாழ்வை வாழ்ந்தவர் கமலா தம்பிராசா. நாளை பற்றிய கவலைகளை அவர் வளர்த்துக் கொள்ளாமல் 'இன்று' என்ற கொள்கையுடன் இனிமையான வாழ்வை வாழ்ந்தவர். எப் பொழுதும் மலர்ந்த முகம், புன்சிரிப்புத் தவளும் உதடுகள், பார்வையில் தீட்சண் யம். கனவுலகில் சஞ்சரிக்காத வாழ்க்கை. இன்னா செய்யாமை, இன்னா செய்வாருடன் விலகி தனக்கென ஓர் இனிய நண்பர் வட்டத்தை உருவாக்கியவர்.

யாழ்ப்பாண நகரில் உள்ள வண்ணார் பண்ணையில் 12.05.1944 இல் பிறந்த கமலா, செல்லப்பிள்ளையாகப் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்தவர். இளவயதி லேயே சுகாதார பரிசோதகரான தந்தையை இழந்தார். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர் கல்வி கற்று 1960களின் முற்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரியானார். தாசீசியஸ், சிவானந்தன், முத்துலிங்கம், சண்முகலிங்கம், சந்திரசேகர், டானியல், தர்மலிங்கம், செல்வநாயகி, பத்மா, சின்னராசா போன்ற முற்போக்கு எண்ணங்கள் கொண்ட ஒரு கலைத்துறை மாணவ நட்புக் குழு அவரது பல்கலைக்கழக வாழ்க்கையில் கிடைத்ததும், முற்போக்கு எண்ணம் கைலாசபதி, இந்திரபாலா, வித்தி யானந்தன் பத்மநாதன் போன்றோரிடம் கல்வி கற்கும் பேற்றைக் கொண்டதும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூப வாஹினியில் இராஜசுந்தரம், விக்னேஸ்வரன் போன்றோரின் சிந்தனையுடன் இணைந்த நிலையும் அவருக்கான சிந்தனையில் செல்வாக்கை ஏற்படுத்தியிருந்தது.

சரோஜினி இராமலிங்கம், ரூபா சிவகுரு நாதன், பத்மா மகேஸ்வரன், செல்வநாயகி ஸ்ரீதாஸ், சாவித்திரி செல்லப்பா ஆகியோர் சங்கமித்தா விடுதியில் நண்பிகளா இருந் தனர். யோகா தில்லைநாதனும் இவருடன் படித்து வேலை செய்தவர்.

உயர் கல்விக் கூடங்களில் பல இன்னல் களை அனுபவித்தவர்கள் பலர். சிலர் வாழ் வில் பூதாகரமான பிரச்சினைகள் சக மாணவரின் பொறாமையாலும் விரிவுரை யாளர்களின் பாரபட்சங்களாலும் எழுந்துள் ளன. கமலா, மாணவ சங்க உபதலைமைக் குப் போட்டியிட்டபோது சகமாணவரின் கீழ்த் தரமான துன்பத்துக்கு ஆளானார். துவேசம் கலந்து கொடுத்த இந்த வேதனையால் வைத்தியசாலையில் மூன்று மாதங்கள்வரை சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. இதனால் பல்கலைக்கழக மேல்படிப்பின்மீது ஆர்வம் கொள்ள முடியவில்லை. பல்கலைக்கழகத் தில் முற்போக்கு எண்ணம் கொண்ட ஆசிரி யர்கள் இருந்தாலும் அவர்கள் மாணவர் மீதான முழுமைத்துவ அக்கறையை எடுக் காமை பெருங்குறையாகக் கூறவேண்டும். பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் பல் கலைக்கழகங்களில் மாணவர்கள்மேல் பார பட்சம் காட்டும் போக்கு இருந்துவந்துள்ளது. மாணவருக்கு தரம் (**Class**) கொடுப்பதிலும் அவர்கள் முன்னேற்றத்திற்கும் பாரபட்சம் தடையாக இருந்து வந்திருப்பதைப் பல் கலைக்கழகத்தில் பயில்வோருக்கு நன்கு பரிச்சியம். முதல் தரத்தில் சித்தியடை வோரை தடுத்து நிறுத்துவது, ஊர், சொந் தம் என்ற அடிப்படையில் தரம் உயர்த்தி பதவி வழங்குதல், ஊர் அடிப்படையில் தர உயர்வு வழங்காமை, சாதி, சமய அடிப் படையில் தர உயர்வோ, வேலை வாய்ப்போ வழங்காமை நிகழ்ந்துள்ளதை நாம் அனுபவ ரீதியாகவும் நண்பர்கள் மூலமும் கண்டுள்ளோம், கேட்டுள்ளோம்.



ஆலோசனைக்கு என நியமனம் இல்லாத அன்றைய பல்கலைக்கழகச் சமூகத்தில் பாதிக்கப்பட்ட மாணவர் பற்றிய உரையாடல் கள் ஆசிரியமட்டங்களில், குறிப்பாக இடது சாரிகள் என்று தம்மைப் பறைசாற்று வோரிடையேகூட இல்லை என்பது மாணவ ருக்கு அவர்கள் மீதான நம்பிக்கையை இழக்க வைத்துள்ளமை வரலாறு தெளிவு படுத்துகின்றது.

கமலா எதிர்நீச்சல் போட்டிருந்தால் ஒலிபரப் புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி போன்ற வற்றில் பெரும்பதவிகளைப் பெற்றிருக்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என கூறு வோர் 'பெண்' என்ற உருவம் எவ்வளவுக்குப் பின்தள்ளப்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்தவர் அல்லர். கிடைத்த பதவியைக் கூட தரத்தால் பெற்றதாகக் கூறமாட்டார்கள். 1965ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரை வெகுசன தொடர்புச் சாதனங்களுக் கான பணியைச் செய்த கமலாவுக்கு ஏன் உதவி கிடைக்கவில்லை, ஏன் பெரும்பதவி கிடைக்கவில்லை. பட்டதாரியானவர் இருக்க பட்டதாரி அல்லாதோர் பெரும் பதவிகளில் இருத்தப்பட்டது எவ்வாறு, ஊடகத்துறையில் அதிக ஆளுமை படைத்த கமலா ஊடக ஒலிபரப்பாளருக்கு அப்பால் ஏன் செல்ல முடியவில்லை? இந்த விரக்தியும் கனடா புலம் பெயர்வுக்கான காரணமா? சிங்கள சிநேகிதரால் காப்பாற்றப்பட்ட கமலா முகங் கொடுத்த 1983 கறுப்பு யூலையையும் அவரைப் புலம் பெயரச் செய்ததா?

இலங்கையில் இருந்தபோது கொழும்புதான் தொழில்ரீதியான இருப்பை கமலாவுக்கு வழங்கியது. ஈரானிய தூதரகத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணி புரிந்த கமலா பின்னர் ITN ஊடகத்திலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் இறுதியாக ரூபவா ஹினி ஒளிபரப்பிலும், கடமையாற்றினார். அவரை 'முதல் தமிழ் ஒளிபரப்பாளர்', 'முதல் பெண் ஒளிபரப்பாளர்', 'முதல் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்' என்றெல்லாம் அவரது நண்பர் வரதராஜா வர்ணித்திருந் தார். கனடாவிற்குப் புலம் பெயர்ந்த பின்னர் ஊடகத்துறையில் தேமதுரம், தமிழோசை, CTBC, கீதவாணி, TVIகளில் சேவை ஆற்றினார். ஏன் இவற்றில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஆண் ஒலிபரப்பாளர் விக்னேஸ்வரன், மதியழகன் தாக்குப்பிடித்த போது ஏன் கமலாவால் முடியவில்லை. அவரது சீவியத்துக்கான ஊதியத்தை கனடா ஊடகங்கள் வழங்க முடியவில்லை. ஊதியம் அற்ற பணியாகவே பலரும் பணிபுரிகின்றனர். கமலா வேலையும் செய்து ஊடகத்துக்கு உதவவும் முடியாத வேலைப் பழு அவருக்கு ஊடகத்துறையில் அதிக புலன் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டது. வேலை செய்யும் நேரங்களால் தொடர்ந்து ஊடக உதவிகளைப் புரிய முடியவில்லை. நிரந்தரமாக ஒரு நல்ல வேலை கிடைக்காது கஸ்ரடப்பட்டார். கனடாவின் பனித் தடங் களில் வாகனம் இல்லாது சறுக்குச் சவாரி செய்ய முடியாத துர்பாக்கிய நிலை கமலா வின் பிரயாணங்களைக் கட்டுப்படுத்தியது. முதியோருக்கு கனடாவின் ஊர் சுற்றுப் பிரயாணத்தை அடிக்கடி ஒழுங்கு செய்த கமலாவுக்கு தொலைக்காட்சி, வானொலி களுக்குத் தொடர்ச்சியான சேவையை வழங்க முடியவில்லை.

விக்னேஸ்வரன், மதியழகன், வரதராஜா, முருகபூபதி போன்ற ஊடகவியலாளர்கள் கமலாவின் நண்பர்கள். செய்தி சேகரிப் பிலும் அரசியல் அறிவிலும் கமலாவுக்கு சிறந்த ஞானம் இருந்தாகக் கூறப்படுகிறது. அனிசேரா மகாநாட்டின் உச்சி மகாநாட்டுக் கும் அமைப்புக் கூட்டங்களுக்கும் சமூகம் அளித்திருந்தார். காவலூர் இராசதுரையால் எழுதப்பட்ட 'பொன்மணி' என்ற படம் தர்ம சேன பத்திராஜாவால் இயக்கப்பட்ட படத்தில் முக்கிய பாத்திரமாக நடித்தார். வீரகேசரியும் கமலாவின் வாழ்வில் முக்கியமாகக் கூறப்பட வேண்டியது. சிவநேசச்செல்வன், சிவப் பிரகாசம் ஆகியோர் அவரின் அனுசரணை யாளர்களாகச் செயற்பட்டனர்.

முதியோருடன் அன்னியோன்யமாகப் பழகும் கமலா ஒரு காலகட்டத்தில் அவர்களுக்குச் சுற்றுலா ஒழுங்குகளை ஏற்படுத்தி இணைப் பாளராகப் பல இடங்களைப் பார்க்கும் வாய்ப்பையும் பெற்றார். அவர் தன்னை அழகாகவும் மெருகூட்டியும் வைத்திருந்தவர். பல்கலைக்கழகத்தில் இரட்டைப் பின்னல். கமலாவின் காலத்துத்து தமிழரிடையே தலைமயிரை கட்டையாக வெட்டியவர்களை கொழும்பில் காண்பது அரிது. கமலா அழகான பொப் வெட்டு வெட்டி கருப்புப் பொட்டிட்டு, தூக்கணம் மாட்டி அழகான சேலை அழகாக உடுத்தி இருப்பார். இது அவரது புரட்சிப் போக்கை காட்டுவதாக அமைகின்றது.

கமலாவைப் பற்றி வரதராஜா, முருகபூபதி ஆகிய ஊடக நண்பர்களின் எழுத்துக்கள் வாசிக்கப்பட வேண்டியவை. அவர் கொழும் பில் ரூபவாஹினியில் வேலை செய்தபோது வெடித்த இனப்படுகொலையின்போது சிங்க ளத் தோழமையால் பாதுகாக்கப்பட்டார். பிற் காலத்தில் அவர் சிங்கள, பேகர், முஸ்லீம் சமூகத்துடனான நட்பை வளர்த்துக் கொண் டார். கனடாவிலும் நீண்டகாலமாக வெலஸ்லி வீதி மாடிக் குடியிருப்பில் இருந்தமையினால் பல்லின மக்கள் நட்பையும் பெறும் பாக்கியமும் கிடைத்தது. எனது கணவர் ரொறன்ரோ வந்தபோது நண்பர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என யாரையோ கூட்டி வரச் செய்து எனது கணவரைப் பார்க்க எற்றோபிக்கோவுக்கு வந்து சென்றார். ஜானகி பாலகிருஷ்ணனுடனும் பெரும் நட்புப் பூண்டிருந்து இலங்கைக் குடும்பங்களுக் காகவென ஆரம்பிக்கப்பட்ட சங்கத்திலும் அங்கத்தவராக இருந்தார். குரல் ஒவியமான கமலாவுக்கு எழுத்திலும் ஆர்வம் இருந்தது. வீரசேகரி வெளியீடுகளாக 'நான் ஒரு அநாதை' என்ற நாவலையும் ஒரு சிறு கதைத் தொகுப்பையும் வெளியிட்டார்.

நல்ல ஒரு ஜீவன்! இரத்தப்பலியெடுத்த 1983 இலிருந்து தப்பி வந்து புகலிடம் கொடுத்த கனடாவில் இறுதிக் காலத்தில் நோயால் அவதியுறவேண்டிய கொடுமை நிகழ்ந்தது துரதிஷ்டமே! நோயற்ற வாழ்வு வேண்டும் என முனைப்புடன் முயன்ற கமலாவுக்கு மாற்ற முடியாத தீராத கொடிய நோய் வந்து அவரை எம்மை விட்டுப் பிரித்துள்ளது. அவரது நினைவுகளும், குரல் இனிமையும், முதியோர் மீதான பற்றுதல் நெஞ்சமும் எம்முடன் கமலாவைப் பிரியவிடாத தடங்களாக இருக்கின்றன!

## காப்புறுதி...

18 ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரிவிலிருந்து நட்டாடு எப்படி வழங்க வேண்டும் என்பது சட்ட நியதியாகும்.

ஒவ்வொரு பிரிவினையும் கம்பனிக்குள் உள்ள ஒவ்வொரு சிறு பண பெட்டகம் என கருதலாம்.

நாம் அனைவரும் சேர்ந்து சிறு சிறு தொகையாக காப்புறுதி கம்பனிக்கு செலுத் தும் மாத கட்டுப்பணம், ஒப்பந்தத்தில் உள்ள பிரிவுகள் என குறிப்பிடப்படும். ஒவ் வொரு பண பெட்டகத்தினுள்ளும் முதலிட்டு வளர்த்து எடுக்கப்படுகின்றது.

பாதிக்கப்படும் போது, அவ் ஒவ்வொரு பெட்டகத்திலிருந்தும் நட்டஈடாக வழங்கப்படு கின்றது.

• அவரவர் காப்புறுதி கம்பனிகள் ஒருவரை யறை மட்டும் முதலில் உடல் காயத்திற்கு நட்டாடு வழங்குவார்கள். (Statutory Accident Benefits)

உடல் காயம் என்பது நிரந்தரமாக வாழ் வினை முடக்குமாகவிருந்தால், தப்பு என்பது தங்கள் பக்கமும் இல்லையேல் மற்ற சாரதி யின் காப்புறுதி கம்பனியில் வழக்கு தொடர் ந்து நட்டஈடு பெறுவது இரண்டாவது வழி!

ஆனால் மற்ற வாகன சாரதி அடையாளம் தெரியாமல் தப்பி ஓடி விட்டால் நிரந்தரமான உடல் காயத்திற்கு எப்படி நட்டஈடு பெறுவது?

சரி! அடையாளம் காணப்பட்டால் அவரின் பொறுப்பு காப்புறுதி (Liability Vocoverage) போதாது என்றால் என்ன செய்வது? வழக்கு தொடர்வதற்குரிய செலவு? அலைச்சல்கள்? காலதாமதங்களின் கடுமைகள் எப்படியிருக்கும்?

இவை எல்லாவற்றுக்கும் தீர்வாக தங்களு க்கோ அல்லது குடும்பத்தவர்களுக்கோ பாதிப்பு விபத்தினால் ஏற்படும்போது வினா வில் கேட்கப்பட்ட பிரிவிலிருந்து தங்கள் கம்பனி ஒரு மில்லியன் வரை நிவாரணம் வழங்க தயாராக உள்ளது. அந்த பாதுகாப் புக்காகவே இந்த பிரிவு சேர்க்கப்படுகின்றது.

# அரண்...

## 26 ஆம் பக்கத்தொடர்ச்சி

மூலமா உயிரைக் கூட இழந்துருக்காங்க. அந்த மாதிரி நிலை பர்தா போடுகிற பெண் களுக்கு வந்ததில்லை மடம். கிளாஸ் ரூம்ல கூட பசங்க என்ன மாதிரி பர்தா போட்டு வர்ற பொண்ணுங்கள்ட கண்ணியமா தான் பேசுவாங்க மடம்.. எங்களை கிண்டல் பண்றதெல்லாம் கிடையாது. இதுதான் மடம் நான் சொன்ன கண்ணியம்,'என்று பாத்திமா பர்தாவின் சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

'வாவ்.. இட்ஸ் இண்ட்ரஸ்டிங்க்... பட்.. முகம், இரண்டு கைகளை மட்டும் தெரியும் அளவிற்கு ஆடை அணிவதுதான் பர்தாவின் வரைமுறைனு சொல்ற.. நாம நோர்மலா அணியுற சுடிதார்கூட அந்த மாதிரி தான் இருக்கு.. அதையே கவர்ச்சி இல் லாமே அணியலாமே..? எக்ஸ்ட்ரா எதுக்கு அந்த பர்தா? என்று ஹெச்.ஓ.டி கேட்ட யதார்த் தமான கேள்விக்கு, 'நீங்க கேட்பது சரிதான் மடம்... பர்தாவுல கண்ணியம் மட்டும் இல்லை, பாதுகாப்பும் இருக்கு மடம். பெண்கள் டூ வீலர்ல போறப்ப புடவையின் முந்தானை, துப்பட்டா சக்கரத்துல சிக்கி எத்தனையோ விபத்துகள் ஏற்படுது, அது போல காற்றில் பறக்கும் தலைமுடிகள் முந்திச் செல்லும் வாகனங்களில் சிக்கி விபத்து ஏற்படுகிற நிகழ்வுகளும் கூட நடக்கத்தான் செய்கிறது. பர்தா அணிந்து போகும்போது இதுமாதிரியாக விபத்துகள் ஏற்படுவதற்கு சான்ஸ்சே இருக்காது மடம்.. இதுமட்டுமில்லாம, எத்தனையோ வழிப்பறி கொள்ளைகள் நாட்டுல நடக்குது, தெருவில் நடந்து போகும் பெண்களின் கழுத்துல இருக்கிற நகைகளை பைக்கில் வந்து அறுத்துட்டுப்போகிற சம்பவங்கள் தினசரி நடக்கிறது, பர்தா போட்றதுனால நமது கழுத்து பகுதிகளும் முழுவதும் மறைஞ்



சிருக்கும், சோ.. இந்த மாதிரி வழிப்பறி பண்ணவே முடியாது. வழிப்பறிக்கு பயந்தே நிறையப் பேர் நகை அணியவே பயப்பட் றாங்க, ஆனா வெளியில் போகும் போது நகைகளை அணிந்து பர்தா போட்டு மறைப்பதால் பாதுகாப்பை உணர முடியுது மடம்...' என்று சிறிதும் திணறாமல் சட்டென பதிலளித்தாள் பர்தாவின் சிறப்பை நன்கு அறிந்து வைத்திருந்த பாத்திமா.


'வெரி நைஸ் பாத்திமா... பர்தா பெண்ண டிமைத்தனத்தின் வெளிப்பாடுனுதான் நான் நெனச்சிக்கிட்டு இருந்தேன். ஆனால் இப்போ பர்தா பெண்களை கண்ணியப்படுத் துதுனு நீ சொன்ன கருத்தோட நானும் உடன்பட்றேன். பட் மத அடையாளங்கள் கல்லூரிக்குள் இருக்கக்கூடாதுனு பிரின்ஸ் பால் சொல்றாங்களே...'

'முஸ்லிம் ஸ்டுடண்ட்ஸ் பர்தா போடக்கூடா துனு ஒரு ரூல்ஸ் வரப்போறதுக்கு எத்த னையோ காரணங்கள் சொன் னீங்க. மத அடையாளங்கள் கல்லூரிக்குள் இருக்கக் கூடாதுனு சொல்றீங்க. ஆனா எல்லா இந்து ஸ்டுடண்டும் அவங்க மத வழக்கப் படி பொட்டு வைச்சுட்டுதான் காலேஜ்க்கு வர்றாங்க. அதை யாருமே மத அடையாள மாக பார்க்கிறதுல்ல. பர்தாவை மட்டும் மத அடையாளமா பாக்குறது பாபாரபட்சம்தானே மேடம்..? நமது இந்திய சட்டமே அவரவர் விரும்பிய மத பழக்க வழக்கத்தை பின்பற்ற முழு உரிமையும் வழங்கியிருக்கும்போது நம்ம காலேஜ்ல இந்த மாதிரி ரூல்ஸ் வரப் போறது எந்த விதத்திலும் நியாயாம் இல்லை மேடம். அடுத்து பர்தா அணிவதை மூடப்பழக்கம்னு சொன்னீங்க. மூடப்பழக்கமா இருந்தா அது முன்னேற்றத்திற்கும், வெற்றிக் கும் தடையா இருக்கும். ஆனா பர்தாவால எந்த முன்னேற்றமும், வெற்றியும் பாதிப் பதில்லை மடம். தவக்குல் கர்மான் என்கிற அரேபியப் பெண் நோபல் பரிசு வாங்குற அளவுக்கு சாதிச்சுருக்காங்க. அவங்க எப் போதும் பர்தாவோடதான் தன் னோட பணி களில் ஈடுபட்ருக்காங்க. அவங்க முன்னேற் றத்திற்கு பர்தா ஒருபோதும் தடையா இருந்தது இல்லை. அவங்களை மாதிரி எத்தனையோ பெண்களைப் பத்தி சொல்லிக்கிட்டே போகலாம் மடம்...'

'தங்க்யூ பாத்திமா... என் மனசுல ஒரு தெளிவு பிறந்துருக்கு.. பர்தாவுக்கு பின் னாடி இவ்வளவு விடயங்கள் இருக்குதுனு தெரிஞ்சுக்காம இத்தனை நாளா பிற்போக் குத் தனமா இருந்துட்டேன்.. பர்தாவை விமர்சிக்கிறதுதான் முற்போக்குத் தனம்னு நெனச்சது எவ்வளவு பெரிய தப்புனு இப்பத் தான் புரியுது. நல்லவேளை பாத்திமா உன்னை அழைத்து பேசியது நல்லதாப் போச்சு. இல்லைனா பிரின்ஸ்பால் கொண்டு வரப் போறதா சொன்ன ரூல்ஸ்க்கு நானும் ஓ.கே. சொல்லிருப்பேன் யூ டோண்ட் வொரி பிரின்ஸ்பாலிடம் எல்லாத்தையும் எடுத்துச் சொல்லி இந்த புது ரூல் வராம பாத்துக் குறது என்னோட பொறுப்பு உன்னை கண்ணியப்படுத்துற பர்தாவுக்கு இன்னேல இருந்து நானும் சப்போர்ட்' என்று ஹெச். ஓ.டி சொல்லியதைக் கேட்டு சந்தோசமாக 'தங்க்யூ மடம்' என்று சொல்லிச் சென்ற பாத்திமா அணிந்திருந்த பர்தாவில் ஒரு பாதுகாப்பு அரண் இருப்பதாக உணர்ந்தார் ஹெச்.ஓ.டி திலகவதி.







# யார் துறவி?

## - மங்களேஷ் சிவா -

புத்தனாவது சுலபம் ஆனால் புத்தனின் மனைவியாய் இருப்பது? புத்தர் ஞானம் பெற்றதும் தன் மனைவி குழந்தையை பார்க்கப் போகிறார். மனைவி கேட்கிறாள் "என்னை விட்டுப் போனது பரவாயில்லை. ஆனால் என்னிடம் சொல்லிவிட்டு போயிருக்கலாமே நான் ஒன்றும் உங்களைத் தடுத்திருக்க மாட்டேன். ஆனால் நீங்கள் என்னை நம்பவில்லை என்ற நினைப்பே என்னை இத்தனை காலமும் மிக நோகடித்து விட்டது. ஏன் என்னை காயப்படுத்தினீர்கள்."?



புத்தர் அவளிடம் மன்னிப்பு கேட்டு விட்டு தான் பயந்தது அவளை அல்ல, தன்னைத் தான் என்கிறார். மனைவி மகனின் முகம் பார்த்தால் தான் உறுதி குலைந்து அங்கேயே தங்கிவிடுவேன் என பயந்ததாய் கூறுகிறார். அடுத்து அவர் மனைவி மிகச் செறிவான ஒரு கேள்வி கேட்கிறாள்.

அது இதுதான் "நீங்கள் இந்த அரண்மனையைவிட்டு போகாமல் இங்கேயே தங்கி இருந்தால் ஞானம் பெற்றிருக்க முடியாதா? புத்தர் சொல்கிறார் "தாராளமாக" அதற்கு நான் மலை காடு ஆசிரமங்கள் எல்லாம் தேடி அலைய வேண்டியதில்லை தான். ஆனால் இங்கிருந்து ஓடிப்போகும் போது நான் அதை அறிந்திருக்கவில்லை. உண்மையில் எங்கிருந்தாலும் எனக்கு இந்த ஞானம் கிடைத்திருக்கும். இடம் பொருட்டே அல்ல.

புத்தனின் வாழ்க்கையை போற்றும் யாரும் அவர் மனைவி யசோதராவைப் பற்றிப் பேசு வதே இல்லை. புத்தர் போனது போல் யசோதரா ஒரு நள்ளிரவில் வெளியேறி இருந்தால் இந்த உலகம் ஒப்புக்கொண்டிருக்குமா? ஓடுகாலி என்று சொல்லியிருக்கும். சரி, புத்தர் போன பின்பும்தான் என்ன செய்தது? அவளை வாழாவெட்டி என்றது. அப்படி ஒன்றும் வயதாகிவிடாத அழகு மங்கை. ஒற்றைக் குழந்தை ராகுலன். விடுமா ஆண்வர்க்கம் சாதாரணமாய் இருந்தாலே விடாது. உரிமையாய் ஒரு இராச்சியம் வேறு, எவ்வளவு போராடியிருப்பாள்? புத்தர் போனதும் தன் தலையை மழித்துக் கொண்டாள். ஒற்றைப் பிள்ளையின் அப்பா எங்கே எனும் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமலேயே பதின்வயது வரை வளர்க்கப்போராடினாள்.

எல்லாவற்றையும் துறந்து எத்தொல்லையும் இல்லாமல் துறவியானான் புத்தன். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு எல்லாத் துயரையும் அனுபவித்தபடி துறவியாய் வாழ்ந்தாள் யசோதரா. சொல்லுங்கள் யார் துறவி இப்போது?

படித்ததில் சிந்திக்க வைத்த பதிவு இது.

# பெண்ணுலகம்



இன்னுலகை இயற்கையினை இறையருளின் சக்தியினை
இனிய தாயாய்ச்
சென்னியிலே வைத்தேற்றிச் சீராட்டும் ஆடவர்கள்
சிறுமை கொண்டு
வன்முறையால் ஆதிக்க வலையிட்டு மெல்லியரை
வதைத்தல் இன்றும்
துன்பியலாய் முடிவற்ற தொடர்கதையாய்ப் போவதுவே
துயர மன்றோ!

எடுத்ததுவோ பெண்ணென்ற ஏற்றமிகு பிறப்பென்பார்
இதனை யன்றி
எடுப்பதற்குத் தனக்கெனவே எப்பொருளும் இல்லாது
உயிரைக் கூடக்
கொடுப்பதற்கே பிறப்பெடுத்த குலமாகிக் குவலயத்தைக்
கொழிக்கச் செய்தோர்
துடுப்பிழந்த படகாகித் துயர்கடலிற் தத்தளித்துத்
துடித்தல் நன்றோ!

பட்டங்கள் பெற்றென்ன சட்டங்கள் செய்தென்னப்
பதவி கொண்டு
திட்டங்கள் வகுத்தென்ன திறனாற்றல் வளர்த்தென்னத்
தீயோர் செய்யும்
கொட்டங்கள் அறுத்தென்ன கொடிகட்டி உயர்ந்தென்னக்
குடும்ப மென்னும்
வட்டத்துள் மங்கையர்தம் வாய்பொத்தி அடிமையென
வாழ்கின் றாரே!

பெண்ணாகப் பிறக்கவொரு பெருந்தவமே வேண்டுமென்பர்
பெண்கள் தங்கள்
கண்ணுக்கும் காமத்தின் இச்சைக்கும் விருந்தென்றே
கருதும் ஆண்கள்
மண்ணுலகம் வளம்பெற்று மானுடமே செழிப்புற்று
மலரச் செய்த
பெண்ணுலகம் வாழ்ந்தாலே பேருலகம் நிலைக்குமெனப்
புரிதல் வேண்டும்!

- மாவிலி மைந்தன் -
சி.சண்முகராஜா




நகைச்சுவைத் தொடர் 369

# மாசம்மா ராச்சியம்


கலகலப்பு தீசன்



"காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளம் கவர் கள்வன்"
"செத்தாரெலும் பணிவான் திரு
கேதீச்சரத்தானே....கேதீச்சரப்பதிகம்"
இந்தக் கதை எல்லாம் இறைவனைப்பற்றியது தான்.



இறந்தவர்களது எலும்பணிந்தவன் எங்கள் சிவன், என சமயபாட ஆசிரியர் சிவனையும் சுடலையையும் கண்முன் கொண்டுவந்து நடத்திய சமய பாடம் உலகரின் கண்முன்வந்தது.




சிரிப்பாகவும் இருந்தது. ஆனால் தமிழகத்தில் மனித எலும்புகள் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட செய்தியைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது! உடல் உறுப்புக்களை திருடினார்கள்.. திருடுகிறார்கள்... திருடுவார்கள்... இப்போ மனித எலும்புகளை திருடுகிறார்கள்.



இப்போதுதான் விளங்குகிறது பலர் ஏன் முதுகெலும்பில்லாமல் வாழ்கிறார்கள் என்று... முதுகெலும்பை யாரோ திருடிவிட்டார்கள். தைரியமாகச்சொல் நீ மனிதன்தானா?

உறைபனி கரைந்துவிட்டது. சூரியஒளி பிரகாசம். 15, 20 கிலோ உடைகளை தாங்கமுடியாமல் சென்றவர்களெல்லாம் கலகலப்பாக வீதிகளில்... ஆனால் ஐபொட் அகிலாண்டேஸ்வரி மட்டும் ஜெயலலிதாவின்... மன்னிக்கவும் அம்மாவின் சிலை அமைப்பாக அமையவில்லையென அரசல் புரசலாக கேட்ட சசிகலாவின் அகோர முகம்போல் இருந்தது. (அதாவது வழமையான முகம் போலிருந்தது) முகத்தின் அழகு வட்ஸ்அப்பில் தெரியும்.

வழமைபோல் சர்வதேச மகளிர் தினத்திற்கு போவதற்கு 2..3..மேக்கப் செய்யும் இடங்களுக்கு தொலைபேசியில் கதைத்தபொழுது ஸ்கைப்கில் கதைக்கச் சொன்னார்கள் ஐபொட் அகிலாண்டேஸ்வரியை.




ஓ.கே அன்ரி உங்களுடைய டோட்டருக்கா அல்லது உங்கடை கிறான்ட் டோட்டருக்கா எனக்கேட்டதும் அதுவும் ஸ்பீக்கரில் எல்லோரும் கேட்டதும் உடனே கொலக்சன் ஏஜென்சியின் லைன் கட் பண்ணுவது போல கட் பண்ணிவிட்டா. மேக்கப் இல்லாமல் மகளிர் தினத்திற்கு எப்படிப்போவது.? ஆட்டிலறி அன்னம்மாவிற்கும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கும் உதட்டளவில் வந்த சிரிப்பை உள்ளடக்கி கொண்டனர்.


ஒருமுறை செக்கண்ட் புளோர் செல்லம்மா தனது உறவினரின் அந்தியேட்டிக்கு புறப்படும்போது ஹாய் செல்...! அதாவது இடையிடை ஐபொட் அகிலாண்டேஸ்வரி என்பதை அகிலா என்று கூப்பிடுவதற்காக செக்கண்ட் புளோர் செல்லம்மாவை ஹாய் செல் என்று அழைப்பது வழக்கம்..



ஹாய் செல் எங்கை போறதெண்டாலும் மேக்கப் பேசியல் செய்யாமல் போகக்குடாது. எங்களை ஓல்ட்! ஐ மீன் சீனியர் சிற்றிசன் எண்டு நினைப்பினம். என்று சொல்ல...

ஆட்டிலறி அன்னம்மா சொன்னா...ஓம் செல்..லு....அந்தியேட்டிக்கு அள்ளி அப்பிக்கொண்டு போ... வட்ஸ்அப் வரதனையும் கூட்டிக்கொண்டு போ. உடனை படம் பிடிச்சு வட்ஸ்அப்பிலை போடு... என்று சொல்லிக்கொண்டு உலகரைப்பார்த்தா? உலகர் அர்த்தத்தோடு ஆட்டிலறி ஆட்டிலறி அன்னம்மாவைப் பார்த்தார். உலகர் சிரித்தால் ஆயிரம் அர்த்தங்கள். சிரிக்காவிட்டால் பல்லாயிரம் அர்த்தங்கள். அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்.

ஜெயலலிதாவின் சிலை செய்த செலவென்ன? அரச பணமா? அல்லது அப்பிடி இப்பிடி சேர்த்த பணமா? என எதிர்க்கட்சிகள் விரைவில் அறியத்தருவார்கள். தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா



பேஸ்புக் பேரம்பலம் யார் யாரோ கதைத்த தகவல்களையெல்லாம் தான் ஆராய்ச்சி செய்வதுபோல கதைப்பார். சிலவேளைகளில் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ட்றம்ப் போல முரட்டுத்தனமாகவும் முரண்பாடாகவும் கதைப்பார். இது உலகருக்கு பிடிப்பதில்லை.




இது லண்டன் மணிக்கூட்டு கோபுரம். அது தாஜ்மகால். இது இத்தாலியிலே கட்டடேக்கை சரிந்த பீசா கோபுரம். இதெல்லாம் உலக அதிசயம் என சொல்லிக் கொண்டிருந்தபொழுது... உலகர் கேட்டார், வரதர் தஞ்சாவூரிலையுள்ள தஞ்சைப் பெரிய கோவில் 18ஆம் நூற்றாண்டில் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. அங்குள்ள லிங்கத்தின் உயரம் 12 அடி. லிங்க பீடம் 18 அடி. 5000 யானைகள் இதனைக்கட்ட பாவிக்கப்பட்டது. 30 வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது. இன்றுவரை அசையாமல் அப்படியே இருக்கிறது. உலக அதிசயத்தில் இது இல்லையென பொரிந்து விழுந்தார். இவற்றை கவனிக்காது ஸ்ரீதேவியின் பழையபடங்களை தனது லப்ரொப்பில் பார்த்துக் கொண்டிருந்தார் வட்ஸ்அப் வரதன்.




பிறப்பு என ஒன்றிருந்தால் மரணமும் இருக்கும். இது இயற்கை. அன்று விஞ்ஞானம் வளராத காலம் கிராமங்களில் மரணம் சம்பவித்தால் பிரேத பரிசோதனை யில்லை. ஆனால் பிரேதத்திற்கு தான் சோதனை. வீட்டுக்கு வெளியே தற்காலிக பந்தலமைத்து மழையோ வெயிலோ 2, 3 நாட்கள் பிரேதம் மூச்சடங்கி இருக்கும். உறவினர்கள் முக்கியமாக ஊன் உறக்கமின்றி மூச்சுவிடாமல் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பார்கள். யாரோ வெளியூரிலிருந்து வரவேண்டியிருக்கும். உடன் வரவும் என ஒரு தந்தி. வருபவர் ரெயின் அல்லது பஸ்ஸில் யாருக்கு என்ன நடந்தது என்ற யோசனையில் செத்துப் பிழைத்துத்தான் வருவார். ரெலிபோன் வசதிகளில்லை.





இன்றைய காலம்போல் இறுதி மூச்சு இன்ரநெற்றிலும் சுற்றம் சூழ வளைத்துக் கட்டிநின்று அழுவதையும் வாய்க்கரிசி போடுவதையும் வட்ஸ் அப்பிலும் கொள்ளி வைப்பதை ஸ்கைப்பிலும் பார்க்கும் காலமல்ல. இறந்தவர் இறைவனடி சேருமுன் எத்தனை வதந்திகள், கட்டுக்கதைகள்?



அண்மையில் திருமண வீட்டிற்கு துபாய் சென்ற பிரபல நடிகை ஸ்ரீதேவியின் திடீர் மரணம் கலை உலகை சினிமா ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அவரது உடல் துபாய் சட்டவிதிகளுக்கமைய விசாரணை பிரேத பரிசோதனை முடிந்து வருவதற்குமுன் ஊடகங்கள் வலையத்தளங்கள் பேஸ்புக் அதுஇது என தங்கள் கருத்துக்களை அப்பிடி இப்பிடியென பரவவிட்டுள்ளன. உலகம் ஆயிரம் சொல்லட்டுமே......




ஞாபகம் இருக்கிறதா? மார்ச் 1...15.



1. மாசி மகம்.

1. சுவிற்சலாந்தில் பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்பிளின் கல்லறையிலிருந்து அவரது உடல் திருடப்பட்டது.



1. மார்ச் எம்.கே. தியாகராஜ பாகவதர் நினைவு தினம் 1981 (மன்மத லீலையை வென்றார் உண்டோ...சொப்பன வாழ்வில் மகிழ்ந்தேன்.



2. விவியன் நமசிவாயம் பிறந்தநாள். இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் நிகழ்ச்சி தயாரிப்பாளர். (1921-1988) விவேகச்சக்கரம், விண்வெளி வினோதம், விவசாய நேயர் விருப்பம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தியவர்.



2. நா.சிவலிங்கம் நினைவுதினம். (2010) றிச்மன்ட் ஹில் இந்து ஆலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து இறுதிவரை பங்குகொண்டவர்.

2. குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் இசைக்கலைஞர் பிறந்த தினம். (1935-2008)




3. அலெக்சாண்டர் கிரகாம் பெல் பிறந்ததினம். (1847-1922) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர். (அவரது தாயாரும் மனைவியும் செவிப்புலனற்றவர்கள். அதுவும் இவரின் ஆய்வுக்கு காரணம். பிறந்தது பிரிட்டன் வாழ்ந்தது கனடா.



3. சிரித்திரன் ஆசிரியர் யாழ். கரவெட்டி சிவஞான சுந்தரம் நினைவுதினம். (1996) சவாரித்தம்பர் (சுந்தர்) வீரகேசரி, மித்திரன் பத்திரிகைகளில் இவரது கேலிச்சித்திரங்கள் பிரபலமானவை..




7. ஆசுகவி ஈழத்து எழுத்தாளர் கல்லடி வேலுப்பிள்ளை நினைவுதினம். (1860-1944)





8. 1945இல் கனடாவில் அனைத்துலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

10. 1876இல் அலெக்சான்டர் கிரகாம் பெல் உலகின் முதலாவது தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.




11. 1902இல் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரிவரை 21 மைல் நீள புகையிரதப்பாதை போடப்பட்டது. 1905இல் மதவாச்சிவரை நீடிக்கப்பட்டது.

11. உலக சிறுநீரக நாள்.



11. நேரமாற்றம்.

MAHAJANAN CONTEST 2018
SUNDAY, MARCH 04, 2018 @ 9:30am

# Legal Basement Consultant



✓ நீங்கள் புதிதாக Legal Basement செய்ய விரும்புகிறீர்களா?

✓ உங்களது வீட்டிலுள்ள பழைய Basement ஐ legalize செய்து சட்டரீதியாக அதிக வாடகைக்குவிட அல்லது உங்கள் வீட்டை அதிக விலைக்கு விற்க விரும்புகிறீர்களா?

✓ Municipal laws , bylaws மற்றும் Ontario fire code பற்றித் தெரிய வேண்டுமா?




உங்களுக்காகவே தமிழில் WORHSHOP நடைபெறவுள்ளது.

20 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும். உங்கள் பெயரை பதிவுசெய்து நடைபெறும் இடத்தையும் நேரத்தையும் அறிந்துகொள்ள அழையுங்கள்

**Tel: 416-553 8902**

email : legalbasement@gmail.com

✓ Want to build a Legal Basement

✓ Need to Legalize your existing basement!!

✓ Need an Advise to buy a Home with Legal basement!!!

✓ Call me in order to save $1000's of your Dollars!!!!

**We also Providing Interior Designs and Staging Ideas**


# மண்ணைவிட்டே ஒழித்திடுவோம்!



மங்கையவள் இல்லை எனில்
மாநிலமே இல்லை என்பார்
சங்கெடுத்து முழங்கி நிற்பார்
சகலதுமே மங்கை என்பார்

எங்களது வாழ்க்கை எலாம்
மங்கலமே மங்கை என்பார்
பொங்கி வரும் புத்துணர்வே
மங்கை அவள் தானென்பார்

கங்கை முதல் காவிரியை
மங்கை என விழித்திடுவார்
எங்கள் குலம் விளங்குதற்கு
வந்தவளே மங்கை என்பார்

பூமிதனை மங்கை என்பார்
பொறுமையையும் மங்கை என்பார்
சாமிகூட மங்கை என்று
சபையேறி முழங்கி நிற்பார்

என்றெல்லாம் சொல்லும் மங்கை
எங்கு சென்று நின்றாலும்
அங்கெல்லாம் அவள் நிலையை
ஆருக்கு சொல்லி நிற்போம்

தேசபிதா காந்தி மகான்
சிலை எங்கும் இருக்கிறது
சீலநிறை மங்கை அவள்
தெருவில் வர அஞ்சுகின்றாள்


சீதை கதை படிக்கின்றார்
கீதை தனைக் கேட்கின்றார்
பாதை மட்டும் மாறாமல்
படு குழியை வெட்டுகின்றார்

பாதகங்கள் செய்து நிற்பார்
பல்கி எங்கும் பரவுகிறார்
கோவில் என்றும் பாராமல்
கோரத் தனம் செய்கின்றார்

வீதி தனில் போவோரும்
விலத்தியே நிற்கும் நிலை
சாதகமே எனக் கருதி
சமூக நீதி குலைக்கின்றார்

சமயங்கள் பல இருந்தும்
சாத்திரங்கள் பல இருந்தும்
சன்மார்க்கம் ஏன் தானோ
தலை குனியப் பார்க்கிறது
மங்கை அவள் எங்களது
மாநிலத்தில் தெய்வம் என
மனம் எல்லாம் எண்ணுதற்கு
வழி சமைப்போம் வாருங்கள்


மங்கை அவள் தனைக்காக்க
மா எழுச்சி வரவேண்டும்
மங்கை நலம் கெடுப்பாரை
மண்ணை விட்டே ஒழித்திடுவோம்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா


பரதநாட்டிய வகுப்புகளுக்கு அழையுங்கள்

NIRUTHYA KALASHESTHIRA DANCE ACADEMY





Smt. Selvananthy Sukummar



M.A. IN DANCE (Annamalai University),
Nattuvanga Kalaimani (Annamalai University)
Dip. நாட்டியக் கலைமணி (University of Jaffna),
Bharathakala Vithakar [N.C.O.M.S, (கொக்குவில் கலாபவன மாணவியும்)] &
Over 20 Years experienced Teacher in Bharathanatiyam
Former Dance Teacher Jaffna Uduppiddy Girls' College,
Best Dance Choreographer



Teaching for Exams, Programs, Arangetram

Location
Scarborough, Markham, Stouffville, Ajax

416-278-5345, 416-754-9047

# New Highrise Condo

# Project in Colombo




## Designed & Built by SANKEN

24 Staple St. Colombo-2, Sri Lanka

## For More info. Call: Nani Pradeepan -Sales Rep.

## 416.721.9395/ 416.321.6969

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HomeLife Higher Standards

## HomeLife / GTA Realty Inc. *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON.

*Independently Owned & Operated

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for 1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply

MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca

